தினபூமி
thinaboomi.com
பூமி: 31 சுற்று: 207 ஆனி 18
Regd. No.TRY/050/2023-2025 RNI Regn. No.61511/94
திருச்சி, புதன், ஜூலை 02, 2025
சென்னை · மதுரை · திருச்சி · கோவை · நெல்லை · சேலம் · வேலூர் · புதுச்சேரி
பக்கம் 8 ₹ 3.00



## தொலைபேசி அழைப்பு கசிவு: தாய்லாந்து பிரதமர் ஷினவத்ராவை இடைநீக்கம் செய்தது நீதிமன்றம்

...2-ம் பக்கம்

## தெலங்கானா ரசாயன ஆலை விபத்து உயிரிழப்பு 44 ஆனது: இழப்பீடு வழங்க உத்தரவு

...3-ம் பக்கம்

## பதிலடி கொடுக்குமா இந்தியா? இங்கிலாந்துக்கு எதிரான 2-வது டெஸ்ட் இன்று தொடக்கம்

...6-ம் பக்கம்







சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நேற்று நடைபெற்ற "நான் முதல்வன்" மூன்றாண்டு வெற்றி விழா நிகழ்ச்சியில் "வெற்றி நிச்சயம்" திட்டத்தினை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச்செயலாளர் பிரதீப்யாதவ், உயர்கல்வித்துறை செயலாளர் பொ.சங்கர், மேலாண்மை இயக்குநர் கிராந்திகுமார் பாடி கலந்து கொண்டனர்.

### காவலர்களின் செயல் மன்னிக்க முடியாதது: திருப்புவனம் இளைஞர் மரண வழக்கை

# சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றி முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு

### விசாரணை குறித்து சந்தேகம் எழக்கூடாது என்பதற்காக மாற்றப்பட்டதாக விளக்கம்

சென்னை, ஜூலை 02-

**சிவகங்கை மாவட்டம் மடப்புரம் கோவிலில் காவலாளியாக பணியாற்றி வந்த அஜித்குமார் என்ற 28 வயது இளைஞர் போலீஸ் விசாரணையின் போது உயிரிழந்தார். தமிழகம் முழுவதும் இச்சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இது தொடர்பாக 5 போலீசார் கைது செய்யப்பட்டு உள்ளனர். ஐகோர்ட் மதுரை கிளையிலும் வழக்கு தொடரப்பட்டு உள்ளது.**

**முதல்வர் ஆறுதல்....**

இதற்கிடையே, அஜித்குமாரின் குடும்பத்தினரை அமைச்சர் பெரிய கருப்பன் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். அப்போது, முதல்வர் மு.க. ஸ்டாலின் பெரிய கருப்பன் மொபைல்போன் மூலம் அஜித்குமார் தாயார் மற்றும் சகோதரருக்கு ஆறுதல் தெரிவித்தார். இந்த நிலையில், திருப்புவனம் இளைஞர் அஜித்குமார் காவல்துறை விசாரணையின் போது மரணம் அடைந்த வழக்கின் விசாரணையை சிபிஐக்கு மாற்றி முதல்வர் முக ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

**முழு ஒத்துழைப்பு...**

விசாரணைக்கு தமிழக அரசு முழு ஒத்துழைப்பு அளிக்கும் என்றும் மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார். இது யாராலும் நியாயப்படுத்த முடியாத செயல் எனவும் முதல்வர் கூறியுள்ளார். காவல்துறையைச் சேர்ந்த 5 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளதால், எந்தவித சந்தேகமும் எழுந்துவிடக் கூடாது என்பதைக் கருத்தில் கொண்டு சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

**முதல்வர் பதிவு...**

இது தொடர்பாக தனது எக்ஸ் தளத்தில் முதல்வர் முக ஸ்டாலின் பதிவிட்டுள்ளதாவது:- திருப்புவனம் இளைஞர் காவல் நிலைய மரண வழக்கின் விசாரணை குறித்து எந்தவிதமான ஐயப்பாடும் எழுப்பப்படக்கூடாது என்பதைக் கருத்தில் கொண்டு, இந்த வழக்கை சி.பி.ஐ.க்கு மாற்றிடுமாறு நான் உத்தரவிட்டுள்ளேன். சி.பி.ஐ. விசாரணைக்குத் தமிழ்நாடு அரசு முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என்று பதிவிட்டுள்ளார்.

### படித்த வேலையில்லாத இளைஞர்களுக்காக

# வெற்றி நிச்சயம் திட்டத்தை முதல்வர் துவக்கி வைத்தார்

### ரூ.12 ஆயிரம் வரை ஊக்கத்தொகை வழங்க ஏற்பாடு

சென்னை, ஜூலை 01-

**சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற "நான் முதல்வன்" திட்டத்தின் மூன்றாண்டு வெற்றி விழாவில் உலகத் தரம் வாய்ந்த முன்னணி பயிற்சி நிறுவனங்கள் மற்றும் தொழில்துறை நிறுவனங்களோடு இணைந்து, தமிழ்நாடு முழுவதும் இருக்கும் 18 முதல் 35 வயதுள்ள படித்த வேலையில்லாத இளைஞர்கள் படிப்பை பாதியிலேயே நிறுத்தியவர்களை கண்டறிந்து, அவர்களுக்கு குறுகிய கால திறன் பயிற்சிகள் வழங்கும் வெற்றி நிச்சயம் திட்டத்தை நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் துவக்கி வைத்தார். மேலும் ரூ.12,000 ஊக்கத்தொகையும் வழங்கினார்.**

இதனைத் தொடர்ந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார். அவர் பேசுகையில், வெற்றி, இதை நோக்கிதான் வாழ்க்கையில் எல்லோரும் உழைக்கிறோம். அப்படி வெற்றி மாணவர்களை உருவாக்கக்கூடிய ஒரு வெற்றி திட்டத்திற்கான உண்மையான சந்திப்பு தான் இந்த வெற்றி விழா. அதுமட்டுமல்ல, ''வெற்றி நிச்சயம்'' என்று மற்றொரு புதிய முயற்சிக்கான தொடக்க விழாவும் கூட.

கடந்த ஆண்டு தில்லியில், நடந்த இந்தியத் திறன் போட்டியில் நம்முடைய தமிழ்நாட்டு மாணவர்கள் 87 பேர் - 61 பிரிவுகளில் கலந்துகொண்டு, 6 தங்கம் - 8 வெள்ளி - 9 வெண்கலம் - 17 சிறப்பு பதக்கங்கள் என்று 40 பதக்கங்களை வென்று, இந்திய அளவில் மூன்றாவது இடத்தை பிடித்தார்கள். அடுத்த ஆண்டு ஷாங்காய் நகரில் 'உலகத் திறன் போட்டிகள்' நடைபெறப்போகிறது.

அதில் கலந்துகொள்ளும் போட்டியாளர்களை தேர்ந்தெடுப்பதற்கான 'தமிழ்நாடு திறன் போட்டிகள் - 2025' பதிவுகள் இன்றைக்கு (நேற்று) தொடங்குகிறது. நான் முதல்வன் தளத்தில் பதிவுசெய்து, இந்தப் போட்டியில் வெற்றி பெற உங்களை வாழ்த்துகிறேன். இந்த வெற்றிகளுக்கான அடித்தளத்தை பள்ளிகளிலேயே நீங்கள் அமைக்க வேண்டும் என்றுதான் பள்ளி மாணவர்களின் அறிவாற்றலைக் கண்டறிந்து மெருகேற்றும் நான் முதல்வன் ஒலிம்பியாட் திட்டம் - பள்ளி மாணவர்களின் உயர்கல்விக்கு வழிகாட்டும் கல்லூரிக் கனவுத் திட்டம் - சமூக – பொருளாதார காரணங்களால் பள்ளிக் கல்விக்கு மேல் படிக்க முடியாத மாணவர்களின் உயர்கல்வியை உறுதிசெய்ய உயர்வுக்குப்படி திட்டம், கிராமப்புற மாணவர்களுக்கு திறன் பயிற்சி வழங்க சிகரம் தொடு திட்டம், கல்லூரிக்கு செல்லும் அரசுப்பள்ளி மாணவ – மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் – இப்படி பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

அந்த வரிசையில்தான், இன்றைக்கு (நேற்று), 'வெற்றி நிச்சயம்' திட்டத்தையும் தொடங்கி வைத்திருக்கிறேன். இந்த திட்டத்தைப் பற்றி சொல்ல வேண்டும் என்றால், உலகத்தரம் வாய்ந்த முன்னணி பயிற்சி நிறுவனங்கள் மற்றும் தொழில் துறை நிறுவனங்களோடு இணைந்து, தமிழ்நாடு முழுவதும் இருக்கும் 18 முதல் 35 வயதுள்ள படித்த வேலையில்லாத இளைஞர்கள் படிப்பை பாதியிலேயே நிறுத்தியவர்களை கண்டறிந்து, அவர்களுக்கு குறுகிய கால திறன் பயிற்சிகள் வழங்க இருக்கிறது.

இதற்கான பயிற்சித் தொகையையும் நம்முடைய திராவிட மாடல் அரசே ஏற்க இருக்கிறது. மாற்றுத்திறனாளிகள், பழங்குடியினர், இலங்கைத் தமிழர்கள், மீனவ இளைஞர்கள், சிறுபான்மையினர், நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு இளைஞர்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்கள் என்று சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய வகுப்பினர்கள் அனைவருக்கும் அரசின் நலத்திட்ட பயனாளிகளின் குடும்ப உறுப்பினர்கள் வழியாக கண்டறிந்து இந்தத் திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்பட்டு, 12 ஆயிரம் ரூபாய் வரை ஊக்கத்தொகையாக வழங்கப்படும்.

அதுமட்டுமல்ல, தொலைதூர மாவட்டங்களிலிருந்து, பயிற்சி பெற விரும்பும் மாணவர்களுக்கு, உணவுடன் கூடிய இருப்பிட வசதியும்,

(கடைசி பக்கம் பார்க்க)

### சாத்தூர் பட்டாசு ஆலை வெடி விபத்து:

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.4 லட்சம் நிவாரணம் அறிவிப்பு

சென்னை, ஜூலை 02-

**விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், சின்னக்காமன்பட்டி கிராமத்திலுள்ள தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 4 லட்சம் ரூபாய் வழங்கிட முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.**

இது குறித்து வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில், "விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், சின்னக்காமன்பட்டி கிராமத்தில் இயங்கிவரும் தனியாருக்குச் சொந்தமான பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் சிவகாசி வட்டம், மீனம்பட்டியைச் சேர்ந்த மகாலிங்கம், அனுப்பன்குளத்தைச் சேர்ந்த செல்லப்பாண்டியன், மத்திய சேனையைச் சேர்ந்த லட்சுமி, விருதுநகர் வட்டம், ஓ.கோவில்பட்டியைச் சேர்ந்த ராமமூர்த்தி, சேர்வைக்காரன்பட்டியைச் சேர்ந்த ராமஜெயம் மற்றும் சூலக்கரையை சேர்ந்த வைரமணி ஆகிய 6 நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து சிவகாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சை வரும் லிங்குசாமி, மணிகண்டன், கருப்பசாமி, முருகலட்சுமி மற்றும் மதுரை அரசு இராசாசி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் அழகுராஜா ஆகிய ஐந்து நபர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா நான்கு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், லேசான காயமடைந்து மருத்துவனையில் சிகிச்சை பெற்று வருபவருக்கு ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்." இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### திருப்புவனம் இளைஞர் மரண வழக்கு:

# மதுரை மாவட்ட நீதிபதி விசாரிக்க உத்தரவு

### 8-ம் தேதி விசாரணை அறிக்கை தாக்கல் செய்யவும் அறிவுறுத்தல்

மதுரை, ஜூலை 02-

**திருப்புவனம் இளைஞர் லாக்அப் மரண வழக்கை மதுரை மாவட்ட நீதிபதி விசாரிக்க ஐகோர்ட் மதுரை கிளை உத்தரவிட்டுள்ளது. மேலும், இதுதொடர்பான விசாரணை அறிக்கையை வரும் 8-ம் தேதி தாக்கல் செய்ய வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.**

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே உள்ள மடப்புரத்தைச் சேர்ந்த இளைஞர் லாக் அப் மரண வழக்கில் சில சாட்சிகள் அழிக்கப்பட்டுள்ளதாகவும், விசாரணை அலுவலர் சாட்சியங்களை முறையாக சேகரிக்கவில்லை என்று மதுரை ஐகோர்ட் கிளை நீதிபதிகள் அதிருப்தி தெரிவித்த நிலையில் இளைஞர் லாக் அப் மரண வழக்கை மதுரை மாவட்ட நீதிபதி விசாரிக்க உத்தரவிட்டனர்.

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே உள்ள மடப்புரத்தைச் சேர்ந்தவர் அஜித்குமார் (27). அங்குள்ள பத்ரகாளியம்மன் கோவிலில் தனியார் நிறுவன ஒப்பந்த காவலாளியாக பணிபுரிந்தார். இவரை ஜூன் 27-ம் தேதி திருட்டு வழக்கு தொடர்பாக மானாமதுரை உட்கோட்ட தனிப்படை போலீஸார் அழைத்துச் சென்றனர். போலீஸார் தாக்கியதில் ஜூன் 28-ம் தேதி அஜித்குமார் உயிரிழந்தார்.

இதனிடையே இச்சம்பவம் குறித்து திருப்புவனம் போலீஸார் பி.என்.எஸ்.எஸ். 190 (2) (ஏ) பிரிவின் கீழ் வழக்குப் பதிந்து நீதித்துறை விசாரணைக்கு அனுப்பப்பட்டது. இதனிடையே தனிப்படை காவலர்கள் பிரபு, கண்ணன், சங்கரமணிகண்டன், ராஜா, ஆனந்த், ராமச்சந்திரன் ஆகிய 6 பேரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆஷிஷ் ராவத் பணியிடை நீக்கம் செய்தார். இளைஞர் அஜித்குமார் கொலை வழக்கு தொடர்பாக ஐகோர்ட் மதுரைக்கிளையில் விசாரணை நடைபெற்று வருகிறது. இந்த வழக்கு விசாரணையின் போது பல்வேறு காட்டமான கேள்விகளை நீதிபதிகள் எழுப்பினர்.

இந்த நிலையில், அஜித்குமார் கொலை வழக்கில் மதுரை மாவட்ட நீதிபதி விசாரிக்க வேண்டும் எனவும் வழக்கில் தொடர்புடைய அனைத்து சி.சி.டி.வி .காட்சிகளையும் பாதுகாக்க வேண்டும். எந்த மாற்றமும் செய்யக் கூடாது என்று நீதிமன்றம் தெரிவித்துள்ளது. மதுரை மாவட்ட நீதிபதி ஜான் சுந்தர்லால் சுரேஷ் விசாரணை செய்ய வேண்டும் எனவும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. விசாரணை அறிக்கையை 8-ம் தேதி தாக்கல் செய்ய வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

### இன்று முதல் பிரேசில், கானா உள்ளிட்ட

# 5 நாடுகளுக்கு பிரதமர் மோடி பயணம்

புதுடெல்லி, ஜூலை 02-

**பிரதமர் மோடி இன்று முதல் 9-ம் தேதி வரையிலான 8 நாட்களில் பிரேசில், கானா உள்ளிட்ட 5 நாடுகளுக்கு சுற்றுப்பயணம் செய்ய உள்ளார்.**

கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத வகையில், பிரதமரின் இந்த நீண்டகால பயணம் அமையவுள்ளது. இதன்படி அவர் 2 கண்டங்களில் உள்ள கானா, டிரினிடாட் அண்டு டுபாகோ, அர்ஜென்டினா, பிரேசில் மற்றும் நமீபியா ஆகிய 5 நாடுகளுக்கு செல்கிறார். இந்த பயணத்தில் பிரேசிலில் நடைபெறும் பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் அவர் பங்கேற்கிறார். அதனுடன் உலகளாவிய தெற்கு பகுதியில் பல்வேறு முக்கிய நாடுகளுடனான இந்தியாவின் நட்புறவை விரிவாக்கம் செய்யும் பேச்சுவார்த்தையிலும் ஈடுபடுகிறார்.

பிரதமர் 5 நாடுகளுக்கு செல்வது இது 2-வது முறையாகும். இதற்கு முன்பு 2016-ம் ஆண்டில் அமெரிக்கா, மெக்சிகோ, சுவிட்சர்லாந்து, ஆப்கானிஸ்தான் மற்றும் கத்தார் ஆகிய 5 நாடுகளுக்கு அவர் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். இதன்படி, கானாவில் ஜூலை 2 மற்றும் 3 ஆகிய நாட்களில் பயணம் செய்வார். 30 ஆண்டுகளில் இந்தியா பிரதமர் ஒருவரின் கானாவுக்கான முதல் பயணம் இதுவாக அமையும். பிரதமர் மோடிக்கும் கானாவுக்கான முதல் பயணம் இதுவாகும்.

தொடர்ந்து, டிரினிடாட் அண்டு டுபாகோ நாட்டுக்கு 2 நாட்கள் (ஜூலை 3 மற்றும் 4) சுற்றுப்பயணம் செய்கிறார். அந்நாட்டின் நாடாளுமன்றத்தில் நடைபெறும் கூட்டுக் கூட்டத்தில் அவர் உரையாற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனை தொடர்ந்து, அர்ஜென்டினாவில் 2 நாட்கள் (ஜூலை 4 மற்றும் 5) சுற்றுப்பயணம் செய்வார். இதன்பின்னர், 3 நாட்கள் (ஜூலை 5 முதல் 8 வரை) பிரேசிலில் பயணம் மேற்கொள்வார். அந்நாட்டு ஜனாதிபதி லுலா டா சில்வா அழைப்பின் பேரில் செல்லும் பிரதமர், அந்நாட்டில் நடைபெறும் 17-வது பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் கலந்து கொள்கிறார்.

இந்த உச்சி மாநாட்டின் ஒரு பகுதியாக பல்வேறு இருதரப்பு கூட்டங்களையும் அவர் நடத்துவார். இறுதியாக பிரேசிலில் இருந்து நமீபியாவுக்கு அவர் செல்கிறார். அப்போது, அந்நாட்டு ஜனாதிபதி நந்தி தைத்வாவை சந்தித்து இருதரப்பு உறவுகளை பற்றி பேச்சுவார்த்தை நடத்துவார். நமீபியாவின் நாடாளுமன்றத்தில் நடைபெறும் கூட்டுக் கூட்டத்தில் அவர் உரையாற்றுவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

### இலங்கை கடற்படை மீண்டும் அட்டூழியம்:

# தமிழக மீனவர்கள் 7 பேர் கைது

இராமேசுவரம், ஜூலை 02-

**தமிழக மீனவர்கள் 7 பேரை இலங்கை கடற்படை கைது செய்துள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.**

மன்னார் வடக்கு கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கூறி ராமேஸ்வரத்தை சேர்ந்த 7 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர். மேலும் ஒரு படகையும் பறிமுதல் செய்துள்ளனர். கடந்த 2 நாட்களில் 15 மீனவர்கள் மற்றும் 2 படகுகளை இலங்கை கடற்படை சிறைபிடித்துள்ள சம்பவம் மீனவ மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இதனை தடுக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தமிழகத்தில் 7-ம் தேதி வரை மிதமான மழைக்கு வாய்ப்பு

சென்னை, ஜூலை 02-


**தமிழகத்தில் 7-ம் தேதி வரை மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.**

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக இன்று முதல் 7-ம் தேதி வரை தமிழகத்தில் ஒரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். இதனிடையே இன்று தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரு சில இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை 2-3 டிகிரி செல்சியஸ் இயல்பை விட அதிகமாக இருக்கக்கூடும். அதிக வெப்பநிலையும், அதிக ஈரப்பதமும், இருக்கும் நிலையில், தமிழகத்தில் ஓரிரு பகுதிகளில் அசௌகரியம் ஏற்படலாம்.

இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 37-38 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 28-29 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.


**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| 90.83 | 24.75 |
| புள்ளிகள் 83,697.29 | புள்ளிகள் 25,541.80 |



**தங்கம்**
1 சவரன் ₹72,160
1 கிராம் ₹9,020



**வெள்ளி**
1 கிலோ ₹120,000
1 கிராம் ₹120.00

**டாலர்** ₹85.58

**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24



### தொலைபேசி அழைப்பு கசிவு:

## தாய்லாந்து பிரதமர் ஷினவத்ராவை இடைநீக்கம் செய்தது நீதிமன்றம்

**பேங்காக், ஜூலை 02-**

கம்போடிய செனட் தலைவர் ஹன் சென் உடனான தொலைபேசி உரையாடல் கசிந்த விவகாரம் தொடர்பாக தாய்லாந்து பிரதமர் பேடோங்டார்ன் ஷினவத்ராவை அந்நாட்டு நீதிமன்றம் இடைநீக்கம் செய்து உத்தரவிட்டுள்ளது.

அண்டைநாடானகம்போடியா எல்லையில் நிலவும் பதட்டங்களைத் தணிக்கும் நோக்கில், அந்நாட்டின் முன்னாள் பிரதமரும் கம்போடிய செனட் தலைவருமான ஹன் சென் உடன், தாய்லாந்து பிரதமர் பேடோங்டார்ன் ஷினவத்ரா தொலைபேசியில் உரையாடினார். அப்போது, ஹன் சென்னை சமாதானப்படுத்தும் நோக்கில், தங்கள் நாட்டு ராணுவத் தளபதி குறித்து விமர்சித்துப் பேசியுள்ளார். இந்த உரையாடல் அடங்கிய ஆடியோ கசிந்ததை அடுத்து, தாய்லாந்து



பிரதமருக்கு எதிராக தொடர் போராட்டங்கள் நடைபெற்றன. அவர் பதவி விலக வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வந்தன.

இந்த விவகாரம் தொடர்பாக விசாரித்த தாய்லாந்தின் அரசியலமைப்பு நீதிமன்றம், பிரதமர் பேடோங்டார்ன் ஷினவத்ரா நெறிமுறைகளை மீறியதாகக் குற்றம் சாட்டியது. இந்த வழக்கு தொடர்ந்து விசாரிக்கப்பட இருப்பதால், பிரதமரை பதவியில் இருந்து இடைநீக்கம் செய்தும் அரசியலமைப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நீதிமன்றத்தின் தீர்ப்பு குறித்துப் பேசிய பேடோங்டார்ன் ஷினவத்ரா, எனது பணி தடைபடுவதை நான் விரும்பவில்லை. இருந்தாலும், நீதிமன்ற உத்தரவை ஏற்றுக்கொள்கிறேன். இந்த உத்தரவால் நான் கவலைப்படுகிறேனா என்று நீங்கள் என்னிடம் கேட்டால், ஆம் நான் கவலைப்படுகிறேன் என்று தெரிவித்தார்.

ஆடியோ கசிவை அடுத்து, தாய்லாந்தின் கூட்டணி அரசாங்கத்தில் இருந்து ஒரு பெரிய கட்சியான பூம்ஜைதாய் கட்சி வெளியேறியது. இதையடுத்து, தாய்லாந்து மன்னர் மகா வஜிரலோங்கோர்ன், புதிய அமைச்சரவை உறுப்பினர்களின் நியமனங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளார்.

### அரசின் மானியம் இல்லாவிட்டால்...

## எலான் மஸ்க்கை எச்சரித்த அதிபர் டொனால்ட் ட்ரம்ப்

**வாஷிங்டன், ஜூலை 02-**

அரசின் மானியங்கள் இல்லாவிட்டால் டெஸ்லா சி.இ.ஓ., எலான் மஸ்க், அநேகமாக தென்னாப்பிரிக்கா திரும்பி விடுவார் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கொண்டு வந்திருக்கும் வரி மற்றும் செலவு மசோதாவை உலகின் பெரும் பணக்காரரான எலான் மஸ்க் ஏற்றுக் கொள்ளவில்லை. தொடர்ந்து அந்த மசோதாவுக்கு தமது எதிர்ப்பை அவர் பதிவு செய்து வருகிறார். இந்த மசோதா அமெரிக்க செனட் சபையில் நிறைவேற்றப்பட்டு உள்ளது. ஆனால் இதை எலான் மஸ்க் எதிர்த்துள்ளார். இது குறித்து தமது அதிருப்தியை வெளியிட்டு இருந்த அவர், வரலாற்றில் மிக பெரிய கடன் அதிகரிப்புக்கு இந்த மசோதா வழி வகுக்கும்.

பைத்தியக்காரத்தனமான இந்த மசோதா நிறைவேறினால் புதிய கட்சியை தொடங்குவேன் என்று மிரட்டல் விடுத்தார். இந்நிலையில் மஸ்கின் மிரட்டலுக்கு அதிபர் ட்ரம்ப் பதிலடி கொடுத்துள்ளார். இது குறித்து அவர் தமது சமூக வலைதள பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் அவர், மானியங்கள் நிறுத்தப்பட்டால் எலான் மஸ்க் தென்னாப்பிரிக்காவுக்கு திரும்புவார் என்றார்.

ட்ரம்ப் மேலும் கூறி இருப்பதாவது; அமெரிக்க அரசிடம் இருந்து மானியங்கள் இல்லாவிட்டால் டெஸ்லா தலைமை அதிகாரி அநேகமாக தென்னாப்பிரிக்காவே திரும்புவார். நான் அதிபராக என்னை வலுவாக ஆதரித்ததற்கு முன்பே மின்சார வாகன ஆணையை கடுமையாக எதிர்த்தவன். இதை மஸ்க் நன்கு அறிவார். இனி ராக்கெட் ஏவுதல்கள், செயற்கைக்கோள்கள் அல்லது மின்சார கார்கள் உற்பத்தி இருக்காது. மின்சார கார்கள் பரவாயில்லை. ஆனால் எல்லாரும் ஒன்றாவது வைத்து இருக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தக்கூடாது. இவ்வாறு அதில் ட்ரம்ப் கூறி உள்ளார்.



தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற "நான் முதல்வன்" மூன்றாண்டு வெற்றி விழா மற்றும் "வெற்றி நிச்சயம்" திட்ட தொடக்க விழாவில், மாணவர்களின் புதிய கண்டுபிடிப்புகள், கண்டறிதல்கள் மற்றும் புதிய தொழில்நுட்ப உருவாக்கங்களைப் பிரதிபலிக்கும் "நான் முதல்வன் நிரல் திருவிழா" கண்காட்சியினை பார்வையிட்டார். உடன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.


## இந்தியா - அமெரிக்கா இடையே விரைவில் வர்த்தக ஒப்பந்தம்

### வெள்ளை மாளிகை அதிகாரப்பூர்வ தகவல்

**வாஷிங்டன், ஜூலை 02-**

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், பிரதமர் நரேந்திர மோடியுடன் நல்ல உறவைக் கொண்டுள்ளார் என்றும் இந்தியா - அமெரிக்கா இடையே விரைவில் வர்த்தக ஒப்பந்தம் குறித்த அறிவிப்பு வெளியாகும் என்றும் வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

வெள்ளை மாளிகை பத்திரிகை செயலாளர் கரோலின் லீவிட், செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது, இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் சீனாவின் செல்வாக்கை அமெரிக்கா எவ்வாறு கருதுகிறது என்ற கேள்விக்கு பதிலளித்த கரோலின் லீவிட், "ஆசிய பசிபிக் பகுதியில் இந்தியா மிகவும் முக்கியமான நட்பு நாடாக உள்ளது. அதிபர் டொனால்ட் ட்ரம்ப், பிரதமர் நரேந்திர மோடியுடன் மிகச் சிறந்த உறவைக்



கொண்டுள்ளார். அதை அவர் தொடர்ந்து வைத்திருப்பார்." என்று தெரிவித்தார்.

இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான வர்த்தக ஒப்பந்தம் குறித்த மற்றொரு கேள்விக்கு பதிலளித்த வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர், "அமெரிக்காவும் இந்தியாவும் ஒரு வர்த்தக ஒப்பந்தத்திற்கு மிக நெருக்கமாக உள்ளன என்று அதிபர் கடந்த வாரம் கூறினார். அது உண்மைதான். நான் எங்கள் வர்த்தக செயலாளரிடம் இது குறித்து இப்போதுதான் பேசினேன். அவர் அதிபருடன் ஓவல் அலுவலகத்தில் இருந்தார். அவர்கள் இந்த ஒப்பந்தங்களை இறுதி செய்யும் பணியில் இருக்கிறார்கள். இது தொடர்பான அறிவிப்பை அதிபரிடம் இருந்தும், அவரது வர்த்தகக் குழுவிடமிருந்தும் மிக விரைவில் நீங்கள் கேட்பீர்கள்." என்று தெரிவித்தார்.

இந்தியா - அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்வதற்கான காலக்கெடு ஜூலை 9 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இன்னும் 8 நாட்கள் மட்டுமே மீதமுள்ள நிலையில், இரு தரப்பினரும் வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்ய வேலை செய்து வருகின்றனர்.

### காசாவில் உணவுக்காக காத்திருந்தவர்கள் மீது

## இஸ்ரேல் தாக்குதல்: 74 பொதுமக்கள் பலி

**காசாமுனை, ஜூலை 02-**

பாலஸ்தீனத்தின் காசாமுனை மீதான இஸ்ரேலின் போர் 2-வது ஆண்டை நெருங்கி உள்ளது. இதில் 56 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இதற்கிடையே உணவுக்காக காத்திருக்கும் காசா மக்கள் மீது இஸ்ரேல் ராணுவ வீரர்கள் துப்பாக்கி சூடு நடத்தி வருகிறார்கள். இதில் பலர் உயிரிழந்தனர்.

இந்நிலையில் காசா நகரில் உள்ள அல்-பக்கா கபே உணவகத்தில் உணவுக்காக பெண்கள், சிறுவர்கள் உள்பட பலர் காத்திருந்தனர். அப்போது அங்கு இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்தியது. இதில் 30 பேர் உயிரிழந்தனர். மேலும் உணவுக்காக காத்திருந்தவர்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தியதில் 23 பேர் பலியானார்கள்.

அதேபோல் தெற்கு காசாவில் உணவு தேடி வந்த 11 பேரை இஸ்ரேலிய படைகள் கொன்றதாக காசா சுகாதார அமைச்சகம் தெரிவித்தது. இந்த தாக்குதல்களில் மொத்தம் 74 பேர் பலியானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மதுரை, பந்தல்குடி கால்வாயை சீரமைக்க ரூ.86 கோடியை ஒதுக்கீடு செய்ய வேண்டும்

### மாநகராட்சிக்கு முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ வலியுறுத்தல்

**மதுரை, ஜூலை 02-**

பந்தல்குடி கால்வாயை சீரமைக்க ரூ.86 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்த நிதியை இன்னமும் மதுரை மாநகராட்சி மூலம் ஒதுக்கப்படவில்லை என்று முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ குற்றஞ்சாட்டியுள்ளார்.

மதுரை மாநகராட்சி வரி விவகாரம் தொடர்பாக முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. மதுரை மாநகராட்சி ஆணையாளர் சித்ராவிஜயனிடம் நேரில் சென்று புகார் புகார் மனு அளித்தார். அவருடன் மாமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சோலைராஜா, மாவட்ட கழக நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார், ஜெ.இஷிகாநாச்சியார், கு. திரவியம், எம்.எஸ். கே.மல்லன், வி.பி.ஆர்.செல்வகுமார், சக்திவிநாயகர் பாண்டியன், ஏ.பார்த்திபன், வக்கீல் தமிழ்செல்வன், ஓட்டுரணி திருமுருகன், கவிச்செல்வம் தங்கம், விநாயகமூர்த்தி, நாட்டாமை ஜெயக்குமார், கன்னித்தேவன், வக்கீல் முருகராஜ், மாமன்ற உறுப்பினர்கள் சண்முகவள்ளி, ஜெ.மாணிக்கம், ரூபிணி குமார், வசந்தாதேவி, எஸ்.எம்.டி.ரவி,



பைக்கரா கருப்பசாமி, முத்துமாரி ஜெயக்குமார்,, கிருஷ்ணமூர்த்திஸ நாகஜோதி சித்தன், ஏ.மாயத்தேவன், பி.கே.எம். மாரிமுத்து, சொக்காயி, கவிதா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

பின்னர் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. நிருபர்களிடம் கூறியதாவது., மதுரை மாநகராட்சியில் 100 வார்டுகளில் குடியிருப்புகள், வணிக வளாகங்கள், கடைகள், தனியார் மருத்துவமனைகள், உணவகங்கள், தங்கும் விடுதிகள், தனியார் அமைப்புகளுக்கான அலுவலகங்கள் என பல்வேறு வகையான மூன்று லட்சத்து 60 ஆயிரம் கட்டிடங்கள் உள்ளது. இதில் வணிக கட்டிடங்களுக்கு வணிகவரி கட்டிணத்தை நிர்ணயச் செய்யாமல், குடியிருப்பு கட்டிணத்தை குறைவாக நிர்ணயம் செய்து வரியில் முறைகேடு செய்யப்பட்டது. 2024-ம் ஆண்டில் அ.தி.மு.க. மாமன்ற உறுப்பினர்கள் கண்டுபிடித்து இதற்காக மாநகராட்சி கூட்டத்தில் சொத்து வரியில் முறையீடு நடந்துள்ளது என்று குரல் எழுப்பினர்.

இதனைத் தொடர்ந்து அப்போது ஆணையாளராக இருந்த தினேஷ் குமார் இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார். பிறகு காவல்துறை வழக்கு பதிவு செய்யப்பட்டு இதில் 8 பேரை கைது செய்துள்ளனர். இதற்கிடையே அனைத்து வணிக வளாக கட்டிடங்கள், மருத்துவமனைகள், மால்கள், தியேட்டர்கள், கடைகள் உள்ளிட்ட வணிக கட்டிடங்கள் அனைத்தையும் மறு ஆய்வு செய்து சொத்து வரியை புதியதாக நிர்ணயம் செய்யப்பட வேண்டும். ஏற்கனவே மதுரை மாநகராட்சி நிதி நெருக்கடியில் உள்ளது. அதனால் வளர்ச்சி திட்டங்கள் எதையும் நிறைவேற்றப்படவில்லை. பந்தல்குடி கால்வை சீரமைக்க ரூ.86 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்த நிதியை இன்னமும் மதுரை மாநகராட்சி மூலம் ஒதுக்கப்படவில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

### பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவருவது தவிர


## வேறு எந்த விஷயத்திலும் பாக்.குடன் பேச்சு இல்லை

### மத்திய அமைச்சர் ஜெய்சங்கர் திட்டவட்டம்

**நியூயார்க், ஜூலை 02-**

பயங்கரவாத அமைப்புகளை இந்தியா இனி விட்டு வைக்காது என்றும் பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவருவது தவிர வேறு எந்த விஷயத்திலும் பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடத்தாது என்றும் மத்திய வெளியுறவுத்துறை ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

நியூயார்க்கில் அமெரிக்க பத்திரிகைக்கு மத்திய வெளியுறவுத்துறை ஜெய்சங்கர் அளித்த பேட்டி: பஹல்காம் பயங்கரவாத தாக்குதல் பொருளாதார போர் நடவடிக்கை. காஷ்மீர் மாநிலத்தின் பொருளாதாரத்திற்கு முக்கிய ஆதாரமாக இருந்த சுற்றுலாவை அழிக்க வேண்டும் என்பதற்காக தாக்குதல் நடத்தப்பட்டது. கொல்லப்படுவதற்கு முன்பு மக்கள் தங்




கள் நம்பிக்கையை அடையாளம் காணுமாறு கேட்டுக் கொள்ளப் பட்டதால், மத வன்முறையைத் தூண்டுவதற்கும் இது நோக்கமாகக் கொண்டது.

பயங்கரவாதிகள் தண்டனையின்றி செயல்பட அனுமதிக்க முடியாது என்று நாங்கள் முடிவு செய்தோம். அவர்கள் எல்லையின் அந்தப் பக்கத்தில் இருக்கிறார்கள். பயங்கரவாத அமைப்புகளை இந்தியா இனி விட்டு வைக்காது.பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவருவது தவிர வேறு எந்த விஷயத்திலும் பாகிஸ்தானுடன் பேச்சு வார்த்தை நடத்தாது.

தேவைப்பட்டால் இந்தியா மீண்டும் தாக்கும். பயங்கரவாதிகளுக்கு தண்டனை விலக்கு அளிக்கப்படாது என்பதில் நாங்கள் மிகவும் தெளிவாக இருக்கிறோம். அவர்களை இனி மேல் பிரதிநிதிகளாகக் கையாள மாட்டோம். அவர்களுக்கு ஆதரவளிக்கும், நிதியளிக்கும், பல வழிகளில் ஊக்குவிக்கும் அரசாங்கத்தையும் விட்டுவிட மாட்டோம். இவ்வாறு ஜெய்சங்கர் கூறினார்.

**02-07-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** எல்லா வளமும் சேரும், தனவரவு கூடும். புதிய பந்தங்கள், திருமண உறவுகள் ஏற்படும். தனக்கென அழகிய வீடு அமையும். குடும்பத்தில் சுப காரியங்கள் நிறைவேறும்.

**ரிஷபம்:-** இன்று சுமாரான நாள். கல்வியில் மிகுந்த அக்கறை தேவை. மற்றவர்கள் குறை கூறாத வண்ணம் நடந்து கொள்வது நல்லது. துன்பம் வந்தாலும் சிரிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

**மிதுனம்:-** அன்னையின் உடல் நிலையில் சிறப்பு கவனம் தேவை. செயல்பாடுகளில் வரக்கூடிய தடை, தாமதங்கள் கண்டு துவண்டு விடாமல், தன்னம்பிக்கையுடன் செயல்பட்டால் வெற்றி நிச்சயம்.

**கடகம்:-** உடன் பிறப்புக்களின் முழு ஒத்துழைப்புக் கிடைக்கும். புதிய ஆடை, ஆபரணங்கள் சேரும். முகநூல் மூலம் புதிய நண்பர்களைப் பெறுவீர்கள். மனைவியின் உதவி பெற்று மகிழ்வீர்கள்.

**சிம்மம்:-** இன்று சுமாரான நாள். எதிர்பார்த்த தனலாபங்கள் இருக்காது. கண்ணில் பிரச்சனை எழலாம். வகுப்பில் கவனச் சிதறல்கள் ஏற்பட்டால் கல்வியில் தடைகள் ஏற்படலாம்.

**கன்னி:-** பணம் சம்பாதிக்கும் திறன் அதிகரிக்கும். வியாபாரிகள் புதிய யுக்திகளை கையாண்டு வாடிக்கையாளரை கவர்வர். வாக்கு வன்மையால் வளம் பெருகும். பயணங்கள் பயன் தரும்.

**துலாம்:-** சமாளிக்க முடியாத செலவுகள் ஏற்படும். உறவுகள் மீது தேவையற்ற வெறுப்பு ஏற்படும். சினம் தணிந்தால் சிக்கல்கள் தீரும். பாவையர் மூலம் பணவிரயம் ஏற்படும்.

**விருச்சிகம்:-** பணவரவு அதிகரித்து பரவசப்படும் நாள். மனம் விரும்பிய மங்கையின் அருகாமை மகிழ்ச்சி அளிக்கும். தம்பதிகள் பிரிவால் ஏற்பட்ட பிளவு சரியாக, இணைந்தே மகிழ்வர்.

**தனுசு:-** தன்னம்பிக்கை, தைரியம் எல்லாம் ஓங்கும் நாள். அனைத்து செயல்பாடுகளும் அனுகூலமாய் அமையும். திருப்திகரமான தீர்த்த யாத்திரைகள் மகிழ்வு தரும்.

**மகரம்:-** ஆடம்பர சாதனங்கள் வாங்கி மகிழ்வீர்கள். வெளியூர்ப் பயணங்கள் வெற்றிகரமாக அமையும். வாழ்க்கையில் புதிய பல முன்னேற்றங்கள் உருவாகும். தெய்வ பக்தியால் மனநிம்மதி கூடும்.

**கும்பம்:-** நேர்மையாக நடக்க வேண்டிய நாள். கணவன் மனைவியிடையே கருத்து வேறுபாடுகள் எழலாம். அதிகாரிகளிடம் பணிவாக நடந்தால் பணியில் சாதகமான சூழல் உருவாகும்.

**மீனம்:-** பாக்கிய விருத்தி ஏற்படும். சாதுர்யமான பேச்சால் அனைவரையும் கவர்ந்திடுவீர்கள். செல்வ நிலை சீராக உயரும். அரசுப் பணியாளர்களுக்கு பதவிவுயர்வு கிடைக்கும்.

## சென்னை உயர்நீதிமன்றத்தின் நேரடி கண்காணிப்பில் சிறப்பு விசாரணை

### ஆதவ் அர்ஜூனா வலியுறுத்தல்

**சென்னை, ஜூலை 02-**

அஜித்குமார் 'கஸ்டடி' மரணம் தொடர்பான வழக்கை, உயர்நீதிமன்றத்தின் நேரடிக் கண்காணிப்பில் சிறப்பு விசாரணைக் குழுவை அமைத்து, விரைந்து விசாரணை நடத்தி நீதியை நிலைநாட்ட வேண்டும் என ஆதவ் அர்ஜூனா கூறினார்.

தமிழக வெற்றிக் கழகம் தேர்தல் பிரச்சார மேலாண்மை பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜூனா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-,

சிவகங்கை மாவட்டம், திருப்புவனத்தில் உள்ள மடப்புரம் கோயிலில் காவலாளியாக இருந்த அஜித்குமார், காவல்துறை விசாரணையில் கொடூரமாகச் சித்ரவதை செய்யப்பட்டு மரணமடைந்த சம்பவம் ஒட்டுமொத்த தமிழகத்தையும் கொந்தளிக்க வைத்துள்ளது.

அஜித்குமாரின் காவல் மரணம் தொடர்பான வழக்கை கொலை வழக்காக மாற்றியுள்ள தமிழ்நாடு காவல்துறை, அதற்காக தயாரித்த எப்.ஐ.ஆர்-ல் "அஜித்குமார் காவல்துறைக் கட்டுப்பாட்டில் இருந்து இரண்டுமுறைத் தப்பிக்க முயன்றதாகவும், அதில், இரண்டாவது முறை தப்பிக்கும்போது தவறி விழுந்து, வலிப்பு ஏற்பட்டு மரணம் அடைந்தார்" என்றும் குறிப்பிட்டுள்ளது.

அஜித்குமாரின் பிரேதப் பரிசோதனை அறிக்கையில், "உடலில் 18 இடங்களில் கொடும் காயங்கள் இருந்தன எனத் தெளிவான பிறகும், இப்படி ஒரு பித்தலாட்டமான எப்.ஐ.ஆர்-யைத் தயார் செய்துள்ளது காவல்துறை. அதனால், அஜித்குமார் 'கஸ்டடி' மரணம் தொடர்பான வழக்கை, உயர்நீதிமன்றத்தின் நேரடிக் கண்காணிப்பில் சிறப்பு விசாரணைக் குழுவை அமைத்து, விரைந்து விசாரணை நடத்தி நீதியை நிலைநாட்ட வேண்டும்.

மகனை இழந்து வேதனையில் தவிக்கும் அஜித்குமாரின் தாயாருக்கும். அவருக்கு நீதி கிடைக்க வேண்டும் எனப் போராடும் பொதுமக்களுக்கும் எந்தச் சூழலிலும் தமிழக வெற்றிக் கழகம் உறுதுணையாய் நிற்கும்! போராடும்! என ஆதவ் அர்ஜூனா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## அரசு ஊழியர்களுக்கு திருமண முன்பணம் உயர்வு: அரசாணை

**சென்னை, ஜூலை 02-**

அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான திருமண முன்பணம் உயர்வு தொடர்பான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் தங்கள் பணிக் காலத்தில் தேவையின் அடிப்படையில் திருமண முன்பணம் வழங்கப்படும். அதன்படி, பெண் ஊழியர்களுக்கு ரூ. 10,000, ஆண்களுக்கு ரூ. 6,000 வழங்கப்பட்டு வந்தது. கடந்த ஏப்ரல் மாதம் சட்டப்பேரவையில் முதல்வர் மு.க. ஸ்டாலின், இந்நிலையில் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டார்.

அதில் அரசு அலுவலர்கள், ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் திருமண முன்பணம் உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவித்த நிலையில் அதுகுறித்த அரசாணை நேற்று வெளியிடப்பட்டுள்ளது. அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் பொதுவாக இனி ரூ. 5 லட்சம் திருமண முன்பணமாக வழங்கப்படும் என்று அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மீண்டும் உயர்ந்த தங்கம் விலை

**சென்னை, ஜூலை 02-**

சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை நேற்று (ஜூலை 1) பவுனுக்கு ரூ.840 என அதிரடி ஏற்றம் கண்டு விற்பனையானது.

சர்வதேச பொருளாதார சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு அடிப்படையில் இந்தியாவில் தங்கம் விலை நிர்ணயிக்கப்படுகிறது. அதோடு உலக நாடுகளின் வர்த்தக ரீதியான செயல்பாடும் தங்கத்தின் விலையில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அதன்படி, தங்கம் விலை உயர்ந்தும், குறைந்தும் வருகிறது.

கடந்த சில நாட்களாக தங்கம் விலை தொடர்ந்து குறைந்தது வந்தது. இதனால் ஜூன் 23 முதல் 30-ம் தேதி வரையிலான நாட்களில் பவுனுக்கு ரூ.2,560 என தங்கம் விலை குறைந்திருந்தது. இந்நிலையில், நேற்று (ஜூலை 1) தங்கம் விலை அதிரடி ஏற்றம் கண்டு விற்பனையானது.

சென்னையில் நேற்று 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.105 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.9,020-க்கு விற்பனையானது. அதேபோல பவுனுக்கு ரூ.840 உயர்ந்து, ஒரு பவுன் ரூ.72,160-க்கு விற்பனையானது. நேற்று முன்தினம் ஒரு பவுன் தங்கம் ரூ.71,320-க்கு விற்பனையானது குறிப்பிடத்தக்கது.



சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற நான் முதல்வன் மூன்றாண்டு வெற்றி விழா மற்றும் வெற்றிநிச்சயம் திட்ட தொடக்க விழாவில் நான் முதல்வன் கல்லூரி ஒருங்கிணைப்பாளர் மற்றும் வேலைவாய்ப்புத்திட்டத்திற்கான ஒருங்கிணைப்பாளர்கள் முதல்வர் மு.க.ஸ்டாலினுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர். உடன் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் சேகர்பாபு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப்யாதவ், உயர்கல்வித்துறை செயலாளர் சங்கர், மேலாண்மை இயக்குநர் கிராந்திகுமார்பாடி, இந்திய தொழில் கூட்டமைப்பின் தமிழ்நாடு யூனிட் தலைவர் உன்னி கிருஷ்ணன் உள்பட பலர் உள்ளனர்.

## பிறந்தநாளை முன்னிட்டு வெங்கையா நாயுடு, அகிலேஷுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து

**சென்னை, ஜூலை 02-**

முன்னாள் துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு, உத்தரபிரதேச முன்னாள் முதல்வர் அகிலேஷ் யாதவ் இருவருக்கும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்து எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள பதிவில், வெங்கையா நாயுடு அவர்களுக்கு பிறந்தநாள் (நேற்று) வாழ்த்துகள். உங்களுக்கு நல்ல ஆரோக்கியம், மகிழ்ச்சி மற்றும் தொடர்ச்சியான ஞானம் கிடைக்க வாழ்த்துகிறேன் என்று தெரிவித்துள்ளார். இதேபோல் உ.பி. முன்னாள் முதல்வர் அகிலேஷ் யாதவிற்கு வெளியிட்டுள்ள வாழ்த்து பதிவில், உத்தரபிரதேச முன்னாள் முதல்வர் அகிலேஷ் யாதவ் அவர்களுக்கு மனமார்ந்த பிறந்த நாள் வாழ்த்துகள். வி.பி.சிங் அவர்களின் மண்ணில் சமூகநீதியின் ஜோதியை முன்னெடுத்துச் சென்று, முற்போக்கான அரசியலுக்கு வழிவகுத்து, உங்கள் தந்தை முலாயம் சிங் அவர்களின் பெருமைமிக்க மரபில், பிற்போக்குத்தனமான சித்தாந்தங்களுக்கு எதிராக எப்போதும் வலுவாக நிற்க வாழ்த்துகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

# 10-வது ஆண்டில் டிஜிட்டல் இந்தியா; அதிகாரமளித்தலின் புதிய சகாப்தம்: பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம்

**புதுடில்லி, ஜூலை 02-**

டிஜிட்டல் இந்தியா திட்டம் தொடங்கி 10 ஆண்டுகள் ஆனதை நினைவு கூரும் வகையில், அதிகாரமளித்தலின் புதிய சகாப்தத்திற்கு வழிவகுத்த ஒரு பயணத்திற்கு நாம் சாட்சியாக நிற்கிறோம் என்று பிரதமர் மோடி பெருமிதத்துடன் கூறி உள்ளார்.

கடந்த 2015ம் ஆண்டு இதே நாளில் (ஜூலை 1) டிஜிட்டல் இந்தியா திட்டம் துவக்கப்பட்டது.

பிரதமர் மோடியால் துவங்கி வைக்கப்பட்ட இந்த திட்டத்தின் நோக்கம் என்பது. நாட்டை டிஜிட்டல் துறையில் ஆற்றல் மிக்க ஒன்றாகவும், அறிவுசார் சமூகமாகவும் மாற்ற வேண்டும் என்பதே ஆகும்.

10 ஆண்டுகள் நிறைவு பெற்றதை அடுத்து, இந்த நாள் வரலாற்றுச் சிறப்பு மிக்க நாள் என்று பிரதமர் மோடி பெருமிதத்துடன் கூறி உள்ளார்.

இதுகுறித்து அவர் கூறி உள்ளதாவது; நாம் கொண்டாடும் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நாள். பத்து ஆண்டுகளுக்கு முன்பு, நமது நாட்டை டிஜிட்டல் ரீதியாக அதிகாரம் பெற்ற மற்றும் தொழில்நுட்ப ரீதியாக முன்னேறிய சமூகமாக மாற்றுவதற்கான ஒரு முயற்சியாக டிஜிட்டல் இந்தியா தொடங்கியது. ஒரு தசாப்தத்திற்குப் பிறகு, எண்ணற்ற உயிர்களைத் தொட்டு, அதிகாரமளித்தலின் புதிய சகாப்தத்திற்கு வழிவகுத்த ஒரு பயணத்திற்கு நாம் சாட்சியாக நிற்கிறோம்.

140 கோடி இந்தியர்களின் கூட்டு உறுதியால் இயக்கப்படும் டிஜிட்டல் கட்டணங்களில் இந்தியா பல முன்னேற்றங்களை கண்டுள்ளது. சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற துறைகளும் இந்த முயற்சியால் பயனடைந்துள்ளன. இவ்வாறு பிரதமர் மோடி கூறி உள்ளார்.

## வணிக பயன்பாட்டுக்கான சிலிண்டர் விலை ரூ.58 குறைப்பு

**புதுடில்லி, ஜூலை 02-**

வணிக பயன்பாட்டுக்கான சமையல் காஸ் சிலிண்டர் விலை ரூ.58 குறைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய், டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் பெட்ரோல், டீசல் விலைகள் போன்று சமையல் காஸ் சிலிண்டர் விலையும் நிர்ணயம் செய்யப்படுகிறது. மாதம் தோறும் முதல் நாளில் இந்த விலைகள் நிர்ணயிக்கப்படுவது வழக்கம்.

அண்மைக்காலமாக காஸ் சிலிண்டர் விலை நிர்ணயத்தில் ஏற்ற, இறக்கங்கள் நிலவி வந்தன. இந் நிலையில், ஜூலை 1ம் தேதியான நேற்று காஸ் சிலிண்டர் விலைகளில் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டு உள்ளன. அதன்படி, வணிக பயன்பாட்டுக்கான காஸ் சிலிண்டர் விலையில் ரூ.58 குறைக்கப்பட்டு அறிவிப்பு வெளியாகி உள்ளது. பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் இந்த அறிவிப்பை வெளியிட்டு இருக்கின்றன. கடந்த மாதம் 19 கிலோ எடை கொண்ட வணிக பயன்பாடு காஸ் சிலிண்டர் விலை சென்னையில் ரூ.1881 ஆக இருந்தது. தற்போது அதில் ரூ.58 குறைக்கப்பட்டு ரூ. 1822 என விற்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. வீடுகளில் பயன்படுத்தப்படும் சிலிண்டர் விலை எந்த மாற்றமும் இல்லை. 14.2 எடை கொண்ட சிலிண்டர் ரூ.868.50 என்றே உள்ளது.

## தேசிய மருத்துவர்கள் தினம்: முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து

**சென்னை, ஜூலை 02-**

மருத்துவர்கள் போற்றுதலுக்குரியவர்கள் என்று தேசிய மருத்துவர்கள் தினத்தையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

மருத்துவர்களின் தன்னல மற்ற சேவையை அங்கீகரிக்க உருவாக்கப்பட்டதுதான், மருத்துவர் தினம். 'உலக மருத்துவ தினம்' என்று இருந்தாலும், 'தேசிய மருத்துவ தினம்'என்ற ஒன்றும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அது நாட்டுக்கு நாடு மாறுபாடு கொண்டதாக இருக்கிறது.

அந்த வகையில் இந்தியாவில் ஜூலை 1-ம் (நேற்று) தேதியை, தேசிய மருத்துவர் தினமாக நாம் கடைப்பிடித்து வருகிறோம். இந்த தினத்தை பெரும்பாலும் மருத்துவ நிறுவனங்கள் மட்டுமே கொண்டாடி வருகின்றன. 1991-ம் ஆண்டு முதல் இந்தியாவில் 'தேசிய மருத்துவர் தினம்' கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில், தேசிய மருத்துவர்கள் தினத்தையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில் கூறப்பட்டிருப்பதாவது:- "எளிய பின்புலங்களில் இருந்து வந்து, தமிழ்நாட்டின் மருத்துவக் கட்டமைப்பை வலிமைப்படுத்தி, மக்களின் நலன் காக்கும் தலைசிறந்த மருத்துவர்கள் அனைவருக்கும் தேசிய மருத்துவர்கள் தின வாழ்த்துகள். தன்னலமற்ற சேவைக்குச் சொந்தக்காரர்களான நமது மருத்துவர்கள் அனைவருமே போற்றுதலுக்குரியவர்கள்! அவர்களது சேவைக்கு நமது நன்றியின் அடையாளமாகத் தலைசிறந்த 50 மருத்துவர்களுக்கு இன்று (நேற்று) விருதுகள் வழங்கி மகிழ்கிறோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## த.வெ.க. கொடி விவகாரம்: நீதிமன்றம் நாளை தீர்ப்பு

**சென்னை, ஜூலை 02-**

த.வெ.க. கட்சி கொடியில் யானை சின்னத்தை பயன்படுத்த தடை விதிக்க கோரி பகுஜன் சமாஜ் கட்சி சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை ஜூலை 3-ம் தேதி உத்தரவு பிறப்பிக்கப்படும் என சென்னை உரிமையியல் நீதிமன்றம் அறிவித்துள்ளது. பகுஜன் சமாஜ் கொடியில் உள்ள யானை சின்னத்தை த.வெ.க. கொடி பயன்படுத்த தடை விதிக்க வேண்டும் என பகுஜன் சமாஜ் கட்சியின் தமிழக பொதுச் செயலர் இளங்கோவன் சென்னை முதலாவது உரிமையியல் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கு தொடர்பாக த.வெ.க. பொதுச்செயலர் என்.ஆனந்த் தாக்க செய்த பதில் மனுவில், "பல தகவல்களை மறைத்து தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு விசாரணைக்கு உகந்தது அல்ல. பகுஜன் சமாஜ் கட்சி கொடிக்கும் த.வெ.க. கொடிக்கும் எந்த விதத் தொடர்பும் இல்லை. கட்சியின் கொள்கை, கோட்பாடு மற்றும் தமிழகத்தின் வளர்ச்சிக்கான எதிர்காலத் திட்டம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு த.வெ.க. கொடி வடிவமைக்கப்பட்டுள்ளது. பகுஜன் சமாஜ் கட்சி கொடியில் உள்ள ஒற்றை யானைக்கும் த.வெ.க. கொடியில் உள்ள எக்காளம் ஊதும் இரட்டை யானைக்கும் பல மாறுபாடுகள் உள்ளன. தனித்துவத்துடன் த.வெ.க. கொடி உருவாக்கப்பட்டுள்ளது. வாக்காளர்களை குழப்பும் வகையில் உருவாக்கப்படவில்லை எனவே, அபராதத்துடன் இந்த மனுவை தள்ளுபட செய்ய வேண்டும்'' என குறிப்பிடப்பட்டிருந்தது.

## திருப்புவனம் இளைஞர் மரண வழக்கில் சி.பி.ஐ. விசாரணை தேவை: இ.பி.எஸ்.

**சென்னை, ஜூலை 02-**

"திருப்புவனம் காவல் மரணத்தில் உயிரிழந்த அஜித்குமார் வழக்கை சி.பி.ஐ.-க்கு மாற்ற வேண்டும் என அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், தமிழக சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் பக்கத்தில், "திருப்புவனம் காவல் மரணத்தில் உயிரிழந்த அஜித்குமார் பிரேத பரிசோதனை அறிக்கை குறித்த செய்திகளில், உச்சந்தலை முதல் கால்கள் வரை 18 காயங்கள் இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது அதிர்ச்சியளிக்கிறது. மேலும், கழுத்துப் பகுதியில் கொடுக்கப்பட்ட பெரும் அழுத்தம்



காரணமாகவே உயிரிழப்பு ஏற்பட்டதாக சொல்லப்படுகிறது.

ஸ்டாலின் ஆட்சியில் நடந்த 25 காவல் மரணங்களும் அப்பட்டமான மனித உரிமை மீறல். இதனை தேசிய மனித உரிமைகள் ஆணையம் முன்வந்து விசாரிக்க வேண்டும்.

இந்த நிலையில், அஜித்குமார் உயிரிழந்ததற்கு காரணம் "வலிப்பு" என காவல்துறை எப்.ஐ.ஆர். பதிவு செய்துள்ளது.

விக்னேஷ் லாக்கப் மரணத்தின் போது ஸ்டாலின் எந்த பச்சைப்பொய்யை சட்டப்பேரவையில் கூச்சமின்றி சொன்னாரோ, அதே பொய்யை அப்படியே அஜித்குமாருக்கு மீண்டும் சொல்கிறது ஸ்டாலினின் காவல்துறை. இதெல்லாம் தெரிந்து தான், எனது அறிவுறுத்தலின்படி, மாவட்டக் கழகச் செயலாளர்கள் அனைவரும் நீதிக்கான குரலாக ஒலித்தனர்.

பாதுகாப்பின்றி தவிக்கின்றனர் தமிழ்நாட்டு மக்கள். போலீஸின் போலி எப்.ஐ.ஆர். மீது மக்களுக்கு நம்பிக்கை இல்லை. எனவே இந்த வழக்கை சி.பி.ஐ-க்கு மாற்ற வேண்டும். இக்கொலைக்கு காவல்துறைக்கு பொறுப்பான முதல்வர் முழு பொறுப்பேற்று, பதில் அளிக்க வேண்டும் '' என்று குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில் நேற்று மாலை முதல்வர் மு.க.ஸ்டாலின் இளைஞர் மரண வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றி உத்தரவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கோவில் காவலாளி உயிரிழந்த சம்பவம்: மானாமதுரை டி.எஸ்.பி. பணியிடை நீக்கம்; எஸ்.பி. காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றம்

**சிவகங்கை, ஜூலை 02-**

போலீஸ் விசாரணையில் கோவில் காவலாளி அஜித்குமார் உயிரிழந்த விவகாரத்தில் மானாமதுரை டி.எஸ்.பி. பணியிடை நீக்கம் செய்யப்பட்டார். மேலும் சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆஷிஷ் ராவத் காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப்பட்டார்.



சிவகங்கை மாவட்ட எஸ்.பி.ஆஷிஷ் ராவத்.



மானாமதுரை டி.எஸ்.பி. சண்முகசுந்தரம்.

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே உள்ள மடப்புரத்தைச் சேர்ந்தவர் அஜித்குமார் (27). அங்குள்ள பத்ரகாளியம்மன் கோயிலில் தனியார் நிறுவன ஒப்பந்த காவலாளியாக பணிபுரிந்தார். இவரை ஜூன் 27-ம் தேதி திருட்டு வழக்கு தொடர்பாக மானாமதுரை உட்கோட்ட தனிப்படை போலீஸார் அழைத்துச் சென்றனர். போலீஸார் தாக்கியதில் ஜூன் 28-ம் தேதி அஜித்குமார் உயிரிழந்தார். இதனிடையே இச்சம்பவம் தொடர்பாக தனிப்படை காவலர்கள் பிரபு, கண்ணன், சங்கரமணிகண்டன், ராஜா, ஆனந்த், ராமச்சந்திரன் ஆகிய 6 பேரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆஷிஷ் ராவத் பணியிடை நீக்கம் செய்தார்.

மேலும் இச்சம்பவம் குறித்து திருப்புவனம் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் வெங்கடேஷ் பிரசாத் விசாரணை நடத்தினார். இதனிடையே அஜித்குமாரின் உடலில் 18 இடங்களில் காயங்கள் இருப்பதும், ரத்தக் கசிவு இருந்ததும் பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, இந்த வழக்கு கொலை வழக்காக மாற்றப்பட்டது. தொடர்ந்து தனிப்படை காவலர்கள் பிரபு, கண்ணன், சங்கர மணிகண்டன், ராஜா, ஆனந்த் ஆகிய 5 பேரும் கைது செய்யப்பட்டு மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

இதனிடையே இந்த வழக்கை சி.பி.சி.ஐ.டி.க்கு மாற்றி டி.ஜி.பி. சங்கர் ஜிவால் உத்தரவிட்டார். மேலும் சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆஷிஷ் ராவத்தை காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றி உள்துறை செயலர் தீரஜ்குமார் உத்தரவிட்டார். மேலும் சிவகங்கை மாவட்டத்தை, ராமநாதபுரம் மாவட்ட கண்காணிப்பாளர் சந்தீஷ் கூடுதல் பொறுப்பாக கவனிப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மானாமதுரை டி.எஸ்.பி. சண்முகசுந்தரத்தை பணியிடைநீக்கம் செய்து காவல்துறை உத்தரவிட்டுள்ளது.

## அஜித்தை ஏன் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை நடத்தவில்லை?

### ஐகோர்ட் கிளை சரமாரி கேள்வி

**மதுரை, ஜூலை 02-**

ஏன் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை நடத்தவில்லை? என்று திருப்புவனம் காவலாளி அஜித் குமார் மரண வழக்கில் ஐகோர்ட் கிளை சரமாரி கேள்வி எழுப்பியுள்ளது.

திருப்புவனம் காவலாளி அஜித் குமார் போலீஸ் விசாரணையின் போது, போலீசார் அடித்துக்கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டது. இது தொடர்பாக கொலை வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பாக 5 போலீசார் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர். திருபுவனம் மாவட்ட டி.எஸ்.பி.யும் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளார்.

அஜித் குமார் மரணம் தொடர்பாக வழக்கு விசாரணை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் நடைபெற்றது. அப்போது இந்த வழக்கை மதுரை மாவட்ட நீதிபதி ஜான் கந்தர்லால் சுரேஷ் விசாரிப்பார். நீதிபதி விசாரிப்பார் என்றால், அது நீதி விசாரணை என்றே அழைக்கப்படும். ஆவணங்களை நீதிபதியிடம் ஒப்படைக்க நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

முன்னதாக, நகை காணாமல் போன வழக்கின் விசாரணைக்காக காவல் நிலையம் அழைத்துச் செல்லப்பட்ட மடப்புரம் பத்ரகாளியம்மன் கோயில் தற்காலிக ஊழியர் அஜித்குமார் போலீஸார் தாக்கியதில் உயிரிழந்த சம்பவம் பெரிய அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது. இறந்த அஜித்குமாரின் உடலில் 18 இடங்களில் காயங்கள் இருந்ததாக பிரேதப் பரிசோதனை அறிக்கையில் அதிர்ச்சி தகவல் வெளியானது.

இதையடுத்து அஜித்குமார் வழக்கு கொலை வழக்காக மாற்றப்பட்டு சி.பி.சி.ஐ.டி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

இந்த வழக்கில் தனிப்படை காவலர்கள் கண்ணன், ஆனந்த், பிரபு, ராமச்சந்திரன், சங்கர மணிகண்டன் ஆகியோர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்நிலையில் இந்த சம்பவம் தொடர்பாக அ.தி.மு.க. வழக்கறிஞர் அணி மாநில இணைச் செயலாளர் மாரீஸ் குமார் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கு நேற்று (ஜூலை 1) மீண்டும் நீதிபதிகள் எம்.எஸ்.சுப்பிரமணியம், ஏ.டி.மரியகிளாட் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது வழக்கறிஞர் ஹென்றிடிபேன் வாதிடுகையில், போலீஸாரால் கடுமையாக தாக்கப்பட்டு உயிரிழந்த அஜித்குமார், விசாரணையின் போது தப்பி ஓட முயன்றது போது கீழே விழுந்து வலிப்பு ஏற்பட்டு உயிரிழந்தாக காவல்துறையினர் நாடகமாடியுள்ளனர்'' என்றார்.

வழக்கறிஞர் மாரீஸ்குமார் வாதிடுகையில், "அஜித்தை மடப்புரம் கோயில் பின்னால் வைத்து போலீஸார் சுற்றி நின்று தாக்குவதை ஒரு நபர் ஜன்னல் வழியாக வீடியோ எடுத்துள்ளார்.'' என்று கூறி அந்த வீடியோவை நீதிபதிகளிடம் வழங்கினார்.

இதையடுத்து நீதிபதிகள், அஜித்தை ஏன் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை நடத்தவில்லை?. அவரை விசாரணைக்காக வெவ்வேறு இடங்களுக்கு அழைத்துச் செல்ல யார் அதிகாரம் கொடுத்தது? சிவகங்கை மாவட்ட எஸ்.பி. உடனடியாக காத்திருப்போர் பட்டியலுக்கு அனுப்பப்பட்டதற்கு என்ன காரணம்? யார் உத்தரவின் பேரில் சிறப்பு புலனாய்வு குழு விசாரணை செய்தது என டி.ஜி.பி. பதிலளிக்க வேண்டும். அஜித்குமாரின் உயிரிழப்புக்கு அரசே பொறுப்பேற்க வேண்டும். இல்லையெனில் மாவட்ட நீதிபதி தலைமையில் நீதி விசாரணை நடத்த உத்தரவிட நேரிடும்.'' என்று கூறி விசாரணையை ஒத்திவைத்தனர்.

## தெலங்கானா ரசாயன ஆலை விபத்து உயிரிழப்பு 44 ஆனது

### ரூ.1 கோடி இழப்பீடு வழங்க முதல்வர் உத்தரவு

**ஐதராபாத், ஜூலை 02-**

தெலங்கானா மாநிலம் பஷமைலாரம் பகுதியில் உள்ள சிகாச்சி ரசாயன ஆலையில் நேற்று நிகழ்ந்த பயங்கர வெடி விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 44 ஆக அதிகரித்துள்ளது.

தெலங்கானா மாநிலம், சங்காரெட்டி மாவட்டத்தில் உள்ள பஷமைலாரம் பகுதியில் சிகாச்சி ரசாயன தொழிற்சாலை கடந்த 40 ஆண்டுகளாக இயங்கி வருகிறது. இங்கு மைக்ரோ கிறிஸ்டலைஸ் செல்லுலாஸ் எனும் ரசாயன பவுடர் தயாரிக்கப்பட்டு வருகிறது. 400-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஷிப்ட் முறையில் 24 மணி நேரமும் பணியாற்றி வருகின்றனர்.

இந்த தொழிற்சாலையில் நேற்று முன்தினம் காலை 143 தொழிலாளர்கள் பணியாற்றிக் கொண்டிருந்தனர். அப்போது, ஆலையில் இருந்த ரியாக்டர் பயங்கர சத்தத்துடன் வெடித்தது. இந்த விபத்தில் சம்பவ இடத்திலேயே 5 பேர் உயிரிழந்தனர். பலர் படுகாயம் அடைந்தனர். காயமடைந்தவர்கள் உடனடியாக அருகில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அங்கு சிகிச்சை பலனின்றி 39 பேர் உயிரிழந்தனர். இதனால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 44 ஆக அதிகரித்துள்ளது.

சம்பவ இடத்துக்கு நேரில் வருகை தந்த முதல்வர் ரேவந்த் ரெட்டி, விபத்து குறித்து ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து, வெடிவிபத்தில் இறந்த தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு ரூ. 1 கோடி இழப்பீடு வழங்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்ட முதல்வர் ஏ. ரேவந்த் ரெட்டி, காயமடைந்தவர்களுக்கு ரூ.10 லட்சம் வழங்கவும் உத்தரவிட்டார். மேலும், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் காயமடைந்த தொழிலாளர்களை சந்தித்த முதல்வர், அவர்களின் உடல் நிலை குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்.

மழைத்துளி
மண்ணின்
உயிர்துளி

## சாத்தூர் அருகே பட்டாசு ஆலை வெடி விபத்தில் ஏழு பேர் பலி

### 5 பேர் படுகாயம் - இருவர் கைது



**விருதுநகர், ஜூலை 02-**

விருதுநகர் மாவட்டம் சாத்தூர் அருகே சின்னக்காமன் பட்டியில் செயல்பட்டு வரும் கோகுலேஸ் பட்டாசு தொழிற்சாலையில் நேற்று காலையில் திடீர் வெடி விபத்து ஏற்பட்டது. இந்த வெடி விபத்தினால் ஆலையில் உள்ள ஐந்து அறைகள் வெடித்து சிதறி தரைமட்டமானது. இந்த வெடி விபத்தில் சிக்கி சம்பவ இடத்திலேயே மூன்று பேர் பலியாகினர். மேலும் படுகாயமடைந்த 4 பேர் சிகிச்சைக்காக சிவகாசி அரசு மருத்துவமனை கொண்டு செல்லப்பட்டனர்.

சிவகாசியைச் சேர்ந்த கமல்குமார் என்பவருக்கு சொந்தமான கோகுலேஸ் பட்டாசு தொழிற்சாலை சின்னக்காமன்பட்டி பகுதியில் செயல்பட்டு வருகிறது. இது நாக்பூர் உரிமம் பெற்று செயல்பட்டு வரும் இந்த பட்டாசு ஆலையில் சுமார் 20-க்கும் மேற்பட்ட அறைகளின் 50-க்கும் மேற்பட்டோர் பட்டாசு தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்று காலை வழக்கம் போல் பணி செய்ய தொடங்கிய நிலையில் உராய்வின் காரணமாக திடீரென வெடி விபத்து ஏற்பட்டதாக தெரிகிறது. இந்த வெடிவிபத்தினால் ஐந்து அறைகள் தரைமட்டமாகின. இந்த வெடி விபத்தில் சிக்கி மூன்று பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். மேலும் 5 பேர் சிவகாசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர். மேலும் இந்த பட்டாசு வெடி விபத்து மீட்பு பணியில் சாத்தூர் மற்றும் சிவகாசி தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டனர்

மீட்பு பணியின் போது மேலும் சில சடலங்கள் கைப்பற்றிய நிலையில் சம்பவ இடத்திலேயே ஆறு பேர் பலியாகியதாக தெரிய வருகிறது. மேலும் மருத்துவமனைக்குச் சென்ற ஒருவரும் பலியாகிய நிலையில் பலி எண்ணிக்கை ஏழாக உயர்ந்துள்ளது. இரண்டு பெண்கள் நான்கு ஆண்கள் மற்றும் அடையாளம் தெரியாத ஒருவர் என ஏழு பேர் இந்த வெடி விபத்தில் பலியாகியதாக தெரிவிக்கின்றனர்.

இந்த வெடி விபத்து குறித்து சாத்தூர் நகர் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் இந்த பட்டாசு வெடி விபத்து குறித்து சாதாரண நகர் போலீஸார் விசாரணை நடத்திய நிலையில் பட்டாசு ஆலையின் மேலாளர் மற்றும் போர்ன் ஆகிய இருவரை கைது செய்துள்ளதாக காவல்துறையினர் தெரிவிக்கின்றனர். பட்டாசு ஆலை வெடிவத்தில் பலியானவர்கள் விவரம் வருமாறு., 1. மீனம்பட்டியைச் சேர்ந்த மகாலிங்கம், 2. ராமசாமிபுரத்தைச் சேர்ந்த வைரமணி, 3. சூலக்கரையைச் சேர்ந்த லட்சுமி, 4. அனுப்பங்குளம் பகுதியைச் சேர்ந்த செல்லப்பாண்டி, 5. ராமமூர்த்தி, 6. ஓ கோவில்பட்டியைச் சேர்ந்த புண்ணியமூர்த்தி மற்றும் 7. ராமஜெயம் ஆகிய ஏழு பேர் பட்டாசு வெடிவிபத்தில் இறந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தினபூமியில்
விளம்பரம்
செய்து பயன்
பெறுங்கள்

### தலைவர்கள் சொல்வதை படிங்க....



நாள்தோறும் ஒரு கோடிக்கும் அதிகமானோர் என்ற முறையில், ஆண்டுக்கு 400 கோடி பேர் பயணிக்கும் ரயில் பயணத்தில், ரயில் கட்டண உயர்வை, ரூபாய் கணக்கில் கூறாமல் பைசா கணக்கில் கூறியிருப்பது பொதுமக்களை ஏமாற்றும் வஞ்சகமாகும். அமலாக்கத் தொடங்கியுள்ள ரயில் கட்டண உயர்வை மத்திய அரசு திரும்பப் பெற வேண்டும். **- முத்தரசன்**



ஆங்கிலம் இல்லாமல் நாம் எப்படி இருக்க முடியும்?. உலக தொடர்பு மொழியே ஆங்கிலம் தான். மொழியை வைத்து பா.ஜ.க. தான் அரசியல் செய்கிறது. இந்த மொழி பிரச்சினை குறித்து நான் கேள்வி எழுப்பியதற்கு தற்பொழுது வரை தமிழக பாஜக தலைமையிடம் இருந்து எந்த பதிலும் அளிக்கப்படவில்லை. **- துரை வைகோ**



வீடுகளுக்கான மின் கட்டண உயர்வை அரசே ஏற்றுக் கொண்டதால் மக்களுக்கு பாதிப்பு இல்லை என்று கூறுவது ஏற்க முடியாதது. கடைகள், வணிக நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து மின் இணைப்புகளுக்கும் கட்டணம் உயர்த்தப்பட்டிருப்பதால், அத்தியாவசியப் பொருள்களின் விலை கணிசமாக உயரும். **- அன்புமணி**



நாட்டையே உலுக்கும் முக்கியமான பிரச்சனைகளில் இருந்து தப்பிக்கும் வகையில் பிரதமர் மோடி வெளிநாட்டுக்கு தப்பி ஓடுகிறார். மணிப்பூரில் இயல்பு வாழ்க்கை முற்றிலுமாக அழிக்கப்பட்டுள்ள நிலையில், பிரதமர் இன்னும் அங்கு செல்லவில்லை. போர் நிறுத்தத்தை ஏற்படுத்தியதாக ட்ரம்ப் தொடர்ந்து கூறி வருவதையும் அவர் மறந்து வெளிநாடு ஓடுகிறார். **- ஜெய்ராம் ரமேஷ்**

## புதுக்கோட்டை மாவட்டத்தில் தீ விபத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகள் மற்றும் வீடுகள்: அமைச்சர் எஸ்.ரகுபதி நேரில் பார்வையிட்டார்



**புதுக்கோட்டை,ஜூலை.02-**

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டம், மெய்வழிச் சாலை, ஆர்ச் அருகில் ஏற்பட்டுள்ள தீ விபத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகள் மற்றும் வீடுகளை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி , கலெக்டர் மு.அருணா, தலைமையில் நேரில் பார்வையிட்டு, பாதிக்கப்பட்டோர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினார்.

பின்னர், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் தெரிவித்ததாவது;

புதுக்கோட்டை மாவட்டம், மெய்வழிச் சாலை, ஆர்ச் அருகில் நேற்றையதினம் 30.06.2025 தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த தீ விபத்தில், இப்பகுதிகளில் உள்ள ஒரு வீட்டில் ஏற்பட்டுள்ள தீ அடுத்தடுத்து பரவி 7 வீடுகள் எரிந்து சேதமடைந்துள்ளன. இந்த தீ விபத்தின்போது ஏற்பட்டிருந்த தீ முழுவதும், தீயணைப்புத் துறையின் மூலம் அணைக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இலுப்பூர் வட்டம், மெய்வழிச் சாலை, ஆர்ச் அருகில் ஏற்பட்டுள்ள தீ விபத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகள் மற்றும் வீடுகள் ஆகியவை இன்றையதினம் நேரில் பார்வையிடப்பட்டது. இந்த தீ விபத்தின் மூலம் பாதிக்கப்பட்ட வீடுகளைச் சேர்ந்த நபர்களிடம் நேரில் சந்தித்து, ஆறுதல்கூறி நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது.

மேலும், தீ விபத்தினால் பாதிக்கப்பட்டுள்ள நபர்களுக்கு, உரிய அனைத்து உதவிகளையும் ஏற்படுத்தி கொடுத்திட தொடர்புடைய அரசு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது எனவும் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்வில், இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் அ.அக்பர்அலி, வட்டாட்சியர் காமராஜு மற்றும் சந்திரன், பழனியப்பன், மாரிமுத்து மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

## பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராமங்களில் பல்வேறு வளர்ச்சித்திட்ட பணிகள்

### எம்.எல்..ஏ ம.பிரபாகரன் அடிக்கல் நாட்டினார்



**பெரம்பலூர்,ஜூலை.02-**

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில், பெரம்பலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆலத்தூர், நாட்டார்மங்கலம், செட்டிக்குளம், மாவிலங்கை, புது அம்மாபாளையம் உள்ளிட்ட கிராமங்களில் ரூ.4.59 கோடி மதிப்பீட்டிலான பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, புதிய திட்டப் பணிகளை பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் (01.07.2025) தொடங்கி வைத்தார்.

பின்னர் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் மக்கள் போற்றும் மகத்தான திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். தமிழக அரசின் திட்டங்களால் அனைத்து தரப்பு மக்களும் பயன்பெற்று வருகின்றனர். மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் கிராமப்புறங்களில் வளர்ச்சியை மேம்படுத்திடும் பொருட்டு, பல்வேறு புதிய திட்டப் பணிகளை கிராமப் பகுதிகளுக்கு வழங்கி வருகிறார்கள். அதனடிப்படையில்தான் ஆலத்தூர் மேற்கு பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இதன்மூலமாக இப்பகுதியிலுள்ள மக்கள் கூட்ட நெரிசலின்றி எளிதாக அத்தியாவசிய பொருட்களை வாங்கி பயன்பெறுவர்.

தொடர்ந்து, நாட்டார்மங்கலம், செட்டிக்குளம் ஆகிய கிராமங்களில் மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் தலா ரூ.10.19 லட்சம் புதிதாக கட்டப்பட்டுள்ள குழந்தைகள் மைய கட்டிடம் திறக்கப்பட்டு முதல் குழந்தைகளின் பயன்பாட்டிற்கு தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. பின்னர், முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தன் கீழ் செட்டிக்குளம் முதல் வாழையூர் வரை கீழ் ரூ. 75.81 லட்சம் மதிப்பீட்டிலும், செட்டிக்குளம் முதல் புது அம்மாபாளையம் வரை ரூ.325 லட்சம் மதிப்பீட்டிலும் புதிய தார் சாலை அமைக்கும் பணி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து, மாவிலங்கை கிராமத்தில் ஆதிதிராவிடர் தெருவில் அயோத்திதாசப் பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.2.53 லட்சம் மதிப்பீட்டில் புதிய சிமெண்ட் சாலை அமைக்கும் பணியினையும், புது அம்மாபாளையம் கிராமத்தில் ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதியில் ரூ.18 லட்சம் மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கும் பணியும், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ரூ.17 லட்சம் மதிப்பீட்டில் புதிய வகுப்பறைக் கட்டிடம் கட்டும் பணியினையும் அடிக்கல் நாட்டி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் பெரம்பலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 7 கிராமங்களில் ரூ.4.59 கோடி மதிப்பீட்டிலான பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, புதிய திட்டப் பணிகளை பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வுகளில் கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் க.பாண்டியன், துணை பதிவாளர் (பொ.வி.தி) சிவக்குமார், மாவட்ட வழங்கல் அலுவலர் சுந்தரராமன், அட்மா தலைவர் வீ.ஜெகதீசன், ஆலத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர் பிரேமலதா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## திருச்சி மாவட்டத்தில் உள்ள சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல கல்லூரி விடுதிகளில் சேர மாணவ மாணவிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்பு

### கலெக்டர் வே.சரவணன் தகவல்

**திருச்சி,ஜூலை.02-**

தமிழ்நாடு அரசால் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் மாணவர் மற்றும் மாணவியர்களுக்கான 6 கல்லூரி மாணவியர் விடுதிகள், 5 கல்லூரி மாணவர் விடுதிகள்;, 2 தொழில்நுட்ப கல்லூரி மாணவர் விடுதி, 2 தொழிற்பயிற்சி மாணவர் விடுதி, ஒரு மருத்துவக்கல்லூரி மாணவர் விடுதி, ஒரு பொறியியல் கல்லூரி மாணவியர் விடுதி ஆக மொத்தம் 17 கல்லூரி விடுதிகள் செயல்பட்டு வருகிறது.

கல்லூரி விடுதிகளில் பட்டப்படிப்பு, பட்டமேற்படிப்பு மற்றும் பாலிடெக்னிக்ஃஐடிஐ படிப்புகளில் பயிலும் மாணவஃமாணவியர் சேரத் தகுதியுடையவர்கள் ஆவர். அனைத்து விடுதி மாணவமாணவியர்களுக்கு மூன்று வேளை உணவு மற்றும் தங்கும் வசதியும் அளிக்கப்படும்.

கல்லூரி விடுதிகளி;ல் முதலாம் ஆண்டு தங்கிப்பயிலும மாணவமாணவியருக்கு ஜமக்காளமும், அனைத்து மாணவர் மாணவியர்களுக்கும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை போர்வைகளும் வழங்கப்படும். விடுதிகளில் சேருவதற்கான தகுதிகள்

பெற்றோர்பாதுகாவலரது ஆண்டு வருமானம் ரூ.2,00,000-க்கு மிகாமல் இருக்க வேண்டும். இருப்பிடத்திலிருந்து பயிலும் கல்வி நிலையத்தின் தொலைவு கு றைந்தபட்சம் 8 கி.மீக்கு மேல் இருக்க வேண்டும். இந்த தூர விதி மாணவியருக்கு பொருந்தாது. தகுதியுடைய மாணவஃமாணவியர் விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட விடுதி காப்பாளர் காப்பாளினிகளிடமிருந்தோ அல்லது கலெக்டர் அலுவலகத்திலுள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்திலிருந்தோ இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட விடுதி காப்பாளர் காப்பாளினிகளிடம் அல்லது மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் 15.07.2025-க்குள்ளும் சமர்பிக்க வேண்டும். எனவே, கல்லூரி மாணவமாணவியர் அரசின் இச்சலுகைகளை பெற்று பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேற்கண்ட தகவலை திருச்சிராப்பள்ளி கலெக்டர் வே.சரவணன், தெரிவித்துள்ளார்.

## தமிழ் இனம், தமிழ்நாட்டை காப்பாற்ற தான் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் ஓரணியில் தமிழ்நாடு என்ற திட்டத்தை கொண்டு வந்துள்ளார்: அமைச்சர் ,எம்.எல்.ஏ பேட்டி.

**திருவாரூர்,ஜூலை.02-**

முக தலைவர் மு.க.ஸ்டாலின் வரலாற்று முக்கியதுவம் வாய்ந்த திட்டமான ஓரணியில் தமிழ்நாடு திட்டதை தொடங்கியுள்ளார். ஆரம்ப காலத்தில் சமுதாய பணிக்காகவும், தமிழ்நாட்டின் மொழி, இனம், கலச்சாரத்தை காப்பாற்ற திராவிட இயக்கம் தொடங்கப்பட்டது. அன்றிருந்து வரை அதே கொள்கை பிடிப்போடு நடத்தி வருபவர்கள் பட்டியலில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் உள்ளார். இது தேர்தல் பரபப்புரை என்று யாரும் எண்ணாமல் மத்திய அரசு இந்தி தினிப்பு, நிதி குறைவு, வக்பு சட்டம், நாடாளுமன்ற தொகுதி குறைப்பு என்று என்னதான் தமிழகத்தை பாரபட்சமாக நடத்தினாலும் இந்திய துணை கண்டத்திலேயே தமிழகத்தின் வளர்ச்சியினை தடை போட முடியாது. அடுத்த தலைமுறையினை காப்பாற்ற அனைவரும் கட்சி பாகுபாடு இன்றி ஓரணியில் சேர்வோம். தமிழ் மொழியினை அழிக்க வேண்டும், சுயமாரியாதையினை ஒழிக்க பாஜக அரசு தமிழகத்தில் காலுன்றி அழிக்க என்னுகிறது. திராவிட மாடல் ஆட்சி நடைபெறும் இந்த தமிழ் மண்ணில் ஒரு போதும் நடைபெறாது. தமிழ் இனம் ஒன்று சேர்ந்து திமுக தலைமையில் ஆர்எஸ்எஸ் அமைப்பை தமிழகத்திலிருந்து விரட்டி அடிப்போம். வரும் 3ந்தேதி முதல் ஒவ்வொரு வீடு வீடாக சென்று தமிழக அரசின் திட்டங்களான விடியல் பயணம், மகளிர் உரிமை தொகை, நான் முதல்வன், தமிழ் புதல்வன், புதுமை பெண், கல்லு£ரி கனவு உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை பற்றி பொதுமக்களிடம் எடுத்தரைத்து தமிழகத்தை வஞ்சிக்க நினைக்கும் பாஜக அரசை தமிழகத்தை விட்டு விரட்டி அடிப்போம் என்று கூறி ஓரணியில் தமிழ்நாடு திட்டத்தில் புதிய உறுப்பினர்கள் சேர்க்க உள்ளோம் என்றனர். இந்த திட்டங்களில் பொதுமக்களிடம் ஏதும் குறைகள் இருந்தால் அதனை தலைமையிடத்திற்கு கொண்டு அங்கு அந்த பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்படும். ஓரணியில் தமிழ்நாடு என்பது திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நாளை ஓரணியில் இந்தியா என்று மாறும் காலம் நெருங்கி விட்டதாக திருவாரூர் சட்டமன்ற அலுவலகத்தில் செய்தியாளர்களை சந்தித்த தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி ராஜா, சட்டமன்ற உறுப்பினர் பூண்டிகலைவணன் ஆகியோர் தெரிவித்தனர்.



## கரூர் மாவட்டத்தில் ராணவவீரர்களின் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கான குறைதீர்க்கும் நாள் கூட்டம்

### கலெக்டர் மீ.தங்கவேல் தலைமையில் நடைபெற்றது

**கரூர்,ஜூலை.02-**

கரூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் இராணுவத்தில் பணிபுரிந்து மறைந்த வீரரின் மனைவிக்கு குடும்ப ஓய்வூதிய ஆணையை மாவட்ட கலெக்டர் மீ. தங்கவேல் (01.07.2025) வழங்கினார்.



திருச்சி மாவட்டத்தில் கடந்த 30.06.2025 அன்று நடைபெற்ற மாபெரும் SPARSH ஓய்வூதிய குறை தீர்ப்பு முகாமில் தமிழ்நாடு முழுவதும் பாதுகாப்பு ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் சார்ந்த குறைகளுக்கு தீர்வு காணும் விதமாக 5 SPARSH ஓய்வூதிய சேவை வாகனங்கள் துவக்கி வைக்கப்பட்டது.

இதன் ஒரு பகுதியாக, (01.07.25) கரூர் மாவட்டத்திற்கு SPARSH ஓய்வூதிய சேவை வாகனம் வந்தடைந்தது. மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்ற ஓய்வூதிய குறை தீர்ப்பு முகாமில் நூற்றுக்கும் மேற்பட்ட பாதுகாப்பு ஓய்வூதியதாரர்கள் கலந்து கொண்டனர்.

ராணுவத்தில் பணிபுரிந்த தனது கணவரின் இறப்பிற்குப் பிறகு குடும்ப ஓய்வூதியம் பெறாமல் இருந்த விஜயலட்சுமி இம் முகாமில் கலந்து கொண்டு தனது குறைகளை தெரிவித்தார். அவரின் மனு மீது துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு உடனடியாக குடும்ப ஓய்வூதிய ஆணையை மாவட்ட கலெக்டர் மீ. தங்கவேல் வழங்கினார். இதனைத் தொடர்ந்து, உடனடியாக அவரது வங்கி கணக்கில் குடும்ப ஓய்வூதியம் ரூ.27,797/-வரவு வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் மாவட்ட பாதுகாப்பு கணக்குகள் துணை கட்டுப்பாட்டாளர் R.தனசேகர், IDAS மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திருவாரூரில் பருத்தி விவசாயிகளுக்கு உரிய விலையினை கோரி அதிமுக சார்பில் ஆர்ப்பாட்டம்

### முன்னாள் அமைச்சர் இரா.காமராஜ் தலைமையில் நடைபெற்றது




**திருவாரூர்,ஜூலை.02-**

நுல் விலையில் எந்த விதமான மாற்றமும் இல்லாத நிலையில் ஒழுங்கு விற்பனை கூடங்களில் உள்ளூர் ஏஜெண்டுகளின் ஆதிக்கத்தால் பருத்தி விவசாயிகளுக்கு உரிய விலை கிடக்கவில்லை இதனை கண்டித்து திருவாரூர் புதிய ரயில் நிலையம் முன்பாக எதிர்கட்சி தலைவரும், அதிமுக பொதுச் செயலாளருமான எடப்பாடி பழனிச்சாமி ஆணைகிணங்க மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் உணவுத்துறை அமைச்சருமான இரா.காமராஜ் எம்.எல்.ஏ தலைமையில் கண்டன ஆர்பாட்டம் நேற்று நடைப்பெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு விவசாய நலச்சங்க மாவட்ட தலைவர் கிருஷ்ணசாமி, ஒருங்கிணைப்பாளர் ராஜேந்திரன், கழக அமைப்பு செயலாளர் சிவராஜமாணிக்கம், மாவட்ட பொருளாளர் பன்னீர்செல்வம், நகர செயலாளர்கள் ஆர்.டிமூர்த்தி, ஆர்.ஜி.குமார், ஒன்றிய செயலாளர் மணிகண்டன், செந்தில்வேல், பாப்பா சுப்ரமணியன், அம்மா பேரவை மாவட்ட செயலாளர் பொன்வாசுகிராம், இளைஞர், இளம்பெண்கள் பாசறை மாவட்ட செயலாளர் கலியபெருமாள், தகவல் தொழில் நுட்ப பிரிவு மாவட்ட செயலாளர் சின்னராஜ், அண்ணா தொழிற்ச்சங்க மாவட்ட செயலாளர் எம்.ஆர்.பாலாஜி உட்பட அனைத்து நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு மற்றும் மகளிர் அணி நிர்வாகிகள், விவசாயிகள், பொதுமக்கள், கழக தொண்டர்கள் என ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இதில் இரா.காமராஜ் பேசியதாவது, பருவம் தவறி பொய்த மழையினால் பருத்தி விணாகி போய்விட்டது. மீதமுள்ள பருத்தியின விவசாயிகள் சாகுபடி செய்து நன்னிலம், குடவாசல், வலங்கைமான், திருவாரூர் உட்பட 8 இடங்களில் உள்ள விற்பனை கூடங்களில் விற்பனை செய்ய வந்தால் கடந்த மாதம் நடத்த பருத்தி ஏலத்தில் சென்ற ஆண்டை விட மிக குறைந்த விலைக்கே பருத்தி ஏலம் போனது. இதனால் விவசாயிகள் சாலைமறியல் போராட்டத்தில் ஈடுப்பட்டனர். அதனை பார்த்த எடப்பாடி பழனிச்சாமி விவசாயிகளுக்கு துணையாக ஒரு போராட்டத்தை அறிவித்தார். அவர் அறிவித்த உடனே குடவாசலில் நடைப்பெற்ற பருத்தி ஏலத்தில் பருத்தி அதிக விலைக்கு விலை போனது. (நேற்று) திருவாரூர் பருத்தி விற்பனை கூடத்தில் ஒரு ஐஏஎஸ் அதிகாரி கொண்டு பருத்தி ஏலம் நடைப்பெறுகிறது. பஞ்சு ஆலைகள் உள்ள ஊர்களிலில் வணிகர்களை ஏலத்தில் கலந்து கொள்ள வைத்த அரசு அதிமுக அரசு தான். ஆனால் 50 கி.மீ உள்ளே உள்ள இடைதரகர்கள் மட்டுமே கலந்து கொள்கிறார்கள். திமுக ஆட்சியில் எல்லாவற்றிலும் இடதரகர்கள்தான். ஆட்சி பொறுபோற்ற இந்த 4 ஆண்டுகளில் விவசாயிகளை திமுக அரசு பாதுகாக்காமல் அவர்களுக்கு கிடைக்க வேண்டிய நிவாரணம், இன்சூரன்ஸ் எதையுமே பெற்று தந்தது இல்லை. திருவாரூரில் 430 ஊராட்களில் வெறும் 70 ஊராட்சிகளுக்கு மட்டும் தான் இன்சூரன்ஸ் வழங்கப்பட்டுள்ளது. கடந்த 10 ஆண்டு கால அதிமுக ஆட்சியில் விவசாயிகளுக்கு முழுமையான வறட்சி நிவாரணம், இன்சூரன்ஸ் வழ்கப்பட்டுள்ளது. காவிரி என்னும் டெல்டாவை பாதுகாத்த ஒரே அரசுதான் அதிமுக அரசு என்றார். இதுவரையில் திமுக 4 ஆண்டு ஆட்சி காலத்தில் சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்த அஜித் குமர் உட்பட 26 சிறை கைதிகள் விசாரணைக்கு அழைத்து கொலை செய்யப்பட்டுள்ளார். எனவே இவற்றை எல்லாம் போக்க தமிழ்நாட்டை மீட்டு நல்ல வளர்ச்சி பாதைக்கு கொண்டு செல்ல வரும் 2026ம் ஆண்டு நடைப்பெறவுள்ள சட்டமன்ற தேர்தலில் எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அதிமுக ஆட்சி கொண்டு வரவேண்டும் என்றார்.

## திட்டச்சேரியில் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை கலந்தாய்வு கூட்டம்



**நாகபட்டினம்,ஜூலை.02-**

நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் திட்டச்சேரியில் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை கலந்தாய்வு கூட்டம் செவ்வாய் கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு திருமருகல் வடக்கு ஒன்றிய செயலாளர் செல்வ செங்குட்டுவன் தலைமை வகித்தார், திட்டச்சேரி பேரூர் கழக செயலாளர் முகமது சுல்தான் முன்னிலை வகித்தார். இதில் நாகப்பட்டினம் தொகுதி பொறுப்பாளர் பால அருட்செல்வன் கலந்து கொண்டு உறுப்பினர் சேர்க்கை குறித்து விளக்கி பேசினார். இதில் மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணியின் ஒருங்கிணைப்பாளர் கணேஷ் துணை ஒருங்கிணைப்பாளர் செந்தில்நாதன் ஆகியோர் கலந்து கொண்டு உறுப்பினர்களிடம் விளக்கம் அளித்து பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட பிரதிநிதிகள் குணசேகரன் ஹமீது ஜெகபர் மாவட்ட விவசாய தொழிலாளர் அணியின் துணை அமைப்பாளர் இளஞ்செழியன் மற்றும் இளைஞர் அணி மகளிர் அணி நிர்வாகிகள் வார்டு கழக செயலாளர்கள் ஒன்றிய பிரதிநிதிகள் உள்ளிட்ட சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர். அதேபோல் திருமருகலில் உள்ள திமுக கட்சி அலுவலகத்தில் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை கலந்தாய்வுக் கூட்டம் ஒன்றிய செயலாளர் செல்வ செங்குட்டுவன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.


## பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் முதல் மூன்று மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு பாராட்டு



**கந்தர்வகோட்டை,ஜூலை.02-**

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியம் ஆத்தங்கரை விடுதி அரசு உயர்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பு பொது தேர்வில் 100% தேர்ச்சி பெற்றுள்ளனர். அதில் முதல் மூன்று மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு பாராட்டுவிழா பள்ளி மேலாண்மை குழு பெற்றோர் ஆசிரியர் சங்கம் இளைஞர் அமைப்பின் சார்பில் நடைபெற்றது. பத்தாம் வகுப்பில் முதல் மதிப்பெண் நிதியமுதம் 460, சர்னி இரண்டாம் 456, அஜனா மூன்றாம் இடம் 438 பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கி பாராட்டினார்கள். இந்நிகழ்விற்கு தலைமை ஆசிரியர் கண்ணன் தலைமை வந்தார். முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் அருணாசலம், பள்ளி மேலாண்மை குழு தலைவி தேவி, பெற்றோர் ஆசிரியர் கழகம் தலைவர் ரெங்கசாமி உள்ளிட்டோ முன்னிலை வகித்தனர். இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராக தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் மணிகண்டன் மாவட்ட அமைப்பு செயலாளர் முத்துக்குமார் மாநில செய்தி தொடர்பாளர் ரகமதுல்லா உள்ளிட்டோர் வாழ்த்தி பேசினார்கள். முன்னதாக பள்ளியில் தமிழ் ஆசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற ராசம்மாள் அவர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது. நிறைவாக ஆங்கில ஆசிரியர் நன்றி கூறினார்.

## பொன்னமராவதியில் முத்தரையர் வெண்கல சிலை அமைக்க கோரிக்கை



**பொன்னமராவதி,ஜூலை.02-**

புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி அமரகண்டன் ஊரணி அருகே ரவுண்டானா அமைப்பதற்கு முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் அந்த ரவுண்டானாவின் மையப்பகுதியில் வெண்கல முத்திரையர் சிலை அமைக்க வேண்டும் என தமிழர் தேசம் கட்சி மற்றும் பாஜக சார்பில் பொன்னமராவதி பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது. இதில் தமிழர் தேசம் கட்சியின் ஒன்றிய செயலாளர் சரவணன், பிஜேபி வடக்கு ஒன்றிய தலைவர் செல்வம், தமிழர் தேசம் கட்சியின் மாவட்ட பிரதிநிதி கருப்புகுடிபட்டி வெள்ளைச்சாமி, பொன்னமராவதி ஒன்றிய பிரதிநிதி கருப்பர் கோவில்பட்டி பூமி, பாஜக அரசு தொடர்பு மாவட்ட நிர்வாகி துளசிதாசன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் 20 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கலெக்டரிடம் மனு



**கிருஷ்ணகிரி,ஜூலை.02-**

ஊத்தங்கரையில் பென்ஞல் புயலால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு நிவாரணம் மற்றும் மாற்று இடம் வேண்டி 20 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் கலெக்டர் தினேஷ் குமாரிடம் மனு அளித்தனர்.

கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் மாவட்ட கலெக்டர் தினேஷ்குமார் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளரும் தளி சட்டமன்ற உறுப்பினருமான இராமச்சந்திரன் தலைமையில் ஊத்தங்கரை நகர செயலாளர் ஆனந்தன் மற்றும் நிர்வாகிகள் சத்தியராஜ், குமார், பாபு (எ) ஆமத் அலி, வினோத் மற்றும் நிர்வாகிகள் நேரில் சந்தித்து ஊத்தங்கரையில் பென்ஞல் புயலால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு நிவாரணம் மற்றும் மாற்று இடம் வேண்டி 20 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டி மனு அளித்தனர்.

## போலீஸ் கமிஷ்னர் அலுவலகத்தில் காவலர் குறை தீர்ப்பு முகாம்



**சென்னை ஜூலை 02-**
சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ.அருண் காவலர் குறை தீர்க்கும் சிறப்பு முகாமில், 40 காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களிடமிருந்து குறைநீர் மனுக்களை பெற்று உடனடியாக நடவடிக்கை எடுக்க காவல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

சென்னை பெருநகர காவல்துறையினரின் பணி சிறக்க அவர்தம் குறைகளை போக்கி, காவலர் குடும்ப நலனுக்கு அதிகாரிகள் உதவிடும் வகையில், சென்னை பெருநகர காவல் ஆணையாளர் ஆ.அருண், உத்தரவின்பேரில் நேற்று காவலர் குறைதீர் சிறப்பு முகாம் நடத்தப்பட உள்ளதாக சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருந்தது. அதன்பேரில், வேப்பேரி, காவல் ஆணையர் அலுவலக கலந்தாய்வு கூடத்தில் நடைபெற்ற "காவலர்கள் குறை தீர்க்கும் சிறப்பு முகாமில்" சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ.அருண், சென்னை பெருநகர காவல், சட்டம், ஒழுங்கு, குற்றப்பிரிவு, போக்குவரத்து காவல் நிலையங்கள், ஆயுதப்படை மற்றும் சிறப்பு பிரிவுகளில் பணிபுரியும் 2 உதவி ஆணையர்கள், 06 காவல் ஆய்வாளர்கள், 2அமைச்சுப்பணியாளர்கள் மற்றும் 30 காவலர்கள் என மொத்தம் 40 காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களிடமிருந்து குறைதீர் மனுக்களை பெற்றார்.இம்முகாமில் சென்னை பெருநகர காவல் ஆணையர் பணிமாறுதல், தண்டனை களைதல், காவலர் குடியிருப்பு கோருதல், ஊதியம் குறைபாடு களைதல் உள்ளிட்ட மனுக்களை பெற்று, இம்மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட காவல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இந்நிகழ்ச்சியில், துணை ஆணையர் டி.என ஹறிகிரண பிரசாத, காவல் அதிகாரிகள், காவலர்கள் மற்றும் அமைச்சுப்பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழக முதல்வரின் இருதயம் காப்போம் எனும் இத்திட்டத்தில் இன்று வரை 18,000 த்திற்கும் மேற்பட்ட உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கிறது: அமைச்சர் மா.சுப்பிரமணியன் பெருமிதம்



**சென்னை,ஜூலை.02**
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.மா.சுப்பிரமணியன் (01.07.2025) சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற "மருத்துவர் தினம் 2025" நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மருத்துவத்துறையில் மகத்தான பணி செய்த மருத்துவர்களை பாராட்டி பதக்கங்களை மற்றும் சான்றிதழ்களை வழங்கி, பேசினார். அப்போது அவர் பேசியதாவது

முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து இந்த துறைக்கு பல்வேறு வகைகளிலான வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து கொண்டிருப்பவை நீங்கள் அறிவீர்கள். 2021 ஆகஸ்ட் திங்கள் 5 ஆம் தேதி கிருஷ்ணகிரி மாவட்டம், சாமனப்பள்ளியில் உருவான திட்டம் மக்களைத் தேடி மருத்துவம் எனும் மகத்தான திட்டம். இந்த திட்டத்தில் இதுவரை 2 கோடியே 28 இலட்சம் பேர் பயனடைந்து இன்றைக்கு United Nations Interagency Task Force Award 2024 எனும் விருது ஐ.நா மன்றத்தால் தமிழ்நாட்டின் மக்கள் நல்வாழ்வுத்துறைக்கு வழங்கப்பட்டிருப்பது என்பது உலக வரலாற்றில் மிகப் பெரிய அளவிலான சிறப்பு. அதேபோல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 2021 டிசம்பர் திங்களில் இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48 திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. தமிழ் நாட்டின் சாலைகளில் விபத்துக்குள்ளானவர்களுக்கு முதல் 48 மணி நேரத்தில் ரூ.1 இலட்சம் உதவித் தொகை தந்து உயிர்களை காப்பாற்றுகின்ற ஒரு மிகச் சிறந்த திட்டம். இத்திட்டத்தில் உதவித் தொகை கடந்த சில மாதங்களுக்கு முன்னால் ரூ.2 இலட்சமாக உயர்த்தி தரப்பட்டு, இன்றைக்கு அதன் மூலம் உயிர் பெற்று இருப்பவர்கள் எண்ணிக்கை 4 இலட்சத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது. இந்த திட்டம் குறித்து ஒன்றிய சுகாதாரத்துறையின் அலுவலர்கள் நம்முடைய மாநில சுகாதாரத்துறை அலுவலர்களுடன் கலந்து பேசி இன்னுயிர் காப்போம் நம்மைகாக்கும் 48 எனும் திட்டம் இன்றைக்கு ஒன்றிய அரசே இந்த திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். இத்திட்டத்தில் முதல் 7 நாட்களுக்குள் காவல்துறையின் அறிக்கை சமர்ப்பித்தவுடன் ரூ.1.5 இலட்சம் தரப்படும் என்கின்ற திட்டத்தை ஒன்றிய சுகாதாரத்துறை அறிவித்திருக்கிறார்கள். இந்த திட்டத்தை நமது மாநில சுகாதாரத்துறை சார்பாக முதல் 48 மணி நேரத்தில் எந்தவித விசாரணையும் இல்லாமல் உதவித் தொகை தரப்பட்டு வருகிறது. மேலும் பாதிக்கப்பட்டவர்களை மருத்துவமனையில் சேர்ப்பவருக்கும் ரூ.5000/- ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இன்றைக்கு தமிழ்நாடு அரசு சார் தொடங்கப்பட்ட திட்டம் இந்தியாவிற்கே ஒரு முன்னோடியாக அமைந்திருப்பது பெருமைக்குரிய ஒன்று.

அதேபோல் இன்றைக்கு இருதய நோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 2019 கோவிட் பாதிப்புக்கு பிறகு உயிர் பாதிப்புகள் என்பது அதிகரித்து வருகிறது. உலக சுகாதார நிறுவனம் கூட இந்நிகழ்வுகளுக்கு ஆராய்ச்சி செய்ய தொடங்கி இருக்கிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் குக்கிராமங்கள், கிராமப் பகுதிகள் என்று அப்பகுதிகளில் பாதிக்கப்பட்டவர்கள் அவரவர் வசிக்கும் பகுதியிலேயே உள்ள துணை சுகாதார நிலையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் என்று 10,999 மருத்துவக் கட்டமைப்புகள் இருக்கின்றது. 8713 துணை சுகாதார நிலையங்களும், 2286 ஆரம்ப சுகாதார நிலையங்களும் என 10999 மருத்துவக் கட்டமைப்புகளிலும் Loading Doses எனும் ஆஸ்பிரின், க்ளோபிடோகிரல், அட்ரோவாஸ்டாட்டின் என்கின்ற 3 மாத்திரைகள் தந்து உடனடியாக உயிர்களை காப்பாற்றுகின்ற ஒரு மகத்தான திட்டத்தை 2023 ஜீன் திங்கள் 27 ஆம் தேதி கோவை மாவட்டம், மதுமிச்சம்பட்டியில் தொடங்கி இருதயம் காப்போம் எனும் இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. அந்த திட்டத்தின்படி இன்று வரை 18,000 த்திற்கும் மேற்பட்ட உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கிறது. அந்தவகையில் தமிழ்நாட்டில் மருத்துவர்களுக்கு பாராட்டு என்பது தவிர்க்க முடியாதது ஒன்று. கோவிட் காலங்களில் மருத்துவர்கள் தான் வணங்கும் தெய்வமாக கண்டறியப்பட்டார்கள். கோவிட் காலங்களில் மக்களை பாதுகாத்த தன் காரணமாக மருத்துவர்களின் சேவை அனைவருக்கும் தெய்வமாக தெரிந்தது. கோவிட் காலங்களில் அனைவரும் அச்சமடைந்து வந்த நிலையில் முதலமைச்சர் அவர்கள் கோவை ESI மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கோவிட் நோயாளர்களை நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்கள். வெளியில் வந்த முதலமைச்சரிடம் பத்திரிக்கையாளர்கள் யாருமே சந்திக்க பயப்படும் கோவிட் நோயாளர்களை எப்படி சந்திக்க சென்றீர்கள் என கேட்டதற்கு, மருத்துவர்கள் தங்களுடைய உயிரை பற்றி கவலைப்படாமல் எல்லா இடங்களிலும் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உறுதுணையாக, அவர்களுடைய சேவையை பாராட்டும் வகையில் நான் இந்த கோவிட் தீவிர சிகிச்சைப் பிரிவிற்கு சென்று வந்தேன் என்று தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மரு.எழிலன் நாகநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண்தம்புராஜ், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை ஆணையர்.எம்.விஜயலட்சுமி, மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் தலைவர்.பி.உமா மகேஸ்வரி, பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர்.நே.சிற்றரசு, பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம், மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு.ராஜமூர்த்தி, மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி கூடுதல் இயக்குநர் மரு.தேரணிராஜன் மற்றும் கலந்து கொண்டனர்.

**மேன்மைமிகு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் திருவாரூர்.
அ.வ.எண்.109/2024**

சுப்ரமணியன். – வாதி
– எதிர் –
1.கே.நந்தினி, த/பெ.கண்ணன், மெயின் ரோடு, புதூர், திருநெல்லிக்காவல், திருவாரூர் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்.
2.கே.நவீன்ராஜ், த/பெ.கண்ணன், மெயின் ரோடு, புதூர், திருநெல்லிக்காவல், திருவாரூர் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்.
– 4, 5–ம் பிரதிவாதிகள்
பொது அறிவிப்பு
வாதி தங்கள் மீது பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் தங்கள் இருவருக்கும் பலமுறை சம்மன் அனுப்பப்பட்டு சார்வ் ஆகாததால் சமூகம் நீதிமன்றம் உத்தரவிற்கிணங்க தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்படுகிறது. மேற்படி 4–ம் பிரிதிவாதிக்கு சம்மன் ஒட்டி சார்வ் செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி பாகப்பிரிவினை வழக்கு வருகின்ற 10.07.2025–ம் தேதி வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி 10.07.2025–ம் தேதி காலை 10.00 மணிக்கு தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி ஆட்சேபனை தெரிவிக்கலாம். ஆட்சேபனை தெரிவிக்காத பட்சத்தில் தங்கள் தரப்பில் ஆட்சேபனை இல்லை என்று அசல் வழக்கு தங்களுக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்திரவு பிறப்பிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.
சொத்து விபரங்கள்:
A.ஷெட்யூல்.
1. நாகப்பட்டினம் மாவட்டம், திருவாரூர் தாலுக்கா 113, புதூர் வட்டம், ரீசர்வே எண்.110/2–ல் மொத்தம் புகல் 0.81/3 செண்ட் இதில் உள்ள தென்னை மரங்கள் உட்பட 0.81/3 என்பது 25 குழி 1 குழி 144 சதுரடி மொத்தம் 3600 சதுரடி சதுரடி ரூ.50/–, 3600 X 50= 1,80,000/–
நான்கெல்லை விபரம்
கொத்தங்குடி வாய்க்காலுக்கு – கிழக்கு, குளத்துக்கரை பாய்ச்சலுக்கும் கன்னிக்கும் – வடக்கு, மெயின் ரோட்டிற்கும் – தெற்கு என் புஞ்சையில் கீற்று கொட்டகை கட்டிடம் இரண்டுக்கும் – மேற்கு இதற்குட்பட்டது.
B.ஷெட்யூல்.
1. நாகப்பட்டினம் மாவட்டம், திருவாரூர் பதிவு மாவட்டம் எண்.112 உமாமகேஸ்வரபுரம் வட்டம், ஆர்.எஸ்.எண்.71/3–ல் நஞ்சை 94 செண்ட் 42–ல் 67 செண்ட் 1 செண்ட் 2000 வீதம் 67 X 2000= 1,34,000/–
நான்கெல்லை விபரம்
நடேசன் வாய்க்கால் நஞ்சைக்கு – தெற்கு, பொன்னன் வாய்க்கால் நஞ்சைக்கும் வேதாந்திரம் பவர் ஏஜெண்ட் (26)க்கு – வடக்கு, பல்லவன் ஆற்றுக்கு – கிழக்கு, நாட்டு வாய்க்காலுக்கு – மேற்கு இதற்குட்பட்டது.
2. நாகப்பட்டினம் மாவட்டம், திருவாரூர் பதிவு மாவட்டம் எண்.112, உமாமகேஸ்வரபுரம் வட்டம், ஆர்.எஸ்.எண்.71/4–ல் நஞ்சை 91.4 செண்ட் 32, 40 செண்டில் 1 செண்ட் 2000 வீதம் 40 X 2000= 80,000/–
நான்கெல்லை விபரம்
நடராஜன் நஞ்சைக்கு – வடக்கு, கிதம்பர படையாச்சி எஸ்.வேதசுந்தரம் பவர் ஏஜெண்ட் நஞ்சைக்கு – தெற்கு, நாட்டு வாய்க்காலுக்கு – கிழக்கு, நடராஜன் நஞ்சைக்கு – மேற்கு இதற்குட்பட்டது நஞ்சை செண்டு 40 பூரா நஞ்சை மொத்தம் 1 ஏக்கர் 7 செண்டு.
சி.ஷெட்யூல்
நாகப்பட்டினம் ரிஜிஸ்ட்ரேசன் டிஸ்ரிக்ட் திருவாரூர் சப் ரிஜிஸ்டரைச் சேர்ந்த திருவாரூர் தாலுக்கா 113, புதூர் வட்டம், புஞ்சை ரீசர்வே எண்.93/8–ல் பூரா ஸ்தலம் செண்டு 0.15–ல் 0.14 ஏர்ஸில் 3.45 செண்ட் 1 செண்டு 2000
3 X 2000= 6000/–
நான்கெல்லை விபரம்
குளத்துக்கும் – மேற்கு, குளத்து கண்ணிக்கும் – வடக்கு, கொத்தங்குடி வாய்க்காலுக்கு – கிழக்கு, ராமையா படையாச்சி நஞ்சைக்கு – தெற்கு இதற்குட்பட்டது செண்டு 0.00.14 அதில் உள்ள தென்னை மரங்கள் 10 உட்படவும்.

ஜெ.பாலச்சந்தர், B.A.,LL.B., வழக்கறிஞர்,
மெயின் ரோடு, சேந்தமங்கலம், திருவாரூர். செல்: 96888 36616.

**மாண்புமிகு குளித்தலை குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 கோர்ட்டில் அவர்கள் சமூகம்
S.T.C.No.144/2025**

1.சந்திரா, க/பெ.ரெங்கசாமி, க.எண்.1/1, ஆத்துப்பட்டி, மத்தகிரி கிழக்கு, கடவூர் வட்டம், கரூர் மாவட்டம்.
2.ராஜாமணி, த/பெ.ரெங்கசாமி, க.எண்.1/1, ஆத்துப்பட்டி, மத்தகிரி கிழக்கு, கடவூர் வட்டம், கரூர் மாவட்டம்.
3.சாந்தி, த/பெ.ரெங்கசாமி, மேற்படி விலாசம்.
4.கோவிந்தராசு, த/பெ.ரெங்கசாமி, க.எண்.1/1, ஆத்துப்பட்டி, மத்தகிரி கிழக்கு, கடவூர் வட்டம், கரூர் மாவட்டம்.
– மனுதாரர்கள்
– எதிர் –
ரெங்கசாமி, த/பெ.கருப்பன், ஆத்துப்பட்டி, மத்தகிரி கிழக்கு, கடவூர் வட்டம், கரூர் மாவட்டம்.
– எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மனுதாரர்கள் எதிர்மனுதாரர் மீது வன்கொடுமை மற்றும் ஜீவனாம்சம் பெறக்கோரி வழக்கு தாக்கல் செய்து மனுதாரர்களுக்கு சாதகமான உத்திரவு ஜீவனாம்சம் மற்றும் வாழ்நாள் இழப்பீடுகள் கட்ட வேண்டி தீர்ப்பாகி உள்ளது. மேற்படி தொகைகளை மேற்படி எதிர்மனுதாரர் கட்டாததால் பலமுறை சம்மன் அனுப்பியும் பெற்றுக் கொள்ளாததால் மாண்புமிகு கோர்ட்டார் உத்திரவுப்படி பேப்பர் பப்ளிகேஷனுக்கு உத்திரவு செய்யப்பட்டு மேற்படி வழக்கின் வாய்தா வர இருக்கின்ற 11.07.2025–ந் தேதியில் குளித்தலை குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1–ல் நடைபெற உள்ளதால் ஆஜராக வேண்டியது. தவறும்பட்சத்தில் தங்கள் மீது ஒருதலைப்பட்ச தீர்ப்பு ஏற்படும் என்பதை தெரியப்படுத்துகிறது.

M.காஜாமொகிதீன், B.A.,B.L., வழக்கறிஞர், குளித்தலை.

**சார் ஆட்சியர் மற்றும் உட்கோட்ட நிர்வாக நடுவர் அவர்கள், குளித்தலை.
ஒ.மு.அ2/3049/2025**

நடராஜன், த/பெ.மணி, நந்தன்கோட்டை, சிந்தலவாடி கிராமம், கிருஷ்ணராயபுரம் வட்டம், கரூர் மாவட்டம்.
– மனுதாரர்
– எதிர் –
1.சார் ஆட்சியர், குளித்தலை,
2.வட்டாட்சியர், கிருஷ்ணராயபுரம்.
– எதிர்மனுதாரர்கள்
அறிவிப்பு
மேற்படி மனுதாரர் தனது மகள் "கார்சிதா" என்பவர் கடந்த 22.09.2018–ம் தேதி அன்று மேற்படி முகவரியில் உள்ள அவரது வீட்டில் பிறந்ததை எதிர்மனுதாரர் பதிவு செய்யக்கோரி மனுதாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் தங்களது ஆட்சேபனைகளை 7 தினங்களுக்குள் மேற்படி நீதிமன்றத்திடம் தெரிவித்துக் கொள்ளலாம். தவறும்பட்சத்தில் ஒருதலைபட்சமாக உத்தரவாகி விடும் என்பதை அறியவும்.

P.நாகேஷ்வரன், M.A.,B.Ed.,B.L., வழக்கறிஞர், கரூர்.

**சார் ஆட்சியர் மற்றும் உட்கோட்ட நிர்வாக நடுவர் அவர்கள், குளித்தலை.
ஒ.மு.அ2/3468/2025**

சிவக்குமார், த/பெ.மாணிக்கம், தேவச்சிகவுண்டன்புதூர், சேங்கல் கிராமம், கிருஷ்ணராயபுரம் வட்டம், கரூர் மாவட்டம்.
– மனுதாரர்
– எதிர் –
1.சார் ஆட்சியர், குளித்தலை,
2.வட்டாட்சியர், கிருஷ்ணராயபுரம்.
– எதிர்மனுதாரர்கள்
அறிவிப்பு
மேற்படி மனுதாரர் தனது தாத்தா "ராமசாமி" என்பவர் கடந்த 17.03.1983–ம் தேதி அன்று மேற்படி முகவரியில் உள்ள அவரது வீட்டில் இறந்ததை எதிர்மனுதாரர் பதிவு செய்யக்கோரி மனுதாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் தங்களது ஆட்சேபனைகளை 7 தினங்களுக்குள் மேற்படி நீதிமன்றத்திடம் தெரிவித்துக் கொள்ளலாம். தவறும்பட்சத்தில் ஒருதலைபட்சமாக உத்தரவாகி விடும் என்பதை அறியவும்.

P.நாகேஷ்வரன், M.A.,B.Ed.,B.L., வழக்கறிஞர், கரூர்.

**சார் ஆட்சியர் மற்றும் உட்கோட்ட நிர்வாக நடுவர் அவர்கள், குளித்தலை.
ஒ.மு.அ2/3301/2025**

M.சத்ரியன், த/பெ மாரிமுத்து, நல்லூர் கிராமம், குளித்தலை தாலுகா, கரூர் மாவட்டம்
– மனுதாரர்
– எதிர் –
வட்டாட்சியர், குளித்தலை.
– எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி முகவரியில் வசித்து வரும் மனுதாரர் "சத்ரியன்" என்பவர் மேற்படி முகவரியில் உள்ள வீட்டில் கடந்த 07.12.1996 அன்று பிறந்தார் என்று கூறி பிறப்பு சான்று வேண்டி மனு செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் தங்களது ஆட்சேபனைகளை 7 தினங்களுக்குள் மேற்படி நீதிமன்றத்திடம் தெரிவித்துக் கொள்ளலாம். தவறும்பட்சத்தில் ஒருதலைபட்சமாக உத்தரவாகி விடும் என்பதை அறியவும்.

M.சத்ரியன், மனுதாரர், குளித்தலை.

**வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கும்பகோணம்
த.ப. 319/2025
நாள் : 03.06.2025**

விஸ்வநாதன், த/பெ.தியாகராஜன், 3/3, எல்லைக்கல் தெரு, திருநறையூர், கும்பகோணம்.
– மனுதாரர்
– எதிர் –
உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் கும்பகோணம்.
– எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி மனுதாரர் தனது தாயார் "கமலாம்பாள்" என்பவர் கடந்த 02.03.2003 அன்று மேற்படி முகவரியில் இறந்ததை பதிவு செய்யக்கோரி எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம்.

விஸ்வநாதன், மனுதாரர், கும்பகோணம்.

**வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கும்பகோணம்
த.ப. 318/2025
நாள் : 03.06.2025**

விஸ்வநாதன், த/பெ.தியாகராஜன், 3/3, எல்லைக்கல் தெரு, திருநறையூர், கும்பகோணம்.
– மனுதாரர்
– எதிர் –
உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் கும்பகோணம்.
– எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி மனுதாரர் தனது தந்தை "தியாகராஜன்" என்பவர் கடந்த 13.05.1993 அன்று மேற்படி முகவரியில் இறந்ததை பதிவு செய்யக்கோரி எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம்.

விஸ்வநாதன், மனுதாரர், கும்பகோணம்.

**வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கும்பகோணம்
த.ப. 310/2025
நாள் : 03.06.2025**

ரோஜாகமர்னிசா, க/பெ.பௌஜிரஹ்மான், தோப்பு தெரு, திருநறையூர், கும்பகோணம்.
– மனுதாரர்
– எதிர் –
உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் கும்பகோணம்.
– எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி மனுதாரர் தனது கணவரின் தந்தை "முகமது கனி" என்பவர் கடந்த 17.05.2006 அன்று மேற்படி முகவரியில் இறந்ததை பதிவு செய்யக்கோரி எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம்.

ரோஜாகமர்னிசா, மனுதாரர், கும்பகோணம்.

## பெரும்பாக்கத்தில் 104 சவரன் கொள்ளையில் ஆட்டோ டிரைவர் கைது

**சென்னை ஜூலை 02-**
சித்தாலப்பாக்கம், வினோபா நகரை சேர்ந்தவர் மாலினி (56). இவரது கணவர் 15 ஆண்டுகளுக்கு முன் இறந்து விட்டார். இவர்களுக்கு 3 மகள்கள் உள்ளனர். இவர்கள் அனைவருக்கும் திருமணமாகி தனித்தனியே வசித்து வருகின்றனர். இந்நிலையில் மாலினி தனியாக வாடகை வீட்டில் வசித்து வருகிறார். கடந்த 9ம் தேதி தனது வீட்டை பூட்டிவிட்டு,அதேபகுதியில் குடியிருக்கும் தனது 2வது மகள் வீட்டிற்கு சென்றுதங்கினார்.இந்நிலையில், கடந்த 28ம் தேதி மாலினி வீட்டின் பீரோவில் இருந்த 104 சவரன் நகைகள் மற்றும் வெள்ளி பொருட்கள் கொள்ளை போனது கண்டு அதிர்ச்சியடைந்தார். இதுகுறித்து பெரும்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் கைரேகை நிபுனர்களுடன் சென்று தடையங்களை சேகரித்தனர்.மேலும் வீட்டின் அருகில் இருந்த சிசிடிவி பதிவுகளை ஆய்வு செய்தனர். அப்போது சித்தாலப்பாக்கம் கன்னிக்கோயில் தெருவில் உள்ள ஆட்டோ டிரைவர் ஆரோக்கியராஜ் (45), என்பவர் கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்டது தெரியவந்தது. தலைமறைவாக இருந்த அவரை, தனிப்படை போலீசார் நேற்று கைது செய்து காவல்நிலையம் கொண்டு வந்து விசாரணை நடத்தினர். அவர் கொடுத்த தகவலின் பேரில் வீட்டில் பதுக்கி வைத்திருந்த 104 சவரன் நகைகள் மற்றும் வெள்ளி பொருட்களை மீட்டனர். அவர் மீது 2022ம் ஆண்டு ஒரு கஞ்சா விற்ற வழக்கு இருப்பதும் தெரியவந்தது. தொடர்ந்து அவரிடம் விசாரணை செய்து வருகின்றனர்.

## பணி ஓய்வு பெற்ற 46 போலீசாருக்கு பாராட்டு சான்றிதழ்

**சென்னை ஜூலை 02-**
சென்னை காவல்துறையில் பணியாற்றி ஓய்வு பெற்ற 46 போலீசாருக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கி கவுரவிக்கப்பட்டது.சென்னை பெருநகர காவல்துறையில் பணியாற்றி ஓய்வு பெறும் போலீசாருக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கி கவுரவிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் சென்னை காவல்துறையில் 25 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றி வந்த ஆயுதப்படை உதவி கமிஷனர் குமரன், 2 அமைச்சுப்பணியாளர், 23 எஸ்ஐக்கள், 15 சிறப்பு எஸ்ஐ, ஒரு உதவியாளர், 1 இளநிலை உதவியாளர், 1 டேட்டா என்ட்ரி ஆபரேட்டர், 2 தூய்மைப்பணியாளர் என மொத்தம் 46 போலீசார் நேற்று பணி ஓய்வு பெற்றனர்.ஓய்வுபெற்ற 46 போலீசாரை தலைமையிட கூடுதல் கமிஷனர் விஜயேந்திர பிதாரி கவுரவித்து சால்வை அணிவித்து பாராட்டு சான்றிதழ் வழங்கி கவுரவித்தார். அதேபோல் சென்னை பெருநகர போக்குவரத்து காவல் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்ற சிறப்பு உதவி ஆய்வாளர் சையத்ஷேர் அலியை கமிஷனர் அருண் நேரில் கவுரவித்தார்.

**மாண்புமிகு கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், முசிறி அவர்கள் முன்பாக.
O.S.No.62/2024**

கரூர் வைஸ்யா வங்கி முசிறி கிளை சார்பில் அதன் கிளை மேலாளர்.
– வாதி
– எதிர் –
R.கந்தசாமி, த/பெ.ரெத்தினம், 8–104 குட்டிகாரன்புதூர், சின்னசேங்கல், சேங்கல், கிருஷ்ணராயபுரம் வட்டம், கரூர் மாவட்டம்.
– 2–ம் பிரதிவாதி
வாதி தரப்பில் தாக்கல் செய்யும் அறிவிப்பு
மேற்கண்ட வழக்கில் 1–ம் பிரதிவாதி வாதி வங்கியில் வாங்கிய கடனுக்கு 2–ம் பிரதிவாதி பொறுப்புறுதி கையொப்பம் செய்துள்ளார். தற்சமயம் மேற்படி கடனை திரும்ப செலுத்தாத காரணத்தால் சமூக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கில் சம்மன் அனுப்பியும் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தால் இந்த அறிவிப்பு கொடுக்கப்படுகிறது. 2–ம் பிரதிவாதி ஆகிய உங்கள் மீது தாக்கல் செய்துள்ள மேற்படி வழக்கு வரும் 25.07.2025 அன்று சமூகம் நீதிமன்றம் முன்பு வர இருப்பதால் அன்றைய தினம் காலை 10.00 மணியளவில் நீரோ அல்லது உமது சார்பாக யாரேனும் வழக்கறிஞரோ ஆஜராக வேண்டியது. நீர் ஆஜராகாத பட்சத்தில் மேற்படி வழக்கு உமக்கு எதிராக ஒரு தலைப்பட்சமாக தீர்ப்பாகும் என்பதை இந்த அறிவிப்பின் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

A.நாகராஜன்,M.A.B.L., வழக்கறிஞர், குளித்தலை

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers No. 1 Santhanapuram, Madurai-Trichy 4 Way Main Road, Nagamangalam, Trichy-620 012
Ph: 0431-2680969
E-Mail: trichyedi@thinaboomi.com
RNI.Regn No.61511/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

**சென்னை மாநகராட்சியுடன் வாஷ் லேப், தூய்மை மிஷன், சியர் மற்றும் ரீசைக்கிள் பின் அமைப்புகள் இணைந்து**

## சர்வதேச கழிப்பறை திருவிழாவில் குறும்பட போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு மற்றும் கேடயங்கள்



**சென்னை,ஜூலை.02**
சென்னை மாநகராட்சியுடன் வாஷ் லேப், தூய்மை மிஷன், சியர் மற்றும் ரீசைக்கிள்பின்அமைப்புகள் இணைந்து நடத்தும் சர்வதேச கழிப்பறை திருவிழா 3.0 வில் குறும்படப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு மற்றும் கேடயங்கள் 30.06.2025 அன்று அலையன்ஸ் பிரஞ்சைஸ் ஆப் மெட்ராஸில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கப்பட்டது.இக்குறும்படப் போட்டியை மாஸ்டரிங் கேம்பஸ் கேரியருடன்இணைந்து வடிவமைத்து ஒருங்கிணைக்கப்பட்டது. கடந்த ஜூன் 6 ஆம் தேதி இந்த குறும்பட திரைப் பட போட்டியின் விதி முறைகளும், "அன்றொரு நாள் கழிப்பறையில்" என்ற போட்டியின் தலைப்பும் அறிவிக்கப்பட்டது. இதில் முதல் இடத்தை ஒரு லட்சம் ரொக்க பரிசையும் 'டைலர் டர்டன் கினோ பிஸ்ட்' தயாரிப்பு நிறுவனத்தில் தங்கள் கதையை சொல்லும் வாய்ப்பையும் பிரணத்தி சாம்பள்ளே அவர்கள் இயக்கிய "சான்டாட்ஸ்" குறும்படம் தேர்வு செய்யப்பட்டது. இவருக்கு ரூபாய் ஒரு இலட்சத்திற்கான ரொக்கப்பரிசினையும் நினைவுப் பரிசினையும் போட்டியின் நடுவர்கள் திரைப்பட இயக்குனர் தியாகராஜா குமாரராஜா, திரைப்பட இயக்குனர் கிருத்திகா உதயநிதி மற்றும் கவிஞர் யுகபாரதி ஆகியோர் வழங்கினர்.இக்கலந்துரையாடலில் திரையிடப்பட்ட குறும்படங்களின் தலைப்புகள் குறித்தும் படங்களின் கதைகள் குறித்தும் பங்கேற்பாளர்களின் கேள்வி பதில்கள் உள்ளிட்ட கலந்துரையாடல்களுடன் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
வேதாரண்யம் நகராட்சி**
ஒப்பந்தப்புள்ளி அழைப்பு (E-TENDER) – (இரு உறை முறை)
ந.க.எண்.1096/2025/இ1 நாள்: 30.06.2025
1. வேதாரண்யம் நகராட்சிக்கு 15வது நிதிக்குழு மான்யம் (Tied Grant & Un Tied Grant) 2025-26ன் மற்றும் அயோத்திதாசர் பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத்திட்டம் 2024–25ன் கீழ் முறையே கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடம் இருந்து இணையதளம் வாயிலாக (https://tntenders.gov.in/) மட்டுமே ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்படுகிறது, பணியின் மொத்த மதிப்பு ரூ.160.00 இலட்சம் ஆகும்.

| பணிகளின் விவரம் |
| --- |
| 1. Construction of Storm water Drain at Kollaikadu road to Keezha Arumugakattalai link road, Fire service to sannathi link road, Gandhi nagar west side cross road and Perumal koil to South street to thetheri road. மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்): 70.00 |
| 2. Providing BT surface road (687M Length) at Thulluvetti Ayyanarkoil to Tsunami Nagar link road in Vedaranyam municipality. மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்): 90.00 |

2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை https://tntenders.gov.in/ இணையதள முகவரியில் 01.07.2025 முதல் 16.07.2025 பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். 3. ஒப்பந்தப்புள்ளி முன் கலந்தாய்வு கூட்டம் 08.07.2025 காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும். 4. ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம்: 16.07.2025 அன்று மாலை 3.00 மணி வரையில். 5. ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 16.07.2025 அன்று மாலை 3.30 மணி. 6. பணியின் மதிப்பீட்டு ஒப்பந்ததாரருக்கான தகுதி, ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகை உள்ளிட்ட விபரங்களை ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தின் மூலம் அறியவும், ஒப்பந்தப்புள்ளிகளில் ஏதேனும் மாறுதல்கள்/திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டால் அதன் அனைத்து விவரங்களும் https://tntenders.gov.in/ இணையதள முகவரியில் மட்டுமே வெளியிடப்படும்.
செ.ம.தொ.இ / 3353 / ஒப்பந்தப்புள்ளி / 2025
ஆணையர், வேதாரண்யம் நகராட்சி

**ENROLMENT NOTICE**
After ten days of the publication of this notice and within Three Months thereafter. I, **K. GAUTAM, S/o. K.Kuppusamy, DOB : 25.03.2002, Aged 23 Years, Permanently Residing at : D.No. 22/5, TNHB, Gandhigramam South, Senapiratti, Pasupathipalayam PO, Karur District, Tamilnadu - 639 004.** Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu and Puducherry, Bar Council Buildings High Court Campus, Chennai- 600 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within Ten days.
**K. GAUTAM**

**ENROLMENT NOTICE**
After ten days of the publication of this notice and within Three Months thereafter. I, **GOKUL .B, S/o. K. Baskar, DOB : 17.11.1999, Aged 26 Years, Permanently Residing at : D.No. 2A, Kamatchi Amman Kovil Middle Street, Near Karur Bus Stand, Karur District, Tamilnadu - 639 001.** Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu and Puducherry, Bar Council Buildings High Court Campus, Chennai- 600 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within Ten days.
**GOKUL .B**

**ENROLMENT NOTICE**
After ten days of the publication of this notice and within Three Months thereafter. I, **A.T. TAMILVASAN, S/o. S.A. Thiruvarasu , DOB : 22.09.2001, Aged 24 Years, Permanently Residing at : D.No. 59 South Narasimmapuram, Karur District, Tamilnadu - 639 001.** Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu and Puducherry, Bar Council Buildings High Court Campus, Chennai- 600 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within Ten days.
**A.T. TAMILVASAN**

**ENROLMENT NOTICE**
After ten days of the publication of this notice and within Three Months thereafter. I, **SHIVARITHISH .M, S/o. Murrugesan .V.P, DOB : 21.02.1999, Aged 26 Years, Permanently Residing at : D.No. 31, Dheeran Nagar 2nd Cross, Thanthoni, Karur Collectorate PO, Karur District, Tamilnadu - 639 007.** Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu and Puducherry, Bar Council Buildings High Court Campus, Chennai- 600 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within Ten days.
**SHIVARITHISH .M**

**ENROLMENT NOTICE**
After ten days of the publication of this notice and within Three Months thereafter. I, **S. ANUSHA, D/o. Sakthivel, Date of Birth : 07.12.1999, Permanently Residing at : D.No. 5AB, Periya kothur, Andankovil East, Karur District, Tamilnadu - 639 002.** Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu and Puducherry, Bar Council Buildings High Court Campus, Chennai- 600 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within Ten days.
**S. ANUSHA**

**ENROLMENT NOTICE**
After ten days of the publication of this notice and within Three Months thereafter. I, **SUBIKSHA .K, D/o. Kannan, Date of Birth : 24.10.2001, Aged 23 Years, Permanently Residing at : D.No. 581-2, J.J.Appartment, Indira Nagar, Kumbakonam, Thanjavur District, Tamilnadu - 612 001.** Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu and Puducherry, Bar Council Buildings High Court Campus, Chennai- 600 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within Ten days.
**SUBIKSHA .K**

### 2-வது டெஸ்ட் போட்டி இன்று தொடக்கம்:

# இங்கி.க்கு பதிலடி கொடுக்குமா இந்தியா..?




**பர்மிங்காம், ஜூலை 02-**

2-வது டெஸ்ட் இன்று தொடங்கவுள்ள நிலையில் வெற்றியே பெறாத மைதானத்தில் இங்கிலாந்துக்கு பதிலடி கொடுக்குமா இந்திய அணி? என்ற எதிர்பார்ப்பு இந்திய ரசிகர்கள் மத்தியில் எழுந்துள்ளது. மேலும் பர்மிங்காமில் இந்திய அணி வெற்றி பெற்றது இல்லை என்ற வரலாற்றை மாற்றுமா இந்திய அணி என்ற எதிர்பார்ப்பும் எழுந்துள்ளது.

**சுற்றுப்பயணம்...**

சுப்மன் கில் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையேயான 5 போட்டிகொண்ட டெஸ்ட் தொடரில் லீட்சில் நடைபெற்ற முதல் டெஸ்டில் இந்திய அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் தோற்றது. இதனால் 0-1 என்ற கணக்கில் பின்தங்கி உள்ளது. இந்தியா-இங்கிலாந்து அணிகள் மோதும் 2-வது டெஸ்ட் போட்டி பர்மிங்காமில் உள்ள எட்ஜ்பஸ்டன் மைதானத்தில் இன்று (2-ந்தேதி) தொடங்குகிறது.

**மிகவும் சவால்...**

லீட்ஸ் டெஸ்டில் 5 சதம் அடித்தும், 835 ரன் குவித்தும் (முதல் இன்னிங்ஸ் 471 + 2-வது இன்னிங்ஸ் 364) இந்தியா தோற்றது மிகுந்த ஏமாற்றத்தை அளித்தது. இந்த தோல்விக்கு இந்திய அணி பதிலடி கொடுக்குமா என்று எதிர்பார்க்கப்படுகிறது. இங்கிலாந்து அணியை அதன் சொந்த மண்ணில் வீழ்த்துவது மிகவும் சவாலானது. மேலும் பர்மிங்காமில் இந்திய அணி வெற்றி பெற்றது இல்லை. இங்கு ஆடிய 7 டெஸ்டில் 6-ல் தோற்றது. ஒரு போட்டி டிரா ஆனது.

**மாற்றம் இருக்கும்...**

2-வது டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணியில் அதிரடியான மாற்றம் இருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பந்துவீச்சு தான் சொதப்பலாக இருந்தது. பிரசித் கிருஷ்ணா, ஷர்துல் தாகூர், ஜடேஜா ஆகியோரது பந்து வீச்சு ஏமாற்றம் அளிப்பதாக இருந்தது. பேட்டிங்கில் சாய் சுதர்சன், கருண் நாயர் தங்களுக்கு கிடைத்த வாய்ப்பை சரியாக பயன்படுத்தி கொள்ளவில்லை. இதனால் குல்தீப் யாதவ், அர்ஷ்தீப் சிங், ஆகாஷ் தீப், நிதிஷ்குமார் ரெட்டி, வாஷிங்டன் சுந்தர் ஆகியோர் வாய்ப்பில் இருக்கிறார்கள்.

**பும்ரா ஆடுவாரா?**

வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா ஆடுவாரா? என்பது கடைசி நிமிடங்களில் தான் தெரியும். முதல் டெஸ்டில் 2 சதம் விளாசிய ரிஷப்பண்ட், ஜெய்ஸ்வால், கேப்டன் சுப்மன் கில், கே.எல்.ராகுல் 2-வது போட்டியிலும் தங்களது திறமையை வெளிப்படுத்துவது அவசியமாகும். மேலும் கடைசி கட்ட வீரர்கள் சிறப்பாக ஆடுவது முக்கியமானதாகும்.

**மாற்றமில்லை....**

பென் ஸ்டோக்ஸ் தலைமையிலான இங்கிலாந்து அணி அதிரடியான ஆட்டத்தை விரும்பி ஆடுகமாக அமைத்துள்ளது. அதே நிலையை இந்த டெஸ்டிலும் கடைபிடிக்கும். 2-வது போட்டிக்கான அந்த அணியில் மாற்றமில்லை. ஆர்ச்சர் இடம் பெற்றாலும் வாய்ப்பு அளிக்கப்படவில்லை. இங்கிலாந்து அணியின் பேட்டிங்கில் டக்கெட், அலி போப், ஹேரி புரூக், ஜோரூட், ஜேமி சுமித் ஆகியோரும் பந்துவீச்சில் ஜோஷ்டங், கேப்டன் பென் ஸ்டோக்ஸ், கார்ஸ் ஆகியோரும் நல்ல நிலையில் உள்ளனர். இன்றையை டெஸ்ட் இந்திய நேரப்படி மாலை 3.30 மணிக்கு தொடங்குகிறது. சோனி டென் ஸ்போர்ட்ஸ் சேனல்களில் நேரடியாக ஒளி பரப்பு செய்யப்படுகிறது.

## வரலாறு படைக்குமா..?

பர்மிங்காம் மைதானத்தில் இதுவரை எந்த ஆசிய அணியும் டெஸ்ட் போட்டிகளில் வெற்றி பெற்றதில்லை. இந்திய அணி இங்கு 8 போட்டிகளில் ஆடி 7-ல் தோல்வியும் ஒன்றில் டிராவும் கண்டுள்ளது. பாகிஸ்தானும் 8 போட்டிகளில் விளையாடி 5 தோல்வி, 3 டிரா கண்டுள்ளது. இலங்கை 2 போட்டிகளில் ஆடி இரண்டிலும் தோல்வியை கண்டுள்ளது. இந்நிலையில் இந்த போட்டியில் இந்தியா வெற்றி பெற்று பர்மிங்காம் மைதானத்தில் வெற்றி பெற்ற முதல் ஆசிய அணியாக வரலாறு படைக்கும் என்று ரசிகர்கள் எதிர்பார்க்கின்றனர்.

## கவர்னர் ஆர்.என்.ரவி டெல்லி பயணம்

**சென்னை, ஜூலை 02-**

தமிழக கவர்னர் ஆர்.என். ரவி நேற்று திடீர் பயணமாக டெல்லி புறப்பட்டு சென்றார்.

தமிழக அரசுக்கும், கவர்னர் கவர்னர் ஆர்.என். ரவிக்கும் இடையே தொடர்ந்து மோதல் போக்கு நீடித்து வருகிறது. இந்த நிலையில், கடந்த மாதம் 26-ந் தேதி டெல்லிக்கு ஒரு நாள் பயணமாக சென்று வந்த கவர்னர் ஆர்.என். ரவி, தற்போது 4 நாள் பயணமாக மீண்டும் டெல்லி சென்றுள்ளார்.

நேற்று காலை 8.55 மணிக்கு ஏர் இந்தியா பயணிகள் விமானத்தில் சென்னையில் இருந்து டெல்லி புறப்பட்டு சென்றுள்ளார். ஒரே வாரத்தில், 2-வது முறையாக கவர்னர் டெல்லி சென்றது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த 4 நாள் பயணத்தில் அவர், மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா உள்ளிட்டோரை சந்தித்து பேசுவார் என்று கூறப்படுகிறது.

அப்போது, தமிழகத்தில் நிலவும் சட்டம்-ஒழுங்கு நிலை குறித்து அவர் தெரிவிப்பார் என தெரிகிறது. அதனை தொடர்ந்து வரும் 4-ந் தேதி (வெள்ளிக்கிழமை) கவர்னர் ஆர். என். ரவி டெல்லியில் இருந்து சென்னை திரும்பி இருக்கிறார்.

### கவுண்டி கிரிக்கெட்டில்

# 820 ரன்கள் குவித்து சர்ரே அணி வரலாற்று சாதனை

**லண்டன், ஜூலை 02-**

கவுண்டி கிரிக்கெட்டில் சர்ரே அணி 820 ரன்கள் குவித்து வரலாற்றுச் சாதனையை நிகழ்த்தியுள்ளது.

**கவுண்டி கிரிக்கெட்...**



இங்கிலாந்தில் நடைபெறும் முதல்தர கிரிக்கெட் போட்டியான கவுண்டி கிரிக்கெட்டில் சர்ரே அணியும் டர்ஹாம் அணியும் கடந்த ஜூன் 29 முதல் விளையாடி வருகிறது. இந்தப் போட்டியில் முதலில் பேட்டிங் செய்த சர்ரே அணி 820/9 ரன்கள் குவித்தது. இந்த அணியின் தொடக்க வீரர் டோம் சிப்லி 305 ரன்கள் குவித்து அசத்தினார்.

**மூவர் சதம்....**

இந்த அணியில் சாம் கர்ரன், டான் லாரன்ஸ், வில் ஜாக்ஸ் ஆகிய மூவரும் அவர்கள் பங்கிற்கு சதம் அடித்து அசத்தினார்கள். சர்ரே அணி முதல் இன்னிங்ஸில் 161.3 ஓவர்களில் 820/9 ரன்களுக்கு டிக்ளேர் செய்தது. டுத்ததாக டர்ஹாம் அணி 33 ஓவர்களில் 62/1 ரன்கள் எடுத்துள்ளது.

**126 ஆண்டு வரலாற்றில்...**

126 ஆண்டு வரலாற்றில் சர்ரே அணியின் அதிகபட்ச இலக்கு (820) இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு முன்பாக 811 ரன்கள் எடுத்திருந்தது. வுண்டி கிரிக்கெட்டில் யார்க்ஷ்ரி அணி 1986ஆம் ஆண்டு 887 ரன்கள் அடித்ததுதான் இதுவரை முறியடிக்கப்படாமல் முதலிடத்தில் இருக்கிறது. சர்ரே அணி இந்த வரிசையில் 4-ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

**கூக்கபுரா பந்தில்...**

வழக்கமாக விளையாடும் டியூக் பந்து இல்லாமல் இந்த முறை கூக்கபுரா பந்தில் விளையாடினார்கள். ஏனெனில் அது ஆஸ்திரேலியாவுக்குச் செல்லும்போது உதவும் என்ற எண்ணத்தில் இங்கிலாந்து கிரிக்கெட் வாரியம் இந்த அறிவிப்பை வெளியிட்டது. ண்டல் வெய்யிலில் இந்தப் பந்து பந்துவீச்சாளர்களுக்கு நெருக்கடியை அளித்துவிட்டது.

# தமிழகத்தில் பெரிய வணிக நிறுவனங்களுக்கு மின் கட்டணம் உயர்வு: அமைச்சர் சிவசங்கர்

**சென்னை, ஜூலை 02-**

பெரிய தொழில் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு 3.16 சதவீதத்திற்கு மிகாமல், மின் கட்டணம் உயர்த்தப்படவுள்ளதாக போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயித்துள்ளவாறு பெரிய தொழில் மற்றும் பெரிய வணிக நிறுவனங்களுக்கு 3.16 சதவீதத்திற்கு மிகாமல் மின் கட்டணம் உயர்த்தப்படுகிறது.

வீடுகளுக்கு மின்கட்டணம் உயர்த்தப்பட்டபோதிலும் அதனை அரசே ஏற்கும். இதேபோன்று சிறு, குறு நிறுவனங்களுக்கு உயர்த்தப்பட்ட மின் கட்டணத்தையும் அரசே ஏற்கும். புதிய மின் கட்டண உயர்வு ஜூலை 1 முதல் அமலுக்கு வரும்'' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தற்போதுள்ள அனைத்து இலவச மின்சார சலுகைகளும் தொடரும் என்றும், இதன்மூலம் அனைத்து வீட்டு இணைப்புகள், குடிசை மற்றும் குறுந்தொழில் நுகர்வோர்களுக்கு மின் கட்டணம் உயர்வு இல்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மின்சார ஒழுங்குமுறை வாரியம் ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட சதவீத கட்டண உயர்வை மின்சாரத் துறைக்கு பரிந்துரை செய்யும். இந்தப் பரிந்துரையின் அடிப்படையில், மின்சார கட்டணங்கள் மாற்றி அமைக்கப்படும். அந்த வகையில், இந்த ஆண்டில் பெரிய தொழில் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு மட்டும் மின் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது.

# மாற்றுத்திறனாளிகளுக்கான நியமன கவுன்சிலர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

## தமிழக அரசு அறிவிப்பு

**சென்னை, ஜூலை 02-**

தமிழகத்தில் உள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு நியமன கவுன்சிலர் பதவிக்கு வரும் 17-ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

தமிழகத்தில் உள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு நியமன கவுன்சிலர் பதவி அளிக்க அரசு உத்தரவிட்டுஉள்ளது. மாற்றுத்திறனாளிகள், தேர்தலில் போட்டியிடாமல் நியமன முறையில் உள்ளாட்சியில் பதவிகளை பெறும் வகையில், சட்டசபையில் மசோதா தாக்கல் செய்யப்பட்டது.

அதன்படி, தற்போது அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சிகளிலும், தலா ஒரு தகுதியான மாற்றுத்திறனாளி நபருக்கு, நியமன கவுன்சிலர் பதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மாநகராட்சி மற்றும் நகராட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகள் நியமன உறுப்பினர்களாக இணைய விண்ணப்பிக்கலாம்.

பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்றத்திற்கு https://chennaicorporation.gov.in என்ற இணையதள முகவரியிலும், பிற மாநகராட்சி/நகராட்சி மன்றத்திற்கு https://tnurbantree.tn.gov.in/whatsnew என்ற இணையதள முகவரியிலும், பேரூராட்சி மன்றத்திற்கு https://tn.gov.in/dtp அல்லது https://dtp.tn.gov.in என்ற இணையதள முகவரியிலும் 17-ம் தேதி வரை விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

வருகிற 17-ந்தேதி வேட்பு மனுக்களை சமர்ப்பிக்க கடைசி நாளாகும். விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்ய ஆட்சியர் தலைமையில் 5 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

# காவலாளி அஜித் வழக்கில் சிறப்பு விசாரணைக் குழு

## த.வெ.க. தலைவர் விஜய் வலியுறுத்தல்

**சென்னை, ஜூலை 02-**



திருப்புவனம் அஜித்குமார் காவல் மரண வழக்கில் உயர் நீதிமன்ற நேரடிக் கண்காணிப்பில், சிறப்புப் புலனாய்வுக் குழு அமைத்து விசாரணை நடத்தி விரைந்து தீர்ப்பு வழங்க வேண்டும் என த.வெ.க. தலைவர் விஜய் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "அஜித்குமார் காவல் மரண வழக்கில் எந்த அளவிற்குக் கொடூரமாக, மனிதாபிமானம் அறவே அற்று, சாமானியருக்கு அநீதி இழைக்கும் அறமற்ற துறையாக காவல் துறை நடந்து கொள்கிறது என்பதை இந்தச் சம்பவம், வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.


கடந்த நான்கு ஆண்டுகளில் 24 பேர் காவல் நிலையத்தில் மரணம் அடைந்திருப்பதாக உயர் நீதிமன்ற மதுரைக் கிளை நீதிபதிகள் அதிருப்தி தெரிவித்துள்ள நிலையில், அந்த 24 பேரின் மரணம் தொடர்பாக, வெள்ளை அறிக்கையைத் தமிழ்நாடு அரசு உடனடியாக வெளியிட வேண்டும்.

அஜித்குமார் காவல் மரண வழக்கில் காவல் துறையினரே கொலைக் குற்றவாளிகள் என்பதால், இதனைத் தமிழ்நாடு காவல் துறை விசாரித்தால், விசாரணை நியாயமாக நடைபெறாது. எனவே, உயர் நீதிமன்றத்தின் நேரடிக் கண்காணிப்பில் சிறப்பு விசாரணைக் குழுவை அமைத்து, விரைந்து விசாரணை நடத்தி நீதியை நிலைநாட்ட வேண்டும். இல்லையேல் வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில், தமிழக வரலாற்றில் தி.மு.க.வுக்கு தோல்வியை மக்கள் பரிசாக அளிப்பார்கள் எனக் குறிப்பிட்டுள்ளார்.

### ஐ.சி.சி. டி-20 பேட்டிங் தரவரிசை:

# ஸ்மிரிதி மந்தனா முன்னேற்றம்

**துபாய், ஜூலை 02-**



இந்திய அணியின் துணைக் கேப்டன் ஸ்மிரிதி மந்தனா, ஐ.சி.சி.-யின் டி20 பேட்டர்ஸ் தரவரிசையில் 3-வது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

**முன்னேற்றம்...**

இங்கிலாந்துக்கு எதிராக 62 பந்தில் 112 ரன்கள் விளாசி, இந்தியா 97 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற காரணமாக இருந்தார். இதன்மூலம் 771 புள்ளிகள் பெற்று 3ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார். ஆஸ்திரேலியாவின் பெத் மூனி 794 புள்ளிகளுடன் முதல் இடத்தில் உள்ளார். வெஸ்ட் இண்டீசின் ஹேலே மேத்யூஸ் 774 புள்ளிகளுடன் 2ஆவது இடத்தில் உள்ளது.

**பேட்டிங்கில் நம்பர் ஒன்...**

ஷபாலி வர்மா 13ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ள நிலையில், ஹர்லீன் தியோல் 86ஆவது இடத்தையும் பிடித்துள்ளனர். ஸ்மிரிதி மந்தனா ஒருநாள் போட்டிக்கான பேட்டிங் வரிசையில் நம்பர் ஒன் இடத்தில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 2-வது டெஸ்ட்: ஆடும் லெவனை அறிவித்தது இங்கிலாந்து அணி

**பர்மிங்ஹாம், ஜூலை 02-**




இந்திய அணி உடனான இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கான ஆடும் லெவனை அறிவித்துள்ளது இங்கிலாந்து கிரிக்கெட் அணி.

**சுற்றுப்பயணம்...**

'ஆண்டர்சன் சச்சின் டிராபி' டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக ஷுப்மன் கில் தலைமையிலான இந்திய அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. 5 போட்டிகள் கொண்ட இந்த தொடரின் முதல் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் 1-0 என இங்கிலாந்து முன்னிலை பெற்றுள்ளது.

**அணி அறிவிப்பு...**

இந்நிலையில், இன்று (ஜூலை 2) இங்கிலாந்தின் பர்மிங்ஹாமில் இந்த தொடரின் இரண்டாவது டெஸ்ட் போட்டி நடைபெற உள்ளது. இந்தப் போட்டிக்கான ஆடும் லெவனை இங்கிலாந்து அணி அறிவித்துள்ளது. இங்கிலாந்து ஆடும் லெவன்: ஸாக் கிராவ்லி, பென் டக்கெட், ஆலி போப், ஜோ ரூட், ஹாரி புரூக், பென் ஸ்டோக்ஸ் (கேப்டன்), ஜேமி ஸ்மித் (விக்கெட் கீப்பர்), கிறிஸ் வோக்ஸ், பிரைடன் கார்ஸ், ஜோஷ் டங், ஷோயப் பஷீர்.

**ஆர்ச்சர் இல்லை...**

இந்தப் போட்டிக்கான இங்கிலாந்து அணியில் வேகப்பந்து வீச்சாளர் ஜோஃப்ரா ஆர்ச்சர் இடம் பெற்றிருந்தார். சுமார் நான்கு ஆண்டுகளுக்கு பிறகு அவர் டெஸ்ட் அணியில் இடம்பிடித்தது குறிப்பிடத்தக்கது. இருப்பினும் ஆடும் லெவனில் அவர் இடம்பெறவில்லை.

**பும்ரா விளையாடுவாரா?**

பர்மிங்ஹாம் டெஸ்ட் போட்டியில் இந்திய வீரர் பும்ரா விளையாடுகிறாரா என்பது இதுவரை சஸ்பென்ஸாகவே உள்ளது. அவர் இந்த தொடரில் 3 போட்டிகளில் மட்டுமே விளையாடுவார் என ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டது. ஆனால், அது எந்தப் போட்டி என தெரிவிக்கபடவில்லை. முதல் போட்டியில் அவர் விளையாடி இருந்தார். அதனால் எஞ்சியுள்ள 4 போட்டிகளில் இன்னும் இரண்டில் தான் அவர் விளையாடுவார்.

**சுழற்பந்து வீச்சாளர்கள்...**

அவருக்கு வொர்க்லோடை குறைக்கும் நோக்கில் இந்த விலக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இந்திய அணி இந்த தொடரில் பின்னிலையில் உள்ள நிலையில் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பும்ரா விளையாடுவாரா என்ற எதிர்பார்ப்பு கூடியுள்ளது. அவர் விளையாடாத பட்சத்தில் இந்திய அணி இரண்டு சுழற்பந்து வீச்சாளர்களுடன் இந்தப் போட்டியில் விளையாடும் என தகவல்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## சி.எஸ்.கே. அதிகாரி விளக்கம்

சஞ்சு சாம்சனை டிரேடிங் முறையில் மாற்ற ராஜஸ்தான் விருப்பம் தெரிவித்துள்ளதாக கூறப்பட்டது. அதன்படி சஞ்சு சாம்சனை ராஜஸ்தான், சி.எஸ்.கே. அணிக்கு டிரேடிங் முறையில் கொடுக்கும் பட்சத்தில் அவருக்கு பதிலாக அதிரடி ஆல் ரவுண்டர் ஷிவம் துபே மற்றும் சுழற்பந்து வீச்சாளர் ரவிச்சந்திரன் அஸ்வின் ஆகியோரை கேட்பதாக தகவல் வெளியாகியது. இந்நிலையில் சஞ்சு சாம்சனை நாங்கள் வாங்க பார்ப்பது உண்மைதான் என்று சி.எஸ்.கே. மூத்த அதிகாரி ஒருவர் தகவல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், "நாங்கள் நிச்சயமாக சஞ்சுவைப் பார்க்கிறோம். அவர் ஒரு இந்திய விக்கெட் கீப்பர் மற்றும் தொடக்க ஆட்டக்காரர். எனவே அவர் கிடைத்தால், அவரை எங்கள் அணியில் நிச்சயமாக சேர்ப்போம். ஆனால் அவருக்காக யாரை விட்டுக்கொடுப்பது என்பது குறித்து நாங்கள் முடிவெடுக்கவில்லை, ஏனெனில் விஷயம் அவ்வளவு தூரம் செல்லவில்லை. ஆனால் கொள்கையளவில், நாங்கள் ஆர்வமாக உள்ளோம்'' என்று கூறினார்.

## துணை பயிற்சியாளர் தகவல்

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 2-வது போட்டி இன்று பர்மிங்காமில் தொடங்க உள்ளது. இந்த போட்டியில் வெற்றி பெற இரு அணியினரும் தீவிர பயிற்சியை மேற்கொண்டு வருகின்றனர். இந்த போட்டியில் இந்திய அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான ஜஸ்பிரித் பும்ரா பங்கேற்க மாட்டார் என்ற செய்திகள் காணப்படுகின்றன. பணிச்சுமை காரணமாக அவருக்கு ஓய்வு அளிக்கப்பட உள்ளதாக கூறப்பட்டது.

இந்நிலையில் 2-வது போட்டியில் பும்ரா விளையாடுவாரா? இல்லையா? என்பது குறித்து இந்திய அணியின் துணை பயிற்சியாளரான ரையான் டென் டஸ்சாட் புதிய தகவல் ஒன்றை அளித்துள்ளார். இது தொடர்பாக அவர் பேசுகையில், "பும்ரா இந்த போட்டியில் விளையாட தயார் தான். ஆனால் இந்த போட்டியில் அவர் விளையாடுவாரா இல்லையா என்பது குறித்து நாங்கள் இன்னும் முடிவு செய்யவில்லை'' என்று கூறினார்.

## இந்திய ரசிகர்களால் சாதனை

லண்டனில் கடந்த ஜூன் 11-இல் தொடங்கிய உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் தென்னாப்பிரிக்க அணி வென்று கோப்பையை வென்றது. இந்தப் போட்டி இந்திய அணி விளையாடாமலேயே இந்தியாவில் அதிகமான பார்வைகளைப் பெற்ற டெஸ்ட் போட்டியாக மாறியுள்ளது. இந்தியாவில் இந்தப் போட்டியை ஒளிபரப்பிய ஸ்டார் ஸ்போர்ட்ஸ் நெட்வொர்க்கில் 2.94 பில்லியன் (294 கோடி) நிமிடப் பார்வைகள் தொலைக்காட்சியில் பார்க்கப்பட்டுள்ளது. அதிகபட்சமாக 47 மில்லியன் சென்றடைந்தது.

உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் வரலாற்றில் கடந்த 2023-இல் இந்தியா- ஆஸி. அணி மோதிய போட்டி 225 மில்லியன் டிஜிட்டல் பார்வைகளைக் கடந்திருந்தது குறிப்பிடத்தக்கது. 2023-இல் சாம்பியன் பட்டம் வென்ற ஆஸ்திரேலிய அணி 2025-இல் தென்னாப்பிரிக்காவிடம் வீழ்ந்தது. இந்தப் போட்டியை நேரில் பார்க்க 1,09,227 பேர் சென்றிருந்தனர்.

## ஸ்பெயின் வீராங்கனை தோல்வி

கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் ஒன்றான விம்பிள்டன் டென்னிஸ் தொடர் லண்டனில் நடந்து வருகிறது. இதில் உலகின் முன்னணி வீரர், வீராங்கனைகள் களமிறங்குகின்றனர். பெண்கள் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்றில் ஸ்பெயின் வீராங்கனை பவுலா படோசா, பிரிட்டனின் கேடி பவுல்டர் உடன் மோதினார்.

இதில் முதல் செட்டை 6-2 என பிரிட்டன் வீராங்கனை வென்றார். இதற்கு பதிலடி கொடுக்கும் விதத்தில் பவுலா படோசா 2வது செட்டை 6-3 என கைப்பற்றினார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் 3வது செட்டை பவுல்டர் 6-4 என வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார். இதன்மூலம் தரவரிசையில் 9வது இடத்தில் உள்ள பவுலா படோசா தொடரில் இருந்து வெளியேறினார்.

### இளைஞர் மரண வழக்கில் கைதான

# 5 காவலர்கள் 15 நாள் நீதிமன்ற காவலில் சிறையில் அடைப்பு

**சிவகங்கை, ஜூலை 02-**

அஜித்குமார் மரண வழக்கு தொடர்பாக கைதான 5 காவலர்களையும் 15 நாள் நீதிமன்ற காவலில் வைக்க நீதிபதி வெங்கடேஷ் பிரசாத் உத்தரவிட்டுள்ளார். கைதான காவலர்களான பிரபு, ஆனந்த், கண்ணன், ராஜா, சங்கரமணிகண்டன் ஆகியோர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

சிவகங்கை மாவட்டம் மடப்புரம் பத்திரகாளியம்மன் கோவிலில் காவலாளியாக பணியாற்றி வந்த அஜித்குமார் நகை திருட்டு வழக்கு விசாரணைக்காக போலீசார் அழைத்துச் சென்றிருந்த போது உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இச்சம்பவத்துக்கு அரசியல் கட்சி தலைவர்கள் பலரும் கண்டனம் தெரிவித்து வந்தனர்.

இந்த நிலையில், அஜித்குமார் மரண வழக்கு தொடர்பாக கைதான 5 காவலர்களையும் 15 நாள் நீதிமன்ற காவலில் வைக்க நீதிபதி வெங்கடேஷ் பிரசாத் உத்தரவிட்டுள்ளார். கைதான காவலர்களான பிரபு, ஆனந்த், கண்ணன், ராஜா, சங்கரமணி கண்டன் ஆகியோர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அஜித்குமார் மரண வழக்கு பிரேத பரிசோதனை அடிப்படையில் கொலை வழக்காக மாற்றப்பட்டுள்ளது. மேலும் இவ்வழக்கு தொடர்பாக 6 காவர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்ட நிலையில் 5 காவலர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### காவலாளி அஜித்குமார் வழக்கில்

# போலீசாரின் உறவினர்கள் முற்றுகையால் பரபரப்பு

**திருப்புவனம், ஜூலை 02-**

போலீஸார் விசாரணையில் கோயில் காவலாளி உயிரிழந்த வழக்கில் 5 காவலர்கள் குடும்பத்தினர் காவல்நிலையத்தை முற்றுகையிட்டனர்.

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே உள்ள மடப்புரத்தைச் சேர்ந்தவர் அஜித்குமார் (27). அங்குள்ள பத்ரகாளியம்மன் கோயிலில் தனியார் நிறுவன ஒப்பந்த காவலாளியாக பணிபுரிந்தார். இவரை ஜூன் 27-ம் தேதி திருட்டு வழக்கு தொடர்பாக மானாமதுரை உட்கோட்ட தனிப்படை போலீஸார் அழைத்துச் சென்றனர். போலீஸார் தாக்கியதில் ஜூன் 28-ம் தேதி அஜித்குமார் உயிரிழந்தார்.

இதனிடையே இச்சம்பவம் தொடர்பாக தனிப்படை காவலர்கள் பிரபு, கண்ணன், சங்கரமணிகண்டன், ராஜா, ஆனந்த், ராமச்சந்திரன் ஆகிய 6 பேரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆஷிஷ் ராவத் பணியிடை நீக்கம் செய்தார்.

மேலும் இச்சம்பவம் குறித்து திருப்புவனம் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் வெங்கடேஷ் பிரசாத் விசாரணை நடத்தினார். இதனிடையே அஜித்குமாரின் உடலில் 18 இடங்களில் காயங்கள் இருப்பதும், ரத்தக் கசிவு இருந்ததும் பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, இந்த வழக்கு கொலை வழக்காக மாற்றப்பட்டது. தொடர்ந்து தனிப்படை காவலர்கள் பிரபு, கண்ணன், சங்கர மணிகண்டன், ராஜா, ஆனந்த் ஆகிய 5 பேரும் கைது செய்யப்பட்டு மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்நிலையில், காவலர்கள் கைதைக் கண்டித்து, நேற்று காலை அவர்களது குடும்பத்தினர் திருப்புவனம் காவல் நிலையத்தை முற்றுகையிட்டனர். தொடர்ந்து அவர்கள் கூறுகையில், "அரசுக்காக வேலை பார்த்ததுக்கு தண்டனையா? எங்களையும் கைது செய்து செய்ய வேண்டும்'' என்றனர்.

# சினிமா CINI செய்திகள்

## ‘லவ் மேரேஜ்’ திரைவிமர்சனம்



மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த விக்ரம் பிரபுக்கு 33 வயதாகியும் திருமணமாகவில்லை. ஒருவழியாக கோவை மாவட்டத்தைச் சேர்ந்த சுஷ்மிதா பட் அவரை திருமணம் செய்துக் கொள்ள சம்மதிக்கிறார். அதன்படி, பெண் வீட்டில் நிச்சயம் நடைபெற, அன்றைய இரவு மாப்பிள்ளை குடும்பத்தார் அங்கேயே தங்க வேண்டிய சூழல் ஏற்படுகிறது. இதற்கிடையே கொரோனா ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப் படுவதால், மேலும் சில நாட்கள் அங்கு தங்குகிறார்கள்.

இந்நிலையில், மணப் பென் சுஷ்மிதா வீட்டை விட்டு வெளியேறுகிறார். பிறகு என்ன நடந்தது என்பதுதான் கிளைமாக்ஸ். விக்ரம் பிரபு திருமணம் ஆகாத சோகத்துடன் வலம் வந்தாலும், அதை முகத்தில் காட்டாமல் சமாளிக்கும் காட்சிகளில் சிறப்பாக நடித்திருக்கிறார். நாயகியாக நடித்திருக்கும் சுஷ்மிதா கொடுத்த வேலையை குறையில்லாமல் செய்திருக்கிறார். நாயகியின் தங்கை மீனாட்சி தினேஷ், சத்யராஜ், ரமேஷ் திலக், கஜராஜ், அருள்தாஸ் என அனைவரும் அளவாக அருமையாக நடித்திருக்கிறார்கள்.

ஷான் ரோல்டனின் இசையில் பாடல்களும், பின்னணி இசையும் ரசிக்க வைக்கிறது. எழுதி இயக்கியிருக்கும் சண்முக பிரியன் காதல் கதையை, கலகலப்பான குடும்ப கதையாக இயக்கியிருக்கிறார். மொத்தத்தில், ‘லவ் மேரேஜ்’ குடும்பமாக பார்க்க கூடிய ஒரு ஜாலியான படம்.

## ‘கண்ணப்பா’ திரைவிமர்சனம்



கடவுள் இல்லை. கடவுள் என்பதே இல்லை, சிலைகள் அனைத்தும் வெறும் கற்கள் தான் என்ற மனநிலையில் இருந்த இளைஞன் ஒருவன் எப்படி சிவனின் பக்தராக உருவெடுக்கிறார் என்பதே கண்ணப்பா படத்தின் ஒரு வரிக் கதை. கதையின் நாயகனாக நடித்திருக்கும் விஷ்ணு மஞ்சு, கடவுள் மறுப்பாளராக புரட்சிகரமான வசனங்கள் பேசுவது, போர் வீரனாக அம்பு எய்வது, காதல் வயப்பட்டு மயங்குவது, சிவபக்தராக மாறி பக்தி பரவசத்தில் உருகுவது என தனது அபார நடிப்பைக் கொடுத்துள்ளார். நாயகி ப்ரீத்தி கவர்ந்திழுக்கும் அழகில் அசத்துகிறார்.

மோகன் பாபு, மோகன் லால், பிரபாஸ், அக்ஷய் குமார், காஜல் அகர்வால், சரத்குமார், மதுபாலா, ஐஸ்வர்யா என அனைவரும் அருமையான நடிப்பைக் கொடுத்துள்ளனர். ஷெல்டன் சாவின் ஒளிப்பதிவு அருமை. ஸ்டீபன் தேவஸீ இசையில் பாடல்கள் அனைத்தும் ஓகே ரகம். படத்தொகுப்பாளர் ஆண்டனியின் உழைப்பு கதை நகர்த்தலில் தெரிகிறது.

இயக்குநர் முகேஷ் குமார் சிங் கண்ணப்பர் என்ற சிவ பக்தரின் பக்தியின் ஆழத்தை வெளிக்காட்டும் ஒரு படமாக இருந்தாலும், பக்தி என்ற பெயரில் மூடப்பழக்கங்களில் மூழ்கி இருப்பவர்களுக்கு சாட்டையடி கொடுக்கும் காட்சிகளை வைத்திருப்பது பாராட்டக்குரியது. மொத்தத்தில், ‘கண்ணப்பா’ பக்தி படம் மட்டும் அல்ல. இது ஒரு நாத்திகத்தை பிரதிபலிக்கும் பிரமாண்ட படம்

## விஜய் சேதுபதி மகனை இயக்கும் சண்டை இயக்குனர்



விஜய் சேதுபதி மகன் சூர்யா விஜய் சேதுபதி கதாநாயகனாக நடிக்கும் படம் பீனிக்ஸ். பிரபல சண்டை இயக்குனர் அனல் அரசு இயக்கியுள்ள இப்படம் வரும் ஜூலை 4 அன்று திரைக்கு வரும் நிலையில், இந்த படத்தின் டிரைலர் வெளியீட்டு விழா சென்னையில் சமீபத்தில் நடைபெற்றது.

இந்த விழாவில் விஜய் சேதுபதி உள்ளிட்ட பல திரை பிரபலங்கள் கலந்து கொண்டனர். விழாவில் விஜய் சேதுபதி பேசுகையில், 2019 ல் எனக்கு அனல் அரசு அவர்கள் ஒரு கதை சொன்னார், ஆனால் அப்போது பண்ண முடியவில்லை. பிறகு சூர்யா இந்த கதையில் நடித்தால் எப்படி இருக்கும் என்று கேட்டார், எனக்கு ஒரு பக்கம் மகிழ்ச்சியாகவும் ஒரு பக்கம் பயமாகவும் இருந்தது. என் பையனின் முடிவுகளை அவரே எடுக்க வேண்டும் என்று நினைத்தேன். ஆனால், அனல் அரசு மூலமாக அவர் சினிமாவில் அறிமுகமாவது ஒரு பாக்கியம் என்று நினைக்கிறேன் என்றார்.

இயக்குநர் அனல் அரசு பேசுகையில், “இந்த இடத்திற்கு வருவதற்கு எனது அப்பா மிக முக்கிய காரணம். தயாரிப்பாளர் ராஜலட்சுமி இல்லையென்றால் இந்த படமே இல்லை. இந்த படத்தை மிகப்பெரிய படமாக மாறியதற்கு இவரும் முக்கிய காரணம் சண்டை பயிற்சி இயக்குனராக 200 படங்கள் பண்ணி இருந்தாலும், ஒரு இயக்குனராக என்னுடைய முதல் படம் இது. அனைவரும் இந்த படத்தை பார்த்து ஆதரவு தர வேண்டும் என கேட்டுக்கொண்டார்.



திருமங்கலம் தொகுதிக்குட்பட்ட டி.கல்லுப்பட்டி ஒன்றியம் பேரையூர் நீதிமன்றம் முன்பாக சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.10 லட்சம் செலவில் கட்டப்பட்ட பயணிகள் நிழற்குடையை முன்னாள் அமைச்சர், சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத்தலைவர் ஆர்.பி.உதயகுமார் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். அப்பகுதி இளைஞர்களுக்கு விளையாட்டு அணி உறுப்பினர் படிவத்துடன் விளையாட்டு உபகரணங்களை வழங்கி வாழ்த்து தெரிவித்தார். உடன் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

## ‘மார்கன்’ திரைவிமர்சனம்



பெண் ஒருவர் மர்மமாக இறந்து கிடக்கிறார். கொலை பற்றி விசாரித்து வரும் காவல் அதிகாரி விஜய் ஆண்டனி, அஜய் தீசன் என்பவரை விசாரணை வளையத்திற்குள் கொண்டு வருகிறார். அப்போது, அதே பாணியில் மேலும் ஒரு பெண்ணும் கொலை செய்யப்படுகிறார். இந்த கொலைகளுக்கான பின்னணி என்ன?, அஜய் தீசன் யார்? உண்மையான குற்றவாளியை விஜய் ஆண்டனி எப்படி கண்டுபிடிக்கிறார்? என்பதை சொல்லும் படந்தான் மார்கன். விஜய் ஆண்டனி விசாரணை அதிகாரி வேடத்தில் அமர்க்களமாக நடித்திருக்கிறார்.

அறிமுக நடிகர் அஜய் தீசனின் நடிப்பு, ஆக்‌ஷன், ரொமான்ஸ், செண்டிமெண்ட் என அனைத்திலும் அசத்தயிருக்கிறார். சமுத்திரக்கனி, பிரிகிடா, மகாநதி சங்கர், ராமச்சந்திரன், தீப்ஷிகா, அர்ச்சனா, கனிமொழி என மற்ற நடிகர்கள் திரைக்கதைக்கு பலம் சேர்த்திருக்கிறார்கள். எழுதி இயக்கியிருக்கும் லியோ ஜான் பால் வெற்றிகரமான படத்தொகுப்பாளர் என்பதால், எந்த விசயத்தை எவ்வளவு நேரத்தில், எப்படி சொல்ல வேண்டும் என்பதில் மிக தெளிவாக சொல்லி இருக்கிறார். மொத்தத்தில், ‘மார்கனும்’ வழக்கமான ஒருவன் தான்.

## ‘DNA’ படக்குழுவினரின் நன்றி அறிவிப்பு விழா



ஒலிம்பியா மூவிஸ் S. அம்பேத்குமார் வழங்க, நெல்சன் வெங்கடேசன் இயக்கத்தில், அதர்வா முரளி - நிமிஷா சஜயன் நடித்து, கடந்த 20 தேதியன்று வெளியான படம் ‘DNA’. இப்படக்குழுவினர் நன்றி அறிவிப்பு விழாவினை சென்னையில் ஒருங்கிணைத்திருந்தனர். இந்த விழாவில், நாயகி நிமிஷா சஜயன் பேசுகையில், ‘’ பொதுவாக ஒரு திரைப்படம் வெளியாகும் போது இந்த படம் ஹிட் ஆகுமா? ஹிட்டாகாதா? என்ற பதட்டம் இருந்து கொண்டிருக்கும். ஆனால் இந்தப் படத்தின் பத்திரிக்கையாளர் காட்சி திரையிட்ட பிறகு கிடைத்த விமர்சனத்தால் படம் வெளியான தருணத்தில் நான் எந்த வித பதட்டமும் இல்லாமல் நிம்மதியாக உறங்கினேன்.

பின்னர் அதர்வா முரளி பேசுகையில், இந்தப் படத்தின் படப்பிடிப்பின் போது ஒவ்வொரு நாளும் ஒரு நல்ல படத்தில் நடிக்கிறோம் என்ற உணர்வுடன் தான் கலந்து கொண்டேன். இந்த படத்திற்கான பத்திரிக்கையாளர்கள் காட்சிக்குக் பின், அனைவரும் எழுந்து நின்று கைத்தட்டி வரவேற்பை தெரிவித்த போது.. உண்மையில் நெகிழ்ச்சி அடைந்தேன். ‘வேர்ட் ஆஃப் மவுத்’ என்று சொல்வதை இந்தப் படத்தின் வெற்றி மூலம் அனுபவப்பூர்வமாக உணர்ந்திருக்கிறேன் என்று நெகிழ்வாக பேசினார்.

## நத்தம் பகுதி முருகன் கோவில்களில் சஷ்டி பூஜை



**நத்தம், ஜூலை 02-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே திருமலைக் கேணி சுப்பிரமணிய சுவாமி கோவிலில் ஆனி மாத சஷ்டி பூஜை விழா நடந்தது.

இதையொட்டி முருக பெருமானுக்கு பால்,பழம், பன்னீர், விபூதி, சந்தனம், புஷ்பம் உள்ளிட்ட 16 வகையான அபிஷேகங்களும், சிறப்பு அலங்காரமும், தீபாராதனைகளும் நடந்தது.

மேலும் அருகிலுள்ள காமாட்சி மவுனகுருசாமி மடத்திலும் சிறப்பு பூஜைகள் நடந்தது.

இதில் சுற்றுவட்டாரங்களிலிருந்து ஏராளமான பக்தர்கள் கோவிலுக்கு வந்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர்.

இதைபோலவே நத்தம் கோவில்பட்டி கைலாசநாதர் கோவில் உள்பிரகாரத்தில் அமைந்துள்ள தண்டபாணி சன்னதியிலும், குட்டூர் உண்ணாமுலை அம்பாள் கோவிலில் உள்ள முருகப்பெருமான் சன்னதியிலும் சஷ்டியையொட்டி சிறப்பு பூஜைகள் நடந்தது. இங்கும் பக்தர்கள் கலந்து கொண்டனர்.

## நத்தத்தில் தி.மு.க. வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டம்: அமைச்சர் சக்கரபாணி பங்கேற்பு



**நத்தம், ஜூலை 02-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தத்தில் தனியார் திருமண மண்டப வளாகத்தில் சட்டமன்ற தொகுதி தி.மு.க. சார்பாக ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை மற்றும் வாக்குச்சாவடி முகவர்களுக்காக கூட்டம் நடந்தது. இதற்கு முன்னாள் எம்.எல்.ஏ ஆண்டிஅம்பலம் தலைமை தாங்கினார். தி.மு.க. ஒன்றிய செயலாளர்கள் ரத்தினக்குமார், சேக்சிக்கந்தர்பாட்சா, பழனிச்சாமி, நகர செயலாளர் ராஜ்மோகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் உணவு மற்றும் உணவு வழங்கல்துறை அமைச்சர் சக்கரபாணி கலந்து கொண்டு டிஜிட்டல் ஏஜென்ட் மூலம் நடைபெறும் உறுப்பினர் சேர்க்கை குறித்தும், வாக்குச்சாவடிகளில் முகவர்கள் செயல்படும் விதம் குறித்தும் விளக்கி பேசினார். இதில் மாநில பொதுக்குழு உறுப்பினர் முத்துகுமார்சாமி, நத்தம் தொகுதி பார்வையாளர் ரஞ்சன்துரை, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் சுந்தரமூர்த்தி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் இப்ரில் ஆசித், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் ராஜகோபால், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் சிவா,நகர இளைஞரணி அமைப்பாளர் சேக்சிக்கந்தர்தாரிக் உள்ளிட்ட மாவட்ட,ஒன்றிய, நகர தி.மு.க. நிர்வாகிகள், வாக்குச்சாவடி முகவர்கள் கலந்து கொண்டனர்.

## தேனி மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நல விடுதிகளில் பயின்ற 10-ம் வகுப்பு மாணவிகளுக்கு கேடயம்

### மாவட்ட கலெக்டர் ராஞ்ஜீத் வழங்கினார்



**தேனி, ஜூலை 02-**

தேனி மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில், 2024-2025-ம் கல்வியாண்டில் 10-ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் ஆதிதிராவிடர் நல விடுதிகளில் பயின்று விடுதிகள் அளவில் பாடப்பிரிவுகளில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவியர்களுக்கு மாவட்ட கலெக்டர் ரஞ்ஜீத் சிங் கேடயங்களை வழங்கி, வாழ்த்து தெரிவித்தார்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியர்கள் விடுதிகளில் தங்கி பயில்வதற்கு ஏதுவாக ஆதிதிராவிடர் நலத்துறை விடுதிகள் செயல்பட்டு வருகிறது. மேலும், பழங்குடியினர் இனத்தை சார்ந்த மாணவ மாணவியர்களுக்கு உண்டு உறைவிடப் பள்ளிகளும் செயல்பட்டு வருகிறது. தேனி மாவட்டத்திலுள்ள 9 விடுதிகளில் 474 மாணவர்களும், 399 மாணவியர்களும் என மொத்தம் 873 மாணவ, மாணவியர்கள் பயின்று வருகின்றனர்.

2024-2025-ம் கல்வியாண்டில் 10-ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் கணிதம் பாடப்பிரிவில் முதல் மூன்று இடங்களை பெற்ற 3 மாணவியர்களுக்கும், அறிவியல் பாடப்பிரிவில் முதல் மூன்று இடங்களை பெற்ற 6 மாணவியர்களுக்கும், சமூக அறிவியல் பாடப்பிரிவில் முதல் மூன்று இடங்களை பெற்ற 5 மாணவியர்களுக்கும் என மொத்தம் 14 மாணவியர்களுக்கு மாவட்ட கலெக்டர் கேடயங்களை வழங்கி, பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் மகாலட்சுமி, மாவட்ட உதவி வன அலுவலர் அரவிந்த், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் சம்பூர்ணம் மற்றும் விடுதி காப்பாளர்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

## போதை பழக்கத்திற்கு எதிரான உறுதிமொழி: காவல் ஆய்வாளர் அறிவுரை



**தேவகோட்டை, ஜூலை 02-**

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில் தேவகோட்டை நகர் காவல் ஆய்வாளர் முன்னிலையில் மாணவர்கள் போதை பழக்கத்திற்கு எதிரான உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

ஆசிரியை முத்துலெட்சுமி வரவேற்றார். பள்ளி தலைமை ஆசிரியர் லெ .சொக்கலிங்கம் தலைமை தாங்கினார். தேவகோட்டை போக்குவரத்து காவல் சார்பு ஆய்வாளர் கலா முன்னிலை வகித்தார். தேவகோட்டை நகர் காவல் ஆய்வாளர் பெரியார் முன்னிலையில் மாணவர்கள் போதை பழக்கத்திற்கு எதிரான உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

போதை குறித்த விழிப்புணர்வினை மாணவர்களுக்கு இன்ஸ்பெக்டர் விளக்கி கூறுகையில் , போதை பொருள் விழிப்புணர்வு நம் மாநிலத்தின் தரம் உயர்வாக உள்ளது. ஆனால் பிற மாநிலத்தவர் அதிகமாக நம் மாநிலத்தில் வசிக்கின்றனர். பிற மாநிலத்தவர்களில் சிலருக்கு பாக்கு, புகையிலை பழக்கம் அதிகமாக உள்ளது. பிற மாநிலத்தில் சிறு குழந்தைகளுக்கும் சிறு வயதிலேயே இந்த பழக்கத்தை பழக்கி விடுவார்கள். மது அருந்துவது மட்டுமல்ல, குழந்தைகள் சாப்பிடும் சாக்லேட்டில் கூட போதை மருந்து கலக்கிறார்கள். தெரியாத நபர் எவரேனும் சாக்லேட் கொடுத்தால் குழந்தைகள் வாங்கி சாப்பிடக்கூடாது.

குழந்தைகள் பெற்றோர் சொல்வதை கண்டிப்பாக கேட்க வேண்டும். ஆசிரியர் சொல்வதையும் கேட்க வேண்டும். நமது பள்ளிக்கு அருகில் கடைகளில் போதை பொருள் விற்றால் நாம் புகார் தெரிவிக்கலாம். 19 வயது வரை மாணவர்கள் கவனமாக இருக்கவேண்டும். எதற்கும் அடிமையாக கூடாது. பள்ளி கல்லூரி மாணவர்களை தான் குறி வைக்கின்றனர். மாணவர்கள் பைக் ஓட்டினால் பெற்றோர்களுக்கு 10 ஆயிரம் அபராதம் , ஆறு மாதம் சிறை தண்டனை. அப்பா, அம்மாவுடன் மட்டும் தான் குழந்தைகள் வெளியே செல்ல வேண்டும். இவ்வாறு பேசினார்.

ஆசிரியர் ஸ்ரீதர் இதற்கான ஏற்பாடுகளை செய்து இருந்தார். ஆசிரியை முத்துமீனாள் நன்றி கூறினார்.



● சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நேற்று நடைபெற்ற "நான் முதல்வன்" மூன்றாண்டு வெற்றி விழா மற்றும் "வெற்றி நிச்சயம்" திட்ட தொடக்க விழாவில், மாணவர்களின் புதிய கண்டுபிடிப்புகள், கண்டறிதல்கள் மற்றும் புதிய தொழில்நுட்ப உருவாக்கங்களை பிரதிபலிக்கும் "நான் முதல்வன் நிரல் திருவிழா" வெற்றியாளர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் சான்றிதழ்களை வழங்கினார். உடன் துணை முதல்வர் உதயநிதி, அமைச்சர் பி.கே.சேகர்பாபு, கூடுதல் தலைமைச்செயலாளர் பிரதீப்யாதவ், உயர்கல்வித்துறை செயலாளர் பொ.சங்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. உறுப்பினர் சேர்க்கைக்கான
# ‘ஓரணியில் தமிழ்நாடு’ இயக்கத்தை துவக்கி வைத்தார் முதல்வர் ஸ்டாலின்

சென்னை, ஜூலை 02-

தி.மு.க. உறுப்பினர் சேர்க்கைக்கான ‘ஓரணியில் தமிழ்நாடு’ இயக்கத்தை முதல்வர் ஸ்டாலின் துவக்கி வைத்தார். நாளை முதல் அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள், தி.மு.க.வினர் வீடு வீடாகச்சென்று மக்களை சந்திக்கின்றனர்.

திருப்புவனம் கோவில் காவலர் உயிரிழந்த விவகாரத்தில் தகவல் கிடைத்தவுடன் நடவடிக்கை எடுத்து விட்டோம். கைது நடவடிக்கை எடுத்திருக்கிறோம். இன்று கூட (நேற்று) மேலதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்று முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

சென்னையில் தி.மு.க. உறுப்பினர் சேர்க்கைக்கான ‘ஓரணியில் தமிழ்நாடு’ இயக்கத்தை அக்கட்சியின் தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் நேற்று (ஜூலை 1) தொடங்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவர், “இன்று (நேற்று) முதல் 45 நாட்கள் ‘ஓரணியில் தமிழ்நாடு’ முன்னெடுப்பு நடைபெறவுள்ளது. இன்று ‘ஓரணியில் தமிழ்நாடு’ என்ற தலைப்பில் பொதுக்கூட்டங்கள் நடைபெறவுள்ளன. தமிழ்நாடு முழுவதும், ஜூலை 3ம் தேதி முதல், அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள், தி.மு.க.வினர் ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் வீடு வீடாக சென்று மக்களை சந்திக்க உள்ளனர்.

தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காக்க மக்களை ஒன்றுதிரட்டுவதே இந்த ‘ஓரணியில் தமிழ்நாடு’ இயக்கத்தின் நோக்கம். தமிழ்நாட்டுக்கு தொடர்ந்து இழைக்கப்படும் அநீதிகளை எதிர்த்துப் போராட வேண்டும் என்பதற்காகவே, இந்த முயற்சி மேற்கொள்ளப்படுகிறது என்றார்.

அப்போது மடப்புரம் கோவில் காவலர் உயிரிழப்பு தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பதிலளித்த முதல்வர் ஸ்டாலின், “திருப்புவனம் கோவில் காவலர் உயிரிழந்த விவகாரத்தில் தகவல் கிடைத்தவுடன் நடவடிக்கை எடுத்து விட்டோம். கைது நடவடிக்கை எடுத்திருக்கிறோம். இன்று கூட (நேற்று) மேலதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறோம்” என்று முதல்வர் ஸ்டாலின் கூறினார்.


● சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று "ஓரணியில் தமிழ்நாடு" மாபெரும் கழக உறுப்பினர் சேர்க்கை திட்டத்தை தொடங்கி வைத்து செய்தியாளர்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் சந்தித்தார். உடன் பொருளாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான டி.ஆர்.பாலு, இளைஞர் அணி செயலாளரும், துணை முதல்வருமான உதயநிதி, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் தலைமைக்கழக நிர்வாகிகள் உள்ளனர்.

# இ.பி.எஸ். வீட்டிற்கு செல்வீர்களா? முதல்வர் ஸ்டாலின் அளித்த பதில்

சென்னை, ஜூலை 01-

இ.பி.எஸ். வீட்டிற்கு செல்வீர்களா? என்ற கேள்விக்கு முதல்வர் ஸ்டாலின் பதிலளித்துள்ளார்.

திராவிட முன்னேற்ற கழக தலைவரும் முதல்வருமான ஸ்டாலின் நேற்று (ஜூலை 1), ‘ஓரணியில் தமிழ்நாடு’ முன்னெடுப்பைத் தொடக்கி வைத்து, செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின் விவரம்: தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காக்க, மக்கள் அனைவரையும் ஓரணியில் திரட்டுவதுதான் இதன் அடிப்படையும், முதன்மையான நோக்கமும். தமிழ்நாட்டுக்கு தொடர்ந்து இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் ஒருங்கிணைய வேண்டும். அதை எதிர்த்துப் போராட வேண்டும் என்பதற்கான முயற்சிதான் இது. மத்திய பா.ஜ.க. அரசால் நம்முடைய தமிழும் -தமிழ்நாடும் எப்படியெல்லாம் பாதிக்கப்படுகிறது என்று நான் உங்களுக்கு அதிகம் விளக்க தேவையில்லை.

சுருக்கமாக தலைப்பு செய்திகளை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். அரசியல், பண்பாடு, மொழி, பொருளாதாரம் என்று அனைத்து வகையிலும் நமக்கு எதிராகச் செயல்படுகிறார்கள் என்பதற்கு சில எடுத்துக்காட்டுகளை சொல்ல வேண்டும் என்றால், அனைத்திலும் வளர்ந்த தமிழ்நாட்டை, மத்திய அரசு பல்வேறு வழிகளில் புறக்கணிக்கிறது. தமிழ்நாட்டில் இருந்து வசூலிக்கப்படும் வரி, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு தரப்படுவது இல்லை. தமிழ்நாட்டின் நிதி உரிமைகள் ஜி.எஸ்.டி. கொள்கை மூலமாக பறிக்கப்படுகிறது. எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு உரிய நிதி கொடுப்பதில்லை.

தமிழ்நாட்டுக்கான சிறப்புத் திட்டங்கள் இல்லை. பள்ளி கல்விக்கான நிதி மறுக்கப்படுகிறது. மத்திய அரசின் திட்டங்களுக்கும் தமிழ்நாடு அரசுதான் நிதி ஒதுக்கி நிறைவேற்றி வருகிறது. நீட் தேர்வு மூலமாக அடித்தட்டு மாணவர்களின் மருத்துவ கல்விக் கனவு சிதைக்கப்படுகிறது. தேசிய கல்விக்கொள்கை, ஹிந்தித் திணிப்புக் கொள்கையாக மட்டுமே இருக்கிறது. தமிழுக்கு வெறும் 113 கோடியும், சமஸ்கிருதத்திற்கு 2,532 கோடியும் ஒதுக்கி இருக்கிறார்கள்.

தமிழர்களின் வரலாற்று பெருமையை சொல்லும் கீழடி அறிக்கையை திட்டமிட்டு மறைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். இவற்றை எல்லாம் நாம் தொடர்ந்து பேசுவதால், தொகுதி மறுவரையறை என்ற பெயரில், தமிழ்நாட்டின் நாடாளுமன்றத் தொகுதிகள் எண்ணிக்கையை குறைக்க திட்டம் தீட்டுகிறார்கள். இப்படி சொல்லிக் கொண்டே போகலாம்” என்றார்.

செய்தியாளர்கள் கேள்விக்கு பதிலளித்த முதல்வர் ஸ்டாலின்.

கேள்வி: எதிர்க்கட்சி தலைவர் மக்களை சந்திக்கும் பயணத்தை 7-ம் தேதியிலிருந்து தொடங்கப்போகிறார். இந்த பயணத்தை எப்படி பார்க்கிறீர்கள்?

பதில்: அவர் இப்போது தான் மக்களை சந்திக்கப் போகிறார். இப்போதுதான் நாங்கள் எப்போதிலிருந்தோ சந்தித்து கொண்டிருக்கிறோம்.

கேள்வி: எடப்பாடி பழனிசாமி அவர்களின் வீட்டிற்கு செல்வீர்களா ?

பதில்: அது அங்கிருக்கக் கூடிய சூழ்நிலையை பொறுத்திருக்கிறது. பொறுப்பு ஒவ்வொருவரிடமும் ஒப்படைத்திருக்கிறோம். அவர்கள் சூழ்நிலைக்கேற்றவாறு செல்வார்கள். நான் அந்த பகுதியில் இருந்தால் நிச்சயம் செல்வேன்.

கேள்வி: தேர்தலுக்கு இன்னும் 10 மாதங்கள்தான் இருக்கிறது. ஆனால் கூட்டணி கட்சிகள் கூடுதல் இடங்கள் கேட்கத் தொடங்கியிருக்கிறார்கள். இதை தி.மு.க. எப்படி சமாளிக்க போகிறது?

பதில்: தேர்தல் தேதி அறிவித்த பிறகு நாங்கள் உட்கார்ந்து பேசுவோம். அதை சமாளித்து விடுவோம்.


● தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய தலைமை அலுவலகத்தில் நேற்று குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் மறு கட்டுமான திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் அடுக்குமாடி குடியிருப்புகளின் கட்டுமான பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கூடுதல் தலைமைச்செயலாளர் காகர்லா உஷா, மேலாண்மை இயக்குநர் ஸ்ரேயா பி.சிங், இணைச்செயலாளர் கே.எம்.சரயு, வாரிய செயலாளர் நா.காளிதாஸ், தலைமை பொறியாளர்கள் வி.எஸ்.கிருஷ்ணசாமி, சு.லால்பகதூர் கலந்து கொண்டனர்.

# வீடு, வீடாக சென்று பிரசாரம் ஏன்? அமைச்சர் துரைமுருகன் விளக்கம்




சென்னை, ஜூலை 02-

டிரெண்ட் மாறியதால் ஓரணியில் தமிழ்நாடு என்ற பிரசாரம் மூலம் மக்களை வீடு, வீடாக சென்று சந்திக்க உள்ளோம் என்று அமைச்சர் துரைமுருகன் கூறி உள்ளார்.

தி.மு.க., சார்பில் ஓரணியில் தமிழ்நாடு என்ற 45 நாள் பிரசாரத்தை அக்கட்சியின் தலைவரும், முதல்வருமான ஸ்டாலின் நேற்று (ஜூலை 1) சென்னையில் தொடங்கி வைத்தார். அதற்கான வீடியோவை அவர் வெளியிட்டார்.

தொலைக்காட்சி வழியாக வேலூரில் இருந்தபடி பிரசாரம் தொடக்க விழாவை அமைச்சர் துரைமுருகன் பார்த்தார். பின்னர், பிரசாரத்தை தொடங்கி வைத்த அவர், நிருபர்களிடம் பேசுகையில் கூறியதாவது; ஓரணியில் தமிழ்நாடு என்ற புதிய சித்தாந்தத்தை முதல்வர் அறிவித்து இருக்கிறார். முதலில், பிரிந்திருக்கின்ற அல்லது ஒத்த கருத்துடையவர்கள் யார், யார் இருக்கிறார்களோ அவர்களை எல்லாம் சந்தித்து கொள்கை விளக்கங்களை தெரிவித்து இந்த அணியிலே சேர்க்க வேண்டும் என்பது இந்த தத்துவத்தின் முதல் பாகம்.

ஒவ்வொரு குடும்பத்திலும் பிரசாரங்கள் இன்று மாறி போயிருக்கிறது. கொஞ்ச காலம் முன்பு ஒரு பொதுக்கூட்டத்தை 3 மணி நேரம் ரசிப்பார்கள். ஆனால் இன்றைக்கு அந்த மாதிரி டிரெண்ட் கிடையாது. எதையும் டி.வி.யில் பார்த்துவிட்டு போய்விடலாம் என்ற நிலை இருக்கிறது.

நேரிடையாக அந்தந்த குடும்பங்களை சந்தித்து, இந்த ஆட்சியின் நிலைமை, இந்த ஆட்சி 4 ஆண்டுகாலங்களில் என்னென்ன செய்திருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லி, எங்களின் ஆட்சியை கவிழ்க்க வேண்டும் என்பதற்காக அல்லது வருகிற தேர்தலில் தோற்கடிக்க வேண்டும் என்பதற்காக என்னென்ன வழிமுறைகளை எல்லாம் மாற்றுக் கட்சியினர் ஆதரிக்கின்றனர் என்பதை தனித்தனியாக எடுத்துச் சொல்ல வேண்டும்.

இவ்வாறு துரைமுருகன் பேசினார்.

# வெற்றி நிச்சயம் திட்டத்தை...

(1-ம் பக்க தொடர்ச்சி)

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மூலமாக வழங்கப்படும்! இந்த திட்டத்தில் சேர - ‘ஸ்கில் வாலட்’ என்ற செயலியை உருவாக்கியிருக்கிறோம். இந்த ஆப்-இல், எந்த கம்பெனியில் வேலை வாய்ப்பு இருக்கிறது? அதற்கு என்ன பயிற்சி என்று எல்லா தகவல்களும் இருக்கும்.

இப்படி, தமிழ்நாட்டையே உயர்த்தும் உன்னதமான திட்டமாக இருக்கின்ற காரணத்தினால், ‘நான் முதல்வன் திட்டம்’ என் நெஞ்சுக்கு நெருக்கமான திட்டமாக இருக்கிறது. இன்றைக்கு (நேற்று) பணி நியமனம் பெற்றுள்ள மாணவர்களுக்கும் - நமக்கு துணை நிற்கும் தொழில் நிறுவனங்களுக்கும் - மாணவர்களான உங்களுக்கும் - ஆசிரியர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மாணவர்களான நீங்கள் வளர வேண்டும்; வளர்த்தெடுக்க வேண்டும் என்றுதான் ஏராளமான திட்டங்களை நாங்கள் இன்றைக்கு செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

ஒவ்வொரு குழந்தைகள் வெற்றிபெறும் போதும் தந்தை போல் மகிழ்ச்சி அடைகிறேன். எந்த ரிசல்ட் வந்தாலும் நான் முதல்வன் திட்டத்தில் படித்தோர் எத்தனை பேர் வெற்றி என்றுதான் அதிகாரிகளிடம் கேட்பேன். கடந்த 3 ஆண்டுகளில் நான் முதல்வன் திட்டத்தின் மூலம் இதுவரை 3.28 லட்சம் பேர் முன்னணி நிறுவனங்களில் வேலை பெற்றுள்ளனர். யு.பி.எஸ்.சி. தேர்வில் வெற்றி பெற்ற 57 போட்டித் தேர்வர்களில் 50 பேர் நான் முதல்வன் திட்டத்தில் பயிற்சி பெற்றவர்கள். தமிழ்நாட்டை அடுத்தகட்ட வளர்ச்சிக்கு கொண்டு செல்லும் வகையில் மாணவர்கள் தயாராகி விட்டனர்.

கல்லூரி மாணவர்களுக்கு இந்தாண்டு முதல் லேப்டாப் வழங்க இருக்கிறோம். நான் உங்களிடம் கேட்டுக்கொள்வது, கல்வியை இறுகப்பற்றிக் கொள்ளுங்கள்; உங்களுக்கு சப்போர்ட் செய்ய நான் இருக்கிறேன்! நம்முடைய திராவிட மாடல் அரசு இருக்கிறது. நாங்கள் உருவாக்கி தரக்கூடிய வாய்ப்புகள் எல்லாவற்றையும் நீங்கள் பயன்படுத்தி, நான் முதல்வன் திட்டம் மூலமாக இன்னும் பல முதல்வர்கள் உருவாகவேண்டும். உங்கள் வெற்றியை பார்த்து, உங்களைப் பெற்றவர்கள் எவ்வளவு மகிழ்ச்சியும், பெருமையும் அடைவார்களோ, அதே அளவு மகிழ்ச்சியையும், பெருமையையும் நானும் அடைகிறேன் என்றார்.

# இளைஞர் குடும்பத்தாரிடம் முதல்வர் ஸ்டாலின் ஆறுதல்

சென்னை, ஜூலை 02-

திருப்புவனம் இளைஞருக்கு நடந்த கொடுமை நியாயப்படுத்த முடியாத தவறு என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தொலைபேசி மூலம் இளைஞர் குடும்பத்தாரிடம் ஆறுதல் தெரிவித்தார்.

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே விசாரணைக்காக அழைத்து சென்ற இளைஞர் அஜித்குமார் போலீஸ் விசாரணையில் உயிரிழந்த சம்பவம் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. தமிழ்நாடு காவல் துறைக்கு பெரும் களங்கத்தையும் உண்டாக்கியிருக்கிறது. .இந்தநிலையில், விசாரணையில் உயிரிழந்த இளைஞர் அஜித்குமார் குடும்பத்தாரிடம் நேற்று முதல்வர் மு.க. ஸ்டாலின் தொலைபேசி வழியாக தொடர்புகொண்டு ஆறுதல் தெரிவித்தார்.

அப்போது அமைச்சர் பெரியகருப்பன் அஜித்குமார் வீட்டில் உடனிருந்தார்.இந்த தொலைபேசி உரையாடலின் போது, அஜித்குமாரின் குடும்பத்திடம் ஆழ்ந்த இரங்கலை முதல்வர் முக ஸ்டாலின் தெரிவித்தார். முதல்வர் தொலைபேசி வாயிலாக உரையாடிய பதிவுகள் தற்போது வெளியிடப்பட்டுள்ளது. முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியதாவது: திருப்புவனம் இளைஞருக்கு நடந்த கொடுமை நியாயப்படுத்த முடியாத தவறு. இளைஞருக்கு நடந்த கொடுமை இனி யாருக்கும் நடக்க கூடாது.

கடமை தவறி குற்றம் இழைத்தவர்களுக்கு நிச்சயம் இந்த அரசு உரிய தண்டனை பெற்று தரும்" என்று கூறினார்.

# நான் முதல்வன் திட்டம்: ஊக்கத்தொகை பெறுவதற்கான கால அவகாசம் நீட்டிப்பு

சென்னை, ஜூலை 02-

யு.பி.எஸ்.சி. மெயின்ஸ் தேர்வுக்கான ரூ. 25 ஆயிரம் உதவித்தொகை பெறுவதற்கான விண்ணப்பம் தொடங்கி உள்ளது. இதற்கான கால அவகாசம் இன்றுடன் முடிவடைய இருந்த நிலையில் தற்போது கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் நான் முதல்வன் திட்டம் மூலம் யு.பி.எஸ்.சி. தேர்விற்கு கட்டணமில்லாமல் உதவித்தொகையுடன் பயிற்சி வழங்கப்படுகிறது. தமிழ்நாடு இளைஞர்கள் மத்திய அரசின் பல்வேறு துறைகளில் இருக்கும் வேலை வாய்ப்புகளை பெறும் வகையில், இந்தப் பிரிவு செயல்படுகிறது. அதாவது, இளைஞர்களுக்கு மத்திய அரசு பணியாளர் தேர்வு ஆணையம் எனப்படும் யு.பி.எஸ்.சி., ரெயில்வே உள்ளிட்ட போட்டித்தேர்வுகளுக்கு கட்டணம் எதுவும் இன்றி பயிற்சி அளிக்கப்படுகிறது.

யு.பி.எஸ்.சி. முதல்நிலைத் தேர்வுக்குத் தயாராவதற்கு ஒவ்வொரு மாணவருக்கும் 10 மாதங்களுக்கு மாதம் ரூ.7,500 வழங்கப்படும். அதேபோல, யு.பி.எஸ்.சி. முதல்நிலை தேர்வில் தேர்ச்சி அடைந்து மெயின்ஸ் தேர்வுக்கு தயாராகும் மாணவர்களுக்கு இத்திட்டத்தின் வாயிலாக 25,000 ரூபாய் நேரடியாக வங்கிக் கணக்கில் செலுத்தப்படுகிறது.

இத்திட்டம் கடந்த 2023-ஆம் ஆண்டு முதல் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த நிலையில், வரும் தேர்விற்கு தேர்வர்களை தயார்படுத்தும் வகையில், யு.பி.எஸ்.சி. மெயின்ஸ் தேர்வுக்கான ரூ. 25 ஆயிரம் உதவித்தொகை பெறுவதற்கான விண்ணப்பம் தொடங்கி உள்ளது. இதற்கான கால அவகாசம் இன்றுடன் முடிவடைய இருந்த நிலையில் தற்போது கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது. நான் முதல்வன் திட்டம் கீழ் உத்வித்தொகை பெற விரும்பும் விண்ணப்பதாரர்கள் வரும் 13 ஆம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


● மதுரை மாநகராட்சியில் வணிக நிறுவனங்களுக்கு குறைவான வரியை மதிப்பீடு செய்து வரி மோசடியில் ஈடுபட்ட உரிய நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. மதுரை மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயனிடம் நேரில் சென்று புகார் மனு அளித்தார். அருகில் அ.தி.மு.க. நிர்வாகிகள், மாமன்ற எதிர்கட்சி தலைவர் சோலைராஜா மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உடனிருந்தனர்.